பிஸ்மில்லாஹி.

திருப்புகழ்.

இஃது

காயற்பட்டணம்

வரகவி நாயகம்

காசிம் புலவரவர்களியற்றியது

ஷை புலவரவர்களின் பௌத்திரராகிய

புலவர்

முகம்மதப்துர் றகுமான்லெப்பை

ஆலிமவர்கள்

நன்முயற்சியால்

சென்னை:

கலாரத்நாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பெற்றது.

ஹிஜ்ரி 1332-றபீயுல் ஆகிறுமீ.

1914.

பிழை திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
3	23	செனித்	செய்வித்
ஷை	25	செய்வித்	செனித்
4	24	கவையி	கெளிதி
9	1	தனதன	தனதனத்
ஷை	2	தனதன	தனதனத்
ஷை	3	தனதன	தனதனத்
16	5	குயிர்	குபிர்
18	19	கொடியனை	கெடுவனை
41	2	தநது	தந்து
53	9	புட்மா	புட்பமா
60	10	லிரத	லிந்த
ஷை	27	ருஉ	கூஉ
64	10	மேடைக்க	மேகடைக்க
71	16	வாற்றி	வற்றி
77	1	வெனி	வெளி
ஷை	2	முரு	முழு
83	14	மணிபூச	மணியூச
86	22	புரவிடை	புரவிஙட
88	19	செக்தின	செககின
89	15	மாமாத	மூரமாத
93	13	மெத்தளை	மெத்தனை
107	9	விண்டேயுழை	விண்டேயழை
ஷை	ஷை	தகுள்வீ	தருள்வீரே.
128	15	மூட்ட	முட்ட

பிஸ்மில்லர்ஹி:

திருப்புகழ்.

முதற்குறிப்பகராதி.

முதற்குறிப்பகராதி.

இப்புத்தகம் முதலியன வேண்டுபவர்கள் அடியிற் கண்ட விலாசங்களுக்கெழுதி பெற்றுக்கொள்ளலாம்:—

ம. கு. செ. இபுறுகீம்.

211, அங்கப்பநாய்க்கன்தெரு, மதிருஸ்.

மகுதூம்தெரு, காயற்பட்டணம்.

பிஸ்மில்லாஹி.

சிறப்புப்பாயிரம்.

நிலமண்டிலவாசிரியப்பா.

1. திருவொளி மகத்தா லருவுரு வாதி
யிருவகைத் திணையோ டியாவையும் படைத்து
2. முத்தொழில் புரியும் முதற்பொரு ளாகி
பத்தர்க ளுளத்திற் பதிந்தும் பதியாக்
3. கருத்தனுய் திவ்ய கருணு கரனு
யொருத்தனுய்க் காக்கு மொருபெரும் பொருளா
4. யாதியு நடுவு மந்தமு மிலாத
வேதமெய்ப் பொருளாய் விளங்கிய சோதி
5. தன்னருள் சுரந்து சமயசற் குருவா
யின்னிலம் விடுத்த விகபரக் களஞ்சியம்
6. நற்குண மினிமை நானிலந் தாங்கும்
சற்குண சகாயச் சலதரக் குடைய
7. ரிம்மை மயக்கா லிடையுந் தங்க
ளும்மத் தவரை யுவந்தீ டேற்றுங்
8. கருணையங் கடலாய் காத்திம் நபியா
யிருநிலங் காக்கு மிறசூல் வேத
9. வறிவு மமலு மகலா தைந்து
பொறிமல மழித்த புனிதர் மேவுங்

10. திருப்பதி காஹிர் திலதமென்ன
வுருப்பெற் றறிவி னொழுக்கத் தமர்ந்து
11. தாசீன் நபியின் றரிசன மகலா
காசி மெனும்பேர் கதிக்கும் வள்ள
12. லொப்பற்ற வேத வுண்மைப் பொருளைத்
தப்பறத் தெழிந்து தனிநிலை பூண்டு
13. மறைகாட் டறிவு மாதவ நெறியுந்
துறைகாட்டு வண்ணம் துலங்கப் பெற்று
14. தவப்பே றுகும் தாஹா நபியி
னுவப்பே பொருளென வுளத்திற் கொண்டு
15. அகர முதலவ னருமைத் தூதர்
பகரு மென்ற பதமே முதலாய்க்
16. கனியுந் தேனுங் கடுப்பத் திரட்டி
யினியநன் மொழியு மிலக்கண மலிவு
17. முதுமை நடையு மோக்ஷ வழியு
மிதுபா லுளதென் றெவரு மிசைப்பத்
18. திருப்புக ழென்ற தெழிந்த மதுரக்
குருப்புக ழொன்றைக் கோர்த்தன ரதனைப்
19. பற்பல விடுத்தம் பதிப்பித் துளதிற்
சொற்பொருள் பலவும் சோர்வுற் றிருப்பக்
20. கண்ணுற் றதனைக் களையற் கான
வெண்ணப் பெருக்கா லியன்ற வரையும்
21. முந்தப் பதித்த முறையே திருத்திச்
சந்தக் குழிப்புந் தனித்தனி யமைத்து.

22. எடுத்தவ ரெவரு மெழிதிற் றெரிந்து
படித்தக மகிழப் பதிப்பித் தருளென
23. காசிம் புலவர் கான்முறை யாக
மாசீர் பெருக வந்த மகிப
24. னருந்துணை நேச மகலா தமரும்
பெருந்தன முண்டயப் பிரீதி யுடையோன்
25. வேதப் பரீட்சை வித்தக னெவர்க்கு
நீதப்ர சங்க நிபுன னிராசத
26. மகமலி முகம்ம தப்துர் றகுமான்
மிகமன முவந்த விருப்பத் தொழுகு
27. மத்தனே தகமை யறிவில னெனினும்
முத்திரை தரித்த முஹம்மத ரருளு
28. நற்றவ முஹ்யித்தீன் நாகூர் நாயகம்
கற்றறி மாந்தர் கருணையும் வேண்டி
29. நயம்புக ழின்னிசை நாகையந் தாதி
பயந்தரு வண்ணம் பதிப்பித் தருளினன்
30. தழலுறுங் கிடங்கைத் தண்பெறச் செய்த
வெழில்நபி நாம மிலங்கு மித்தகை
31. மூதறி வாளர் முதிர்புகழ் தன்னை
யோதுவர் கேட்ப ருளமுறும் படியே
32. யருவுரு வன்றி யாமு மிறையோன்
கிருபையை வேண்டி கெஞ்சு மடியனே.

முற்றிற்று.

ம. கு. சே.

பிஸ்மில்லாஹி.

திருப்புகழ்.

காப்பு.

விருத்தம்

பார்பெறுந் தண்டாச் செல்வப் பயன்றருங் கல்வி யுண்டா
மேர்பெறுஞ் சுவனத் துய்க்கு மின்பவீ டெய்து மற்றுங்
கார்பெறுஞ் செங்கை யெங்கள் கபீபிற சூலுல் லாமேற்
சீர்பெறுந் தமிழாற் சொன்ன திருப்புகழ் கூறு வோர்க்கே.

கலித்துறை

நெருப்புகழ் கும்பிக் கிரையாஞ் சமையிக ணேமநிட்டைக்
கருப்புகழ்கேட்கவும்வேண்டுங்கொல்லோகனகாம்புயத்தாற்
பொருப்புகள்சாய்க்குமுகம்மதுல்லாதமைப்போற்றிசெய்யுந்
திருப்புகழ் கேட்டபின் றீனோர்க டங்க டிருச்செவியே.

தனன தனதன தனதனதனதன
தனன தனதனதன தனதன தன
தனன தனதன தனதனதனதன—தனதான.

பகரு முருவிழி யருவிழி வெருவிழி
சிறிது மொருதலே பயிலிழி துயிலிழி
பருவி னுணவிழி துணையிழி யிணையிழி விரிவான

பழைய சதுமறை முழுவது முணர்பவர்
பசிய தமிழ்வலர் துறவல ரெவருமெய்
பரவ வரிதரி தொருபொரு டிருவுள வருளாலே

மக்ர மெறிபொறி மறிகட லுறைபவர்
கலப மரகத மயில்வடி வுடையவர்
மறுவி றரளவெண் மணியென வமைபவ ரிறைதூதாய்
மனித வடிவினில் வருதிரு நபியென
வலிய பகலினு மிரவினு மனதினின்
மவுன முறவும திருசர ணுருதின மறவேனோ
திகிரி வரையுடல் குழைதர வெழிறரு
சுவடு படவடி யிடுசுய குணதர
திரைசெய் கடல்படு படிமிசை யடிநிழ றெரியாதே
திருவி னடைபயில் சததள பதயுக
வடவிபகவதன் வழிபுகு மதிஜய
திவலை மழைமுகி லிடைவரு புரவல ரிமையோரு
மகில புவனமு மளவிட வரியவ
வளவு குறியவ வளவினு நெடியவ
வளவி லறுசள வளவினு மளவிய மகுடேசா
வறுவகை சமயி கடிமிர தினகர
குறைசி குலதில கமதின நகர்தனி
லரசு புரியுமஹ் மதுமுகம் மதுநபி யிறசூலே. (க)
அகர முதலவ னருள்பணி விடைதனின்
முழுது மதியொரு செயலிலி முயலிலி
யமிர்த குணமிலி பொறையிலி நிறையிலி பெரியோர்க
ளடியின் மிசைமுடி பணிவிலி துணிவிலி
திருட னிடல்பிலி நலனிலி பெலனிலி
யறவு மனதினி னருளிலி பொருளிலி பரிபூர்ண

சகல கலைதெரி மதியிலி கெதியிலி
தினையி னளவினு மறனிலி திறனிலி
சறகு நெறிபுகு மிதமிலி பதமிலி யழகான

தருண புழகித பரிமள சததள
வனச மலரடி யபையம பையமிது
சமைய மிதுசல சமையநி னருளினி யருள்வாயே

ககன வெளிமுக டிடிவன முடிவன
நெடிய குலகிரி யதிர்வன பிதிர்வன
கதறி யலைகடல் வறிதுசு வறுவன விடையேறு

கமட முதுகுடல் குழிவன கிழிவன
வகில புவனமு மழிவன வொழிவன
கடிய விருணர கழல்வன சுழல்வன நெடிதாழி

விகுதி படவரு சடையுக முடிவினி
லனைய பலபல வுயிர்களு மதுசறு
வெளியி னணிபணி நிலைபட நிறுவிய வுயிர்யாவும்

விதன மதுசெயு மளவொரு பொருண்முன
முடிகி யினியத மடியவர் படுதுயர்
விலகி யவர்பர கதிபெற வுதவிசெ யிறசூலே. (உ)

தனனதன தனனதன தானந் தனத்ததன
தனனதன தனனதன தானந் தனத்ததன
தனனதன தனனதன தானந் தனத்ததன—தனதான.

அலரிமிசை தம்முதிரு நாமம் பதித்தவரு மொரு
பொழுது பகலிருள வேகஞ் செனித்தவரு மணிபுயவொளி
மைமண மேவும் புயத்தினரு மிமையோர்வா

னருசினுரு புலிபினவ தாரஞ் செய்வித்தவரும் வரபதி
யின் மடியின்விளை யாடுந் திறத்தினரு மபுசகல்பொன் முடி
பகவிலாலன்றடித்தவரு மலைசூழும்

உலகுதனி லுமதுகலி மாவிண் டுமெக்குரிய மறையின
றை மதுவமுத சாரம் பழுத்தொழுகு முபநிடத மொழி
தொடர்சு லோபந் தரித்தனைய பெரியோர்க
ளுவகையொடு பணியுமிரு பாதம் பிடித்தடிமை பர
கதியி னடையவபி மானஞ் செலுத்துவர முதவியருள் புரி
யவொரு நாள்வந் தனுக்கிரக மருள்வீரே
விலைகொளமு தனையமது பானங் குடித்தொருவன் வெ
றிகொடுயி ரனையமுது தாய்கண் கெடுப்பவவள் விதறியு
ம தடியினநி யாயஞ் சொலிப்புகலு மளவேதான்
விரைவின்மரு டெளியமுன மேசென் றடித்தகர
ட்டிதுகொலென வடிகருவி யாலன் றறுப்பவனை விழியொரு
கண் மகவொருகை ஈனம் பொருத்துவர முடையோரே
சலசமுகை கிழியவரு கால்வண் டுழப்பவளி நறவரு
வி கடவுணதி-நீரென் றுவட்டவளர் சடைகள்பிணி முட
வியநென் மூடெங் குமுத்துகவெண் ணிலவாலே
சலிலமலர் குமுதநறு நீலங் கறித்தெருமை முலைமு
றுகி யொழுகிவிடு பாலுண் டனப்பெடைகள் சலசரமொய்
பழனமதி ளுமண் டலத்துறையு மிற்சூலே (௫)

தனதனத் தனதனத் தனதனத் தனதனத்
தனதனத் தனதனத் தனதனத் தனதனத்
தனதனத் தனதனத் தனதனத் தனதனத் — தனதான.

ஒருவருக் கருமுடற் கடுவிடப் பிணிதணித் தொரு
வருக் கிருபொருட் பெருகுகச் சடமமைத் தொருவருக்
கவையினிற் பெறுவொலித் தனமளித் தருளோடு

மொருவருக் கடுகொலைப் பகைதொலைத் திசைபடைத்
தொருவருக் கறிவினிற் சகலவித் தகம்வகுத் தொருவருக்
கவையினிற் ஜலமலத் திடர்துடைத் திகலூழி

யெரியழற் குழியைவிட் டொருவரைச் சுவனம்வைத்
தெறிதிரைக் கடலின்மற் றொருவரைக் கரையினுய்த்
தெமன்வினைத் துயரொழித் தொருவருக் குயிர்கொடுத்
தருள்காதி

றெனுமியற் பெயருடைக் குறிசினித் தமுவமுத் தியக
றைச் சததளத் திருமலர்ப் பதயுகத் தெனையிலக் கெனவரு
ட் பணிவிடைத் தொழில்செயற் கருள்வீரே

சரிதையிற் கிரிகையிற் பொறுமையிற் கிருபையிற்
றனிமையிற் பழமையிற் புதுமையிற் றொழுகையிற் றலைமை
யிற் புலமையிற் சுருதியிற் சுறகினிற் றெளிவான

தகைமையிற் குடிமையிற் கொடையினிற் புகழி
னிற் பொருளினிற் றெருளினிற் குறைசிகற் கிளையினிற்
சகலசற் சமையசற் குருவினிற் பெரியகற் பகவாழ்வே

யருணனற் பவளவிற் கொடிவிரித் திளவெயிற் பருதி
யிற் படர்சுடர்க் கிரணம்விட் டொழுகுபுத் தமுதெனப் படு
கடற் றிருவயிற் றவதரித் தவதார

மடையமுப் புவனமப் புறமுமற் புதம்விழைத் தொரு
வன்முத் திரைதரித் தொருவன்முத் தியையுயிர்த் தருளு
முத் தெனவுதித் தமையுமுத் தமவிளக் கிறசூலே. (ச)

தனதன தனதன தாந்ததானன
தனதன தனதன தாந்ததானன
தனதன தனதன தாந்ததானன — தனதான.

விடுமலர் தொடையொடு வேய்ந்து காரகி னறைகமழ்
விரிபுகை தோய்ந்து மாமயில் விதுவும திலெழுதி வாய்ந்த
சிதள மிகுநாள

மிர்கமத பரிமள பூம்ப னீரெறி தயிலமி டுபுழுகு சேர்ந்த
ளாவிய விரைசெறி குழலியர் சேர்ந்த சிறடி தொழுதேவு

மடிபணிவிடைசெய மூண்ட நேசனை விகடனை யசடனைவீ
ண்பொய் பேசிய வருதனையறவிழு மாந்த மூடனை விழலான

பணிவழு நழுகலை யீங்கிச வூழலை யவுசலை நரகிடை
வீழ்ந்தி டாதெனை யருளொடுநின துகை தாங்கி யாள்வது
மொருநாளே

உடல்வளை சிறுபிறை போன்ற கோடுமும் மதமழை
பொழியும்வெ ளாம்பன் மீதினி னுமையம தியமிரு பாங்கி
னூடெழ நடுவேயோ

ருதைய பருதிதனி தோன்றல் போலிரு மகளிரொ
டுபவனி போந்து தேவர்பொ னுலகின்வ துவைபுரி யாண்ட
நாயக மணவாளா

கடையர்ம களிர்செவ் வாம்பல் வாய்முகை தருகுர வை
யின்வெடி பாய்ந்து வாளைகள் கதலிவ னமடவி பூந்தே
னுமிழ் கனியோடே

கமுகுமி டறொடிய வோங்குமாபல் வினியப ழமிடறி
மீண்டு நீர்பயின் கழனிது யின்மதின வேந்தர் கோனபி
யிறகுலே. (ரு)

தன்னதன தானதந்த தனனதன தானதந்த
தனனதன தானதந்த—தனதான.

பழையபெரி யோர்பகர்ந்த் வரியதச மாநிகண்டு பலக ருவி நூலு ணர்ந்து தமிழ்மாலை
பரணிமடல் கோவை சந்தம் விறலிவிடு தூது சிந்து பனுவல்வகை பாடி வண்டர் தலைவாசல்
வழிகுழிய வோட டந்து தினமும்வறி தேதி ரிந்து வறுமைபெரி தாகி நெஞ்ச முழலாதே
வழுவியறன் மாய வஞ்ச மொழுகுவினை யோட டந்து வனசமுக ழ் பாத மென்று பெறுவேனோ
வெழுதரிய சோதி யின்ப வடிவினிழ னேமி யின்க ணிருசுவ டுறு தபண்டி னமரேசா
யிரவிமலை மீதி னின்று புலியின்மிசை யேறி வந்திவ் விருநிலவ ளாக முந்து புகழாளா
வுழு துவரி நீல வண்டு மழலைஞிமி றூத விண்ட வொளிர்மரவ மாலை தங்கு திருமார்பா
வுலவுமதி சூலு ழைந்த புயல்பருதி யேத வழ்ந்த வுகுதுமலை மீதி னின்ற விறசூலே. (ரு)

தனனதனதன் தனதன தனதன
தனனதனதன தனதன தனதன
தனன தனதன தனதன தனதன—தனதான

கலச நிகர்முலை முகையினு நகையினுந் திலத நறுநுத லணியினு மணியினுங் கனக தமருக விடையினு நடையினும் விலைமாதர்

கலக மிடுகயல் விழியினு மொழியினுந் தமியனென
துடல் பதறினும் விதறினுங் கருதிய வரிதழ் பருகினு முருகினு மொழியாதுர்

பலரு நசைவசை புகழினு மிகழினுஞ் சுகமதிதமதி லடையினு மிடையினும் பரிவி னுளமது தெருளினுமருளினு மழியாத

பரமபரகதி மருவினு மொருவினுங் கொடிய நரகழல் சுழலினு முழலினும் பரவி நினதடி கனவினு நினைவினு மறவேனே

சலதி யலைபுனல் புலரினு முலரினும் புடவி யெழுநிலை குலையினு முலையினுஞ் சயில வரைபுடை பெயரினு மயரினு மறிஞோர்கள்

சறகி னெறிமுறை பிறழினு முறழினும் பலகை வரிமுறை பிசகினு மசகினுஞ் சரத மொழிபுகல் புவியினி னபியென வருவோரே

குலவு தடமலர் நடுவினு மடுவினுங் கரையின் மதகுயர் புடையினு மடையினுங் குருகு திரிதரு வயலினு மயலினு மகலாதே

குறுகி யினவளை யமிழ்தென வுமிழ்தரு தரள மணியிள நிலவெழு பலவளங் குடிகொ ணகரினு மிகுபுகழ் மதினவெம் மிறசூலே. (எ)

தந்தனந் தனதனத் தனதன
தந்தனந் தனதனத் தனதன
தந்தனந் தனதனத் தனதன—தனதான்

சண்டவெங் குளறிடிக் கிணையெனத் தொண்டவிண் டதிர்குரற் கொடுவினைத் தண்டமுங் கையிலெடுத் தகன் முழைப் பகுவாய்நீ
டந்தமென் றிகழ்கறித் திருசுழற் கண்களுந் தெறிதழற் பொறியுகத் தண்டிமுன் சறுமணற் குழியடர்த் தெனையாவி

பண்டகன் றதைமறுத் துடல்விடுத் தண்டமண் டலமுமொக் கதிர்தரப் பஞ்சுபஞ் செனவடித் துடறுகழ்ப் பொடியாய்மா
பங்கம்வந் துறுமுதற் றமியெனுக் கஞ்சலென் றருளியப் பொழுதினிற் பங்கசந் தருமலர்ச் சரணளித் தெனையாளாய்

துண்டவெண் பிறைமுகத் தழலினிற் புண்படுங் குருதிகொட் டயிறலைத் துஞ்சுவன் கொலைபழுத் தொழுகுநெட் டடலூடே
துன்றுவெண் குடர்சுவைத் துயிர்குடித் துண்டுவெங் குபிர்தொலைத் தடுகணைத் துங்கவெஞ் சிலைபிடித் துழல்வர்மற் றவரோடே

கொண்டல்வந் தளிகிழற் குடையிடச் சென்றுவெஞ் சுரமதிற் படுசுழிக் குண்டகந் தெறிதிரைக் கடலெனப் புதுநீராற்

கொங்குபைங் குமுதமைக் குவளைசெய்க் கஞ்சமுஞ் செறிதரக் கையின்விரற் கொண்டுதண் புனலழைத் திடுமகத் திறருளே. (அ)

தனதனதத்தத் தனத்ததானன
தனதனதத்தத் தனத்ததானன
தனதனதத்தத் தனத்ததானன — தனதான.

அறநிலை தப்பிப் பிழைத்த பாவிகள் பொருளற வெற்றிப் பறித்தவேசிக ளயில்விழி யிட்டுப் பகட்டு ரூபிகள் வெகுமாய

மடையவ ழக்கிக் கெடுத்த நீலிகள் வலியவ ழைத்துப் படுக்கு மோகிக ளவசம்வி ளைத்துப் பசப்பு மாரிக ளுறவாமோ

மறிதிரை சுற்றிக் கிடக்கு மாநில நலதொழில் கற்றுப் பிழைக்க வேறொரு வகையுமெ னக்குப் புலப்ப டாதமை யதனாலே

வலுகவ லைப்பட் டிருக்கு மேழையை விதுசமை யத்திற் புரக்க வேதிரு மனமுரு கிச்சற் றிரக்க மாயருள் புரிவீரே

பொறியுட னெட்டைக் கவட்டு நாவெழு கறைமுளை யிற்றுப் பணிப்ப ரூஉமணி பொலிகுல ரத்னத் - தொகைப்ப ணுடைவி முடிமீதே

பொறைவளர் சக்ரப் பொருப்பு நீள்புவி மதிபொரு மொற்றைக் குடைக்குளே தனி பொதுவர வைத்துப் புரக்கு மாணைகொள் கருணைசா

குறியமுகைக்கட் டவிழ்த்த தாமரை நறிய பொகுட்டைக் கறித்து வாயிடை குவளைகு தட்டிப் புனிற்று மேதிகண் வளர்நீரார்

சூலைகணெ றித்துப் பழுத்த சாலியி னுழறி யடித்துப் பகட்டு வாளைகள் குதிகொளு மக்கப்பதிக்கு வாழ்வுடை யிறசூலே. (கூ)

தனன தனதத்ததான தனன தனதத்ததான
தனன தனதத்ததான—தனதான.

உயிரனைய பெற்ற தாயர் மனைவிதிரு மக்கள்சூழு முறைவின்முறை மற்றி யாரு முடனுண்மை

யுமனறிவு நட்ப ஞான மரியகலை விச்சை வேத முறுமொழிகள் கற்ற யாவு மணிபூணே

டியன்மணிவ ருக்கை மாடை சுரபிவகை மிக்க தேசியிவைமுழுதி முப்ப வாவி பறிபோமுன்

இதையமதி ரக்க மாய்நின் விலையடிமை பைத்த ளாமவிருசரண பத்ம வீடு தரவேணும்

வெயில்விரியி ரத்ன பார மகுடமுளெ யிற்று நாகம்வெகுதவமு ழற்றி நாடி யெதிர்காண

விழவினது சர்ப்பாசை யொடுபல மகிழ்ச்சி கூறும்கரைகொள்பரி சுத்த ரூப வமரேசா

வியன்மருவுபச்சை நீல மொழுகுபொழி னெற்றி யூடுமதுரவமு தூற்று ளூறு மதிசீத

வளர்கனி யழைப்ப வேகை யிலைபொதுளு கொப்ப ரீமுன் வரவுதவு மக்க வாழு மிறசூலே. (ம)

தத்தத்தத் தத்தத் தனதன
தத்தத்தத் தத்தத் தனதன
தத்தத்தத் தத்தத் தனதன—தனதான.

பட்டுக்கச் சிட்டுத் திகள்முலை முத்துக்குச் சுக்கட் டியகுழல் பச்சைப்பொட் டுத்தொட் டணிநுத ல்மழகான

பத்மத்தட் புட்பத் திருமுக நச்சப்புக் கொப்புக் கயல்விழி பத்துத்திக் கொக்கப் பகலுரு வெளியாக

வெட்டுக்கட் டுச்சித் திரமனைக் கச்சுக்கட் டிற்பொற் பணிமிசை யெற்றுப் பொய்க்கட்டுத் தெரிவய ருடனேபோ

யிச்சைக்குட் பட்டுக்க னியிதழ் பட்சித்தெட் டெட்டுக் கலவியி னெய்த்துற் றுக் கற்றிற் றினமன முழல்வேனே

தட்டுப்பட் டுற்பத் தியினுல கச்சுக்கட் டுட்கச் சமையிகடற்கத்திற் றுட்டக் குபிரர்க ளடர்சேனை

தத்திக்கஸ் திப்பட் டடிதர வைப்பிற்கைப் புக்குப் பிடிமண றப்பைச்சித் தித்துப் பொழிமழை யெனவீசி

வட்டக்கற் பட்டப் பகல்வெளி நிற்கத்திட் டித்துக் கடையுக மட்டுத்திட்ட த்தற் புதமுத வியகோவே

மக்கத்துற் றெட்டுச்சு வனமோ டெட்டுத்திக் கெட்டுக் கிரிபுவி மற்றொற்றைக் கொற்றக் குடைபுரி யிறசூலே (கக)

தனதன தனந்த தந்த தனதன தனந்த தந்த
தனதன தனந்த தந்த—தனதான.

பிறர்மனை விளைந்து மண்டி வடியிடு கனுண்டி ருந்து
பிறர்பொருள் கவர்ந்து கொண்டு தொலையாத
பெரியபொய் பகர்ந்து வஞ்பு புறமிக மொழிந்து சென்
று பிறர்குடி யடங்க லுங்கொ லறமாறி
யறநெறி துறந்து வஞ்ச மறநெறி நடந்து வன்க ணடு
கொலை புரிந்து நின்று தடுமாறு
மவமதி கலந்த நெஞ்ச னெனையடிமை கொண்டு செங்க
ணருணமழை சுரந்தி ரங்கி யருள்வீரே
மறைமுழு வதுந்தெ ரிந்து தொடர்பவ மலங்க டந்த
மதிவல வர்தங்க ளின்ப முறுவாழ்வே
மறலிமெய் நடுங்கி யன்று குரைகழல் புனைந்த விந்தை
மலரடி யிறைஞ்சி வந்து புகழ்கோவே
சிறகர்வரி வண்டு கிண்ட நறியமுகை விண்டு டைந்து
திவலை மழை சிந்து கஞ்ச வயலூடே
சினைவயின் முதிர்ந்த சங்க மதியென வளர்ந்திலங்கு தி
ருமதின நண்பவெங்க ளிறகுலே. (கஉ)

தத்த தனதன தனனு தனனு தத்த தனதன தனனு தனனு
தத்த தனதன தனனு தனனு—தனதான

செப்பு முலைமத கரியோ கிரியோ பத்ம வரைகடி தட
மோ படமோ செச்சை நறுநுதல் சிலையோ கலையோ நடை
தாமேறர்

செய்க்க ணனநடை படியோ பிடியோ விக்கு மொழிக டெள் ளளியோ கிளியோ செக்க ரிதழ்துவ ரிலவோ வலவோ குழையூரு
மப்பு மதர்விழி வடுவோ கடுவோ நெய்த்த குழலளி யினமோ கனமோ வற்ப நுணுகிடை கொடியோ துடியோ வெனமாத
ரற்பின் வடிவிய றனையே வினையே னித்த மனதினி நினை யா துனையே யச்ச மறமலர் புரைசீ ரடியே தொழுவேனோ
முப்பு வனமொளிர் மதியே நிதியே பச்சைமயிலிய லுருவே குருவே முத்தின் வளர்திரு வொளிவே தெளிவே கிடையாத
முத்தி தருமொரு கருவே தருவே பத்த ரமரர்கண் மணியே யணியே முற்று மடியவர் பொருளே யருளே வரு பேறே
மைப்ப டலமுகி லினமே லனமே னட்பி னுழுனர்க ள் படைமேன் மடைமேன் மட்டு விரியல ரளிமேல் வெளி மே னெடுமாட
வச்சிர மணிபுனை கொடிமேன் முடிமேன் மொய்த்து மிசுவுகழ் கயலூர் வயலூர் மக்க நகர்வளர்பெருமான் மரு மாணிறசூலே. (கரு)

தனதான தானதத்த தனதான தானதத்த
தனதான தானதத்த—தனதான.

வெடிசூலை மேக வெட்டை குறைநோய் மூவாறு குட் டம் விஷபாக நீர்கரப்ப ஊதிசார

வெகுதாப நாவ றட்சி க்ஷயமீளை வாத பித்தம் வெறி
காச நோயி ளைப்பு முதிர்சோகை

கடிதோஷ மேக டுக்கல் புரையோடி நீள்புண் வைத்த க
ள்மாவி யாதி முற்று மணுகாதே

கருணாக ராவெ னக்கு னாழிமான மாயி ணைத்த கழல்வீ
டு சேர முத்தி தருவாயே

யிடையூ றிலாது வைத்த பதினாலு லோக முற்று மினி
தே பரா பரிக்க வெனநாடி

யிரவேபி ரான ழைத்து மறைவான காரி யத்தை யெ
திர்பேசி யேய னுப்ப வருவோரே

மடைவாய் வரால் கடத்த வயலேல யிறால் குதிப்ப மத
கேசு ரூவு ழக்கி வெடிபாய

மடுவூடு மூசு நெட்டை நெடுவாளை பூக மொய்த்த மட
ல்கீறி வாவு மக்க மிறசூலே (கசு)

தனதன தனனத் தனனத் தனதன தனனத் தனனத்
தனதன தனனத் தனனத் — தனதான.

கனைகுழல் குலையக் குலையச் சிலைநுதல் குவியக் குவியக்
கயல்விழி புரளப் புரளத் தடமேரு

கதிர்முலை குழையக் குழையத் துடியிடை பதறப் பதற
க் கனிமொழி குழறக் குழறக் கயிநீலப்

புனைவளை சிதறச் சிதறத் தெரிவையர் திரிகித் திரி
கிப் புணர்பல கலவிப் புலவிச் சமராடி

புதுமயல் பெருகப் பெருகத் தினமிதழ் பருகிப் பருகிப் புளகமெய் தழுவித் தழுவித் திரிவேனை

சுனையறல் சுவறச் சுவறக் குயிர்நிலை பெயரப் பெயரச் சுடுகன றணியத் தணியத் திகழ்கோயிற்

சுதைமதில் சிதையச் சிதையச் சிலைதலை கவிழக்கவிழச் சுராதி பரவப் பரவத் திறன்மேவப்

பனிமதி சுழலச் சுழலக் கவியிருள் கதுவக் கதுவப் படர்புகழ் தவழத் தவழக் குடையான்முப்

படிநிழல் குளிரக் குளிரத் தனியருள் புரியப் புரியப் பயிறரு மதினப் பதிபுக் கிறகூலே. (கடு)

தனதன தனன தனதன தனன
தனதன தனன—தன தான.

மழலையி னிசைய சிறையளி முரல மதுவுமிழ் சலச மணிமார்பா

மலர்திரி புவன மொருநொடி யளவின் மனுநிலை புரியு மிறைதூதே

யெழுபது திகிலு மொருபகல் புனையு மெழிலமர் மகளிர் மணவாளா

வெளியரி லெளிய பயல்வழி யடிமை பெனைமன நெகிழ விடலாமோ

வொழுகொளி நிலவு சிபுரியி லொருவ ஞெகி கொடு வரவுண் மகிழ்நேயா

வெளிவெழு கடலி லெழுகதி ரிரவி
யொளிகெட வொளிரு மழகேசா

வழகிய பசிய மரகத கலப
வணிமயில் வடிவ முருகோவே

யமரர்வி ணுலகு மகிலமு ணுலகு
மரசுசெய் கருணை யிறைகுலே (கசூ)

தனதன தனன தனத்த தனத்தன
தனதன தனன தனத்த தனத்தன
தனதன தனன தனத்த தனத்தன—தனதான.

அயில்விழி குவளை வடுக்கள் வடிக்கணை
குயின்மொழி யமுது வருக்கை சருக்கரை
யலர்முலை குமிழி பொருப்பு மருப்பிணை யெனமாத

ரழகிய வடிவை மதித்து மதித்துயர்
புலவர்கள் கவிதை படித்த பயித்திய
மறவுமென் மனதை வதைக்க வடிக்கடி யவர்மோக

மயலெனும் வலையை வளைக்க வகப்படு
பறவையி னுழலு மவத்தன் மனத்தினின்
மருள்வதை விலகி யுமக்க டிமைப்படு பெரியோர்கண்

மவுனமு நெறியு மனத்தி னழுக்கறு
சரிதையின் மருவி யிருக்க வெனக்கினி
மலர்புரை யுபைய பதத்தை யளித்தருள் புரிவீரே

யியலர மகளிர் தமக்கு ளிலக்கண
வொருமட வரலை விருப்பின் மகத்திறை
யெழுதியிவ் வழகு படைத்த மடக்கொடி யுளதாயின்

இவண்மண முடியு மெனக்கி ளியைக்கயில்
சிபுரியி லுமது கரத்தி னளிப்பது
மினமுறை யவர்கை கொடுப்ப வெடுத்தவர் விடுதூதா

வியனகர் மதின வரைப்பி னளப்பில
ரிணையமெய் வடிவி னரைத்தெ ரியப்பெயர்
வினவிய பொழுதபு பக்கர்வ ரத்தருண் மகளார்தம்

விகசித குணவ டிவைத்தெ ரிசித்தவ
ரிணையமெய் வடிவி னுமிக்கி தெனச்சொல
விரைவினில் வதுவை முடித்து நடத்திய விறகூலே(கஎ)

தனதனத் தனதனத் தானன தானனத்
தனதனத் தனதனத் தானன தானனத்
தனதனத் தனதனத் தானன தானனத்——தனதான.

குடிலனைக் கபடனைக் கூராத மூடனைக்
கசடனைத் திருடனைக் காமாவி காரனைக்
குயவனைக் கயவனைக் கோள்பேசு நேசனைப் பலசோலிக்

குழுவனைக் கழுவனைக் கோமாளி வீணனைப்
புலஞனைக் குலைஞனைப் பூராய மாயனைக்
கொடியனைத் துடியனைக்கோண்மா துரோகனைப் படர்தீமைக்

கொடியனைப் படிறனைப் கேளாவி ரோதனைச்
சிதடனைச் சதியனைத் தீஞேர்க ணீசனைக்
கெறுவனைச் சிறுவனைக் கேடார்சொ ரூபனைக் கடைநாளிற்

கெழுமழற் குழியினிற் போய்மூழ்கி டாதுசற்
றமுதகட் கடைவிழித் தோர்போது கூயமிக்
கெதிபெறத் துணைமலர்ச் சீர்பாத நீயளித் தெனையாளாய்

கடுநடைச் சிறியகட் பேழ்வாய்வி லாழிவிட்
டெறுதுளைப் பனையினெட் டோர்காள மூதுகைக்
கறையடித் தழைசெவிப் போராறு போலுவட் டெழுதாரைக்
கரடமுத் தெறிகடக் கோடேறு கூனுடற்
குழவிதழ்ப் பிறைமருப் பேர்சூழ்ப டாமணிக்
கரியதற் பெருநிழற் பால்கோப வேறறத் தெவர்சேனைப்
படைகளைத் துகழ்படப் போராடு தாழ்வலித்
தழைகளைத் தறிகளைத் தானூறு மாடகப்
பசியபொற் புகர்முகத் தாறாடு பாய்சுவட் புயலேறி
படுகுரற் கழைசுழித் தால்சீறு மாலுடைக்
கவளநற் றவளவெற் பேரானை மீதினிற்
பவனிபொற் பதிவரத் தானூரு மாரணத் திறசூலே (கஅ)

தனத்தந் தானன தானன தானன
தனத்தந் தானன தானன தானன
தனத்தந் தானன தானன தானன—தனதான.

செழிக்குங் காரறல் வேள்படை வீடினி
தளிப்பைங் காவொடு நீணிற மாமணி
செருக்குந் தேனின மாமுகில் கூரிருள் விரிபாளை
செலத்தின் பாசியெ லர்ம்வெல நாவியு
மணக்குங் காரகி லாவியு நீவிய
செறிக்குந் தாரள காடவி மாதர்கண் முலைமேவு
முழுச்சண் டாளனை வீணனை வாழ்குடி
கெடுக்குங் கோளனை யீனனை நீள்பழி
முடிக்குங் கூழனை மாணெடு நீலனை மறைநூலின்
முறைப்பண் பானட வாதநிர் மூடனை
யழைத்துன் சேவடி யானித மேதொழ
முகச்சந்த் ரோதைய நாண்மலர் போல்விழி யருள்பாரா

தழைக்குந் தூயக லாமதி யாமென
முளைக்கும் பேரிய தூவியு மீதெழு
தனிச்செஞ் சூரிய னுதப மாமணி யெனநீடு

தருக்குஞ் சீதள வாசமு மாமர
கதப்பைந் தோகையு மாய்நெடு நீர்புடை
தரிக்கும் பாரணு காசிபு ரீலிறை யருளாலே

வழுத்துஞ் சீர்பய னேடுரை யாடிட
வெழுத்தொன் றேயறி யாதகு ருனதை
வடித்தன் பாலுணர் காரண வானவர் முடிதாழ

வணக்கும் பாதச லாமிட மூவுல
கனைத்துந் தானினி தாருயிர் போன்மென
வளர்க்குந் தாயென வாழ்கிரு பாகர ரிறசூலே (கக)

தனன தான தனதான தனன தான தனதான
தனன தான தனதான—தனதான.

உலகின் வாழ்வு துறவாத மகளி ராசை மறவாத
வுறுதி ஞான முயலாத முதலோனை

யுடைய கால நினையாத சறகி னீதி நடவாத
வுறுகண் மாய மொழியாத படியாத

கலைகை டேடி யுணராத மறையை யோதி யறியாத
கரும பாகை தெரியாத வினையேனோர்

கவலை தீர வொருபோது முடுகி வீடு பெறவேது
கனவி லோர்கை யடையாள மருள்வீரே

மலையி னுடி யொளியாத மயில்வி னோடி யடையாத
மதநி லாவின் முகிழாத மலரேசீர்

மருவு வேன லழலாத பருதி சோதி குறையாத
மருவி வாச மறையாத மணியேநீ

நலேயி னூடு விளையாத வமுத நீழ லெவரானு
மறியொ ணாத தருவேநின் வழியான

வடிய னோடு புவனாதி முடியு நாளில் வடிவான
வமரர் நாடு குடியேறு மிறசூலே (உ௰)

தனதத்தன தத்தன தத்தன
தனதத்தன தத்தன தத்தன
தனதத்தன தத்தன தத்தன—தன தான.

கலகக் கடை வெட்டிம ருட்டிகண்
முலேயிற்றுகி லிட்டும றைச்சிகள்
கடையிற்றிரி பற்பர மட்டைகண் முகமீதே

கனபச்சிலே யிட்டுமி னுக்கிக
ணகையிற்பிறர் சித்தமு ருக்கிகள்
கமுகிற்குர லெட்டு மெழுப்பிக ளெவரேயும்

வலியப்புணர் துர்ச்சண பெட்டிகள்
விரகத்தின்ம யக்கி முயக்கிகள்
வசனத்தின மூப்புமு மூப்பிக ளிளேஞோர்பால்

வருகைப்பொரு ளேத்தின மெத்திகள்
பலவித்தைப டித்தச மத்திகள்
வடுவைத்திடு கெட்டப ரத்தைக ளுறவாமோ

புலமைத்தொழில் கற்றஜ யக்கரு
பெனுமிக்கக விப்புல வர்க்கொரு
புகல்குற்றம கற்றிவி ருப்பொடு திருமேனி

புனைமுத்திரை பெற்றது வைப்பினில்
விலைபெற்றது முத்திகொ டுப்பது
புகழ்மெய்ப்பரி வட்டம ளித்தருள் கொடையாளா
குலவப்படு முற்செய்வி னைத்தொடர்
வினையொக்கவ றுத்தும னுப்பயிர்
குளிரக்கரு ணைப்புன லிட்டரு ளியகாவே
குறைசிக்குல வற்புத வுற்பன
நபிகட்கொரு கற்பக மொத்திடு
குவளைத்தட மக்கந கர்க்கிறை யிறைசூலே (உக)

தனதன தத்தன் தந்தா தனதன
தனதன தத்தன தந்தா தனதன
தனதன தத்தன தந்தா தனதன—தனதான.

வலையிடை பட்டக கம்போ லகிழ்படு
குழிவிழு மத்தக கம்போ னிறைபுனல்
வளமகல் புட்பவ னம்போ லலர்துளி மழைகாண
வடகுப யிர்க்கண்மு கம்போ லதிர்புய
விடியுறு சற்பவி ளம்போ விளமையின்
வறுமைப டைத்தச னம்போ லலம்வரு முதிர்காலி
னலைகட லுற்றக லம்போல் வெறிகொடு
மதிமருள் பித்தன வன்போ லனைபிரி
யழுதுழ விச்சிறு வன்போ னயசுய கவிபாடு
மரியசொல் வித்வம னம்போ லுயிர்நிலை
தளர்வினை யெக்கிரு கண்போ லினியநி
னழகிய சொற்கப தம்போன் மலரடி யருள்வாயே
கலைசுடர் விட்டகொ ழுந்தே நிலவிய
புகழ்திகழ் பொற்பெழு குன்றே நறைவிரி
கமழ்துள சிச்சிறு கன்றே சிபுரியில் பிரயமோடே

க்ருதியெ டுத்தகு ழூந்தாய் வாமுறு
நபிகட மக்கொரு நம்பீ பரிவொடு
கருணைகொ ழித்திடு கொண்டால் வழிபடு புகழ்தீனோர்

குலதில கத்தக ளங்கா சுவையமு
தெனம துரித்தக ரும்பே குபிரிருள்
குலையவு தித்தெழு திங்கா ளறநெறி மதினாவாழ்

குறைசி களுக்குவி ருந்தே வியனுல
கமரர்க ளுக்கும ருந்தே யுயர்வுள
குபைசும லைக்கணி ருந்தே தவமுய விறசூலே (உஉ)

தனந்த தனந்தன தந்தன தந்தன
தனந்த தனந்தன தந்தன தந்தன
தனந்த தனந்தன தந்தன தந்தன—தனதான.

அரும்ப சும்பொன சும்புத சும்பிரு
குரும்பை கும்பகு டஞ்சல சந்தரு
மரும்பு தண்கல சந்திகழ் பந்திள நீர்தாள

மலங்கு பைங்குமிழ் செஞ்சிமிழ் குஞ்சர
மிலங்கு கொம்புவ ளஞ்சிறு பம்பர
மகன்ற குன்றம டங்கலும் வென்றுபொ னவிர்சோதி

வருஞ்சு ணங்குப ரந்தணி பம்பர
முகந்தெ றிந்துகு ழந்தையி ளம்பிறை
வடங்கி டந்தில ங்குடி கொண்டுபன் மணிமாலை

வயங்கு செங்களபஞ்செறி குங்கும
மழைந்த சந்தன வண்டலி டும்படி
வளங்கு லுங்கைம டந்தையர் பங்கினி லுழல்வேனோ

கரும்பி னங்குள விஞ்சியி லஞ்சிமெ
லரம்பை சண்பக மஞ்சளொ டிஞ்சிகள்
கடம்பு சம்புசெ ருந்திகு ருந்தலர் குளிர்பாளை

கமழ்ந்த தெங்கில வும்பல வும்பல
வளர்ந்தெ ழுந்துவ ரம்பின்வ ளங்கனி
கனிந்த தண்டலை யம்பழ னஞ்செறி மதிளுவாழ்
திருந்து வஞ்சநெ டுங்குபி ரண்டலர்
தொடர்ந்து பின்செலல் கண்டுபொ தும்பறை
திறந்தி டந்தர வந்துபு குந்திட முழைபாய்நூல்
சிலம்பி வந்திட வண்டச மென்சுவ
டவண்க ரந்திட வண்புயல் கண்டுயில்
சிறந்தி டுந்தவு றென்றொரு குன்றுறை யிறகுலே (உங)

தனதன தந்தன தாண தானன
தனதன தந்தன தாண தானன
தனதன தந்தன தாண தானன—தனதான.

வறுமையெ னும்படர் தீயா லேயென
துட லினு றும்பிணி நோயா லேபசி
வலியடு மின்சுவை யூண லேயிடை புனையாடை
வகையது வொன்றுமி லாதா லேகொலை
களவுபொய் குண்டணி கோளா லேதினம்
வறிதினி றைந்திடு தாழ்வா லேவிலை மடமாதர்
உறவுசெய் தின்புறு மாலா லேகொடு
மறநெறி வஞ்சனை சூதா லேதனி
யுலகினு ழன்றவ மேவாழ் நாளதி லுறைவேனை
வுறுபகை யின்கொடியேன வுனது
னடிமையை நின்கை விடாதே மாமன
முருகியி ரங்கிவி ணோர்மேல் வீடினி யருள்வாயே
யறநெறி நின்றகு ணாளா மாசுறு
குபிர்நிலை யண்டலர் போரேறே படி
யரசர்வ ணங்கிய கோமா னேயொரு பொருளாதி

யமுந்துவி ருந்திட வார்கோ வேயொளிர்
சுவனவ ரம்பையர் பூமா னேபொறை
யறிவின்மி குந்துயர் பேரா ளாவள மதிஞவாழ்
குறைசிக டங்குல தீபா தீனவ
ரினியக ரும்படு பாகே யாருயிர்
குளிருமரு ந்தமு தேசா வாணர்க டருவேசீர்
குலவுஜெ யம்பெறு தாசீ மேயிறை
யறுசின டந்தெழு யாசீ னேயுயர்
குறுசிஞு றைந்தருள் காசீ மே நபி யிறசூலே (௨௪)

தனனதன தானதன தத்தான
தனனதன தானதன தத்தான
தனனதன தானதன தத்தான—தனதான

விரைகமழ்ப டீரகள பத்தேய்வை
பரிமளச வாதுநறை கற்பூர
மிர்கமத வாச நிறை கஸ்தூரி பனிநீரின்
விரவியிடு சீதகல வைச்சேறு
கமகமென மாயமிடு நெட்டூர
வினைமதன வாடைகுளி ரப்பூசி யதன்மீதே
பருமணிக ணீலவயி ரக்கோவை
மதிவடமு லாவுசவ டிச்சோதி
பளபளென வீசுமொளி மிக்கான முலைமாதர்
பவளவித ழூறல்பரு கிப்பூர்ண
கலவியனு போக முழு கிப்பாவி
பகலிரவு வேறொர்செய லற்றுவி சுழல்வேனோ
மரகதம யூரவடி வுக்கார
வளவிடவொ ணாதபொறு மைக்கார
மதுரகவி வாணர்புதை யற்கார புவியூடே

மலரடிப டாதபுது மைக்கார
வடியவர்கண் மீதுகிரு பைக்கார
மலையினொடு பேசும்வலு மைக்கார நெடிதான
விருமைதரு வாழ்வுநிலை மைக்கார
பரசமைய காபிர்கல கக்கார
விலகுமொரு சோதியுரு வுக்கார விறலூரே (உரு)

தான தானன தத்தன தத்தன
தான தானன தத்தன தத்தன
தான தானன தத்தன தத்தன—தனதான

ஆதிநூன்முறை தப்பி நடக்கவு
மூரிலாதவ ளப்பை யளக்கவு
மாறை யாகிலு நட்டம்வ ருத்தவும் வெகுகோப
வாண்வ காமம யக்கம் விளைக்கவும்
வேறுளோர் குடி லச்சை கெடுக்கவு
மார பார மகத்வம டிக்கவும் வடமீன
மாதராருட கற்பைய ழிக்கவும்
லோகவாழ்வைநி லைப்பென நிற்கவும்
வாறபேர் பொருளெத்திய டுக்கவும் நிதிசேர
வாரிவாரிய வத்திலி றைக்கவு
மேலையோர்கள் கருத்தை முறிக்கவு
மாய மாரிச வித்தை படிக்கவு முறுவேனோ
கோதின் மால்வரை வெற்புவெ டித்தத
னூடு காரண வொட்டகை பற்பல
கோல மாயொரு முப்பது பத்துட னருள்வோரே
கோடி நீரற வத்திய கட்டைக
ணீடு பாசிலை யிட்டு முகைத்தலர்
கோடி கோடிப ழுத்துதி ரக்கனி தருவோரே

சோதி நாயகன் முத்திரை யிட்டொரு
காத நானம ணக்கும ணிப்பிடர்
தோளின் மாநில வைப்பினை வைத்தரு ணயினரே

சேனை மாமயில் சுற்றம யிற்குல
மாடு நாண்மலர் மட்டுவி ரித்தலர்
சோலை சூழ்திரு மக்கம கர்க்கிறை யிறசூலே (உ.சு)

தனனதன தந்தனந் தந்தனந் தந்தனந்
தனனதன தந்தனந் தந்தனந் தந்தனந்
தனனதன தந்தனந் தந்தனந் தந்தனந் — தனதான

கரியவரி வண்டுகிண் டுஞ்செழுங் கொண்டலுந்
திலகமொளிர் கின்றவெண் பிஞ்சிளந் திங்களுங்
கடலமுத வஞ்சநஞ் சுண்டபைங் கெண்டையுஞ் சுவையூறு
கனிமதுவி ருந்திதங் கொண்டசெந் தொண்டையுஞ்
சிறுபிறைவ டங்கிடந் தம்பருஞ் சந்தமுங்
கலனெடுசு மந்தெழுங் குன்றமுங் கொண்டுதன் றிரிதானே
தருவெனவி ருந்துமன் றெங்கணுஞ் சந்தியும்
பிறர்மனைவி கண்டுகண் டின்புறுந் தொண்டனன்
றெரிகலைம றந்துபின் சென்றணைந் துந்திரிந் துழலாதே
திருவுளமி ரங்கிவந் தஞ்சலென் றென்றுநம்
பழவடிமை யென்றுவந் திங்கடைந் தன்பொடுந்
திதிபெறவி ரண்டுதன் கஞ்சமென் செஞ்சரண் டருவீரே
குருதிகமழ் தந்தவெங் குஞ்சரங் கந்துகந்
திகிரியிர தம்பெருந் தண்டுடன் பண்டெழுங்
குறுகலரை நைந்தநந் துங்கவ ந்தப்பநிங் களமீதே
கொடிகழுகி னங்களுஞ் சம்பொடுங் கங்கமுஞ்
சிவல்குறள்க ணங்களுஞ் சொந்தமென் றுண்கவன்
குடர்தசை விருந்திடுந் துங்கவெண்சிங்கமொன் றனைவோரே

பெருகிருள்செ றிந்திடுங் கங்குலின் சந்திரன்
கலையுடல்வ கிர்ந்தபங் கொன்றிழிந் திம்பரின்
பெரியவன கம்புகுந் தும்பெயர்ந் தும்பரின் கலிமாநீள்

பிரியமொடு ணர்ந்துணர்ந் துங்கடங் கஞ்சுகந்
திகழ்கரம மைந்துயர்ந் தொன்றுடொன் றென்றலும்
பிறபலமி குந்துநின் றம்பரன் றம்பநம் பிறகூடே. (உஎ)

தானதானன தத்தன தந்தன
தானதானன தத்தன தந்தன
தானதான தத்தனன தந்தன—தனதான

மாத ரார்புண ரிச்சையின் வந்துற
மேக மான துபட்டதொழிந்தபின்
வாத சூலைபி டித்துமு டங்கிட நறுநாண

வாச மேனிவெ டித்தசி ரங்குக
ஞூசி னூடுகி ளைத்தகி ரந்திகள்
வாயி னூடுபு ழுக்கள்சொ ரிந்துமொய் கொசுகோடே

ஏது மீயும ரிப்பது கண்டுபி
ஞூலு பேருந கைப்பவ ருந்தியு
ளீர றீயர சப்புகை யுண்டற விருபோது

மேழு நாளுமெ டுத்துவ ழங்கிட
லோக லோபனெ னப்பெயர் கொண்டுழ
லேழை யேனைய னுக்கிரகஞ்செய்வ தொருநாளே

வேதவாய்மைம ணக்கும லங்கிர்த
நாவ லோர்கள்ப டிக்குந லந்திகழ்
மேலை யோர்கடி திக்கும ருப்புக ழுடையோரே

வேலை நீர்கைய டுத்துமு ழங்கிய
காள மேகநி ழற்றிய வன்குடை
மேவி மீதுக விப்பந டந்தரு ளியகோவே

ஆதி சேடனெ டுத்தநெ டும்புவி
யூட பூஜகின் மற்கொடெ றிந்தழ
லால காலவி ஷத்தைய ருந்திய பெரியோரே

பால வாயினு டைத்தக ரும்புமிழ்
சாறு சாலிவ யற்கணி றைந்தய
லாறு பாய்மதி ணத்தின்வ ளர்ந்தரு ளிறகுலே (உஅ)

தனன தந்த தத்தத் தனந்த
தனன தந்த தத்தத் தனந்த
தனன தந்த தத்தத் தனந்த— தன தான.

அருண தண்டை யிட்டுச் சிலம்பு
கலக லென்று சுத்தச் சதங்கை
யடிபு னைந்து மைக்கொத் திருண்ட குழல்சோர

வளைபு குந்து கட்டிப் பிணங்கு
கலவி யின்ப மிச்சித் தெழுந்தெ
னருக ணைந்து வெட்கிக் குழைந்து முலைமேவு

தருண மென்று கட்டுற்ற சென்று
தனையெ றிந்து விட்டுத் தொடர்ந்து
சலவை முந்தி தொட்டுக் கலந்து புணர்மாதர்

தயவி கந்து சொற்கத் தையன்பி
னுதவ வந்து ரட்சிக் கவின்று
சமைய நன்று திட்டித் திரங்கி யருள்வீரே

மரக தங்கண் முத்துச் சிறந்த
வயிர மொன்ற மொய்த்துச் சிவந்த
மணியி னங்கள் வைத்துச் சமைந்த துகில்வானோர்

மகிழ வங்கெ டுத்துத் திரும்ப
முதல்வ னிங்க னுப்பப் பறந்து
மருவி ரிந்த வெற்பிற் கொணர்ந்து சிபுரீலா

மிரவு தந்தபட்டுக் குளொந்த
உலக மெங்கு மொக்கத் துலங்க
வினிது கண்டு கத்தற் குவந்த விறகுலா
மெனவ ழங்கு பட்டத் தையன்று
தரவி யந்து திக்கெட் டுவென்றி
யிசைவிளங்க மக்கத் திருந்த விறகூலே (உகூ)

தானு தனதன தத்தன தந்தன
தானு தனதன தத்தன தந்தன
தானு தனதன தத்தன தந்தன—தனதான.

பூமா மழைதுளிமுத்தம் வழங்கிட
வீழ்தா மரையிலே பெற்றுள லங்கிமெய்
பூணு திருள்பொழு துக்கும னந்தனி னினையாதே
பூமா னொருவனளித்தபெ ரும்பொருள்
பேரா சையினொடெ டுத்துமு னஞ்செய்த
பூசாபலமென வைத்திடு நன்றியில் பொதுமானு
ராமா வெனவுயிர் நக்கியு றுஞ்சியென்
வானு லதனைவ தைக்கு முனெஞ்சினி
லாலோசனைசெய்து குற்றமி குந்தவெவ் வினையேனே
யானு லுமதுள்பொ ருத்தமி ரங்கிநல்
வீடே தருமிரு பத்மப தந்தனை
யாரா தனைசெய்தி ருக்கவரந்தர வரவேணும்
வாமான் மறிபசு வொட்டகை வெம்புலி
கோதா பரிபுவ னத்தொடு தெண்டிரை
வாழ்மீனெடு புலர் கட்டைபொ டும்பல தருவோடும்
வானூர் மதியொடு பட்சியொ டென்பொடு
வாதா சனனொடு வெற்பினொ டுந்திரு
வாயா லறிவுகள் செப்பி மகிழ்ந்திடு புகழாளா

தேமா வமுதுப ழுத்தொழு குங்கனி
பூவார் கதலிவ ருக்கைத ருங்கனி
தேனு ளொழுகியு வட்டெனு தண்பனை வயலூடே
சேதா முலையின்ம டுக்கள்சு ரந்திடு
பால்வீ ரிடவொரு மித்தெகி னம்பயில்
சேலார் புனல்வள மக்கமி ருந்தவெ மிறைகூலே (௩௰)

தானன தத்தத் தனந்த தானன
தானன தத்தத் தனந்த தானன
தானன தத்தத் தனந்த தானன—தனதான.

காரிருள் முற்றிக் கனிந்த தோமதி
மேல்விடம் வைத்திட் டிருண்ட தோவறு
காலின மொய்த்துக் கிடந்த தோகுழல் வெளிதானோ
காமனி லைப்பட் டிருந்த தோவுட
றேய்பிறை நெட்டைக் கொழுந்த தோமழை
காலமின் வெட்டிக் கரந்ததோ விடை குயில்பாடு
மாரமு தச்சொற் கவர்ந்த தோகனி
பான்மது விட்டுக்க லந்த தோசுவை
யாலையின் வட்டுக் கிசைந்ததோ மொழி யெனமாத
ராசைவ லைக்குட் படிந்தி யானனு
போகம யக்கத் தடைந்து போயவ
ரானைமு லைக்கட் புணர்ந்த தீவினை யகலாதோ
பூரண பட்சத் தெழுங்க லாபநி
லாமயில் கச்சித் தலம்பு தேனவிழ்
பூகம டற்கொத் தவிழ்ந்து சீதள மணவீசும்
பூவிரி யைப்பைப் புயங்க மாமென
வீறுடு கொத்திப் பிடுங்கவேவெகு
பூசல்வி ளைத்துற் றிருந்து வாய்வரு மலர்சோலை

பாரவிரத்னக் குதம்பை தாழ்குழை
யூடுருவித் துப் பொருங்கண் மாதர்கள்
பாயொளி பச்சைக் குரும்பை வான்முலை யெனநீரார்
பாசடை மிக்குப் படர்ந்த தாமரை
நான்முகை விட்டுத் துலங்கு சீர்கெழு
பார்புகழ் மக்கத் தலக்கணுயக விறகூலே (௩௪)

தனத்த தந்தன தனதன தனதன
தனத்த தந்தன தனதன தனதன
தனத்த தந்தன தனதன தனதன—தனதான.

அழுக்கு வந்தடை மடையென வுடைபடு
மிரத்த மண்டிய குளமதை மனமரு
வருத்தி கழ்ந்தழி பிணவெடி கமழ்தரு சலதாரை
யடுத்த குண்டூதை யரைமிசை யயில்கொடு
கிழித்த வெம்பகு பிளவதை வரிபடு
வகழ்க்கி டங்கதை யழவிட வரிதொரு புரையோடி
முழுச்சி வந்தபு ணுருபுழை யதைவளர்
கருப்பி றந்தபை யறையதை யுழைமறி
முதற்கு ழம்பென நிகரிடு கொடுவினை யதுதீர
முழைத்தெ ழுந்தமு ளரையிலை புடைவிரி
பொகுட்ட ரும்பிள நெறிகுரு கிலுமுகை
முறுக்க விழ்ந்தலர் கமலமெ லடியிணை யருள்வீரே
குழைத்த பைந்தரு முதலொடு நிலமுழு
தளுக்கி வந்துயர் மறைபயில் குறைசிகள்
குலக்கொ ழுந்தென வடிதொழு திடுவர முடையோரே
குறித்த பண்புறு சிபுரியில் மிகவதி
செயித்தி டும்படி யிறையவ னருசிடை
குருத்த வெண்கதி ருடின முடிமிசை யருள்வாயே

மழைக்கண் மங்கயர் பயிறரு மரகத
மிழைத்த திங்கள்வெண் மணிபல நிரைநிரை
வகுத்த பைங்கதிர் நிலவொடு மிலகிய மணிமாட
மதிக்கொ ழுந்தொடு கருமுகி லதுகுடி
யிருக்கு மொண்குண மெனவள மணிசுடர்
மணிப்பொன் மந்தர மதிநிகர் மதினவெம் மிறசூலே (௩௨)

தத்ததன தானதந் தனந்த
தத்ததன தானதந் தனந்த
தத்ததன தானதந் தனந்த—தனதான

பச்சைமுகி லோதியுங் குலைந்து
மச்சவிழி நீலமுஞ் சிவந்து
பட்டநுதல் வேர்புவுந் ததும்ப வணைமீதே
பத்மமுலை மேருவுங் குலுங்க
நெய்த்தவித ழூறலுண் டிருந்து
பச்சமட வாருடன் புணர்ந்த செயலாலே
சிச்சியிவன் மானிசங் குலைந்த
துட்டனென யாவருஞ் சினந்து
திட்டவத ஞன்மனந் தளர்ந்து மெலியாதே
சித்தமற வாதிரந் திவந்து
முத்திபெற நாளுமஞ் சலென்று
சிற்றடிமை யாள்வதென் றுமுங்கள் கடனுமே
மச்சமக ராலயம் புலர்ந்து
வற்றவெழு பூதலங் குலைந்து
மத்தகச பூதரம் பிதிர்ந்து துகளாட
வட்டமிடு சேடனுங் கலங்க
வட்டதிசை பாரவண் டரண்ட
மற்றுமழ லேகொழுத் துகின்ற கடைநாளில்

விச்சை யுட ளைவென் றிரங்கி
முற்றுயிர்கள் யாவையுந் துலங்க
விற்பிறவி வேர்கடிந் துபண்டை முதலோன்முன்

இட்டமொடு தூதுசென் றியம்ப
மக்கநகர் வாழ்வுகொண் டிணங்கி
யெப்புவன கோடியும் புரந்த விரசூலே (நக)

தான தத்தன தந்தன தாத்த
தான தத்தன தந்தன தாத்த
தான தத்தன தந்தன தாத்த—தனதான.

பாவி தத்தமிழ் பிங்கல வாக்ய
நூலு ரிச்சொனி கண்டுரை வாய்ந்த
பாட லக்கிய மும்பல சூத்ர நிலையான

பாக முற்செயு ளும்பிறர் பாட்டு
நாட கப்பொருண் முந்துதொல் காப்ய
பார லக்கண முந்தொகை பார்த்து வழுவாதே

காவி யத்துறை யும்பரி பாட்டு
மேப டித்தணி செந்தொடை யார்த்த
காரி கைப்பொருள் கண்டுத ழீஇச்சொன் மடல்கோவை

காதை சொற்பிற வந்தடுமெய் கீர்த்தி
பாடு தற்கிரு பங்கச சூட்ச
கார ணக்கழ றந்துநல் வாக்கை யருள்வீரே

தேவர் கற்பக வைந்தரு நாட்டி
னுண்ம லர்க்கைவ ழங்குமு னுட்பெய்
தேற னற்கனி தந்திடு பாக்ய முடையோரே

தேம ழைத்துளி சிந்திய பூக்களி
மீத ரிச்சிறை வண்டுக ளார்த்த
சீரி சைத்தொலி மண்டிய சோட்டி னுறைவோரே.

ஆவுபட்சியு றுந்தலை யாட்ட
மேவும் சித்திர வைங்கதி காட்டும்
வாசியிற்புகழ் கொண்டபு ருக்கின் வருவோரே

வாரம் வைத்தரு ளின்பத மோட்ச
வீட ழித்துமை நம்பின பேர்க்கு
வாழு மிக்கபு ரந்தனி காக்கு மிறசூலே (௫௪)

தனனத் தனனத் தனனத் தனனத்
தனனத் தனனத்—தனதான.

கயலைக் கொடுவைக் கடலைச் சமனைக்
கணையைப் பிணையைப் பொருதேவார்

கதிர்பொற் குமிழ்முத் திடறிக் குழையிற்
கனகொட் படர்கட் கடைமாதர்

குயிலைப் பசலைக் கிளியைச் சினவிக்
குளிர்சற் கரைமுக் கனிதேன்யாழ்

குழலிற் கனிசொற் குதலைக் குருகிக்
குறைபட் டலையக் கடவேனோ

பயில்பொற் சிகரத் திகிரிக் கிரியைப்
படியிற் பணிவித் திடுகோவே

பகர்தற் கருமைப் பெருமைப் பொருளைப்
பரவிப் பரவித் தொழுவோரே

துயிலிற் புடையிற் பகர்பற் பலர்சொற்
றுணையைச் செவியுற் புணர்வோரே

சுடர்விட் டொளிர்வச் சிரமுத் தமைபொற்
சுவனப் பதிமிக் கிறசூலே (௫௫)

தானத்தன தத்தன தத்தன
தானத்தன தத்தன தத்தன
தானத்தன தத்தன தத்தன—தனதான.

வாலைப்பிற வைச்செழு நித்தில
நீலச்சுடர் விட்டெறி ரத்தின
வாமக்கதிர் பச்சைகள் வச்சிர — மணிமாட

மாணிக்கமு கப்பொளிர் பித்திகை
யாணிப்பொன்ம ணிக்கிர ணப்பிற
வாளத்தமை சொற்கத லத்தரி — வயரோடு

கால்வைத்தம ணிச்சய னப்பட
கேறித்திட சித்தமெ னுக்கிறம
கால்விட்டறை யப்பிரி யத்தொடு — மனுபோக

காமக்கட லிற்கல விப்பல
பாயொக்கவி ரித்தினி யக்கரை
காணத்தமி யற்கிரு கட்கடை — புரிவீரே

யாலித்தெழ வெற்றிம ணப்பறை
சேனைத்திர ளொட்டைக ளச்சுவ
மானைப்படை பக்கநெ ருக்கவி — னிசைவாண

ராசிற்புக லக்கவ ரிக்குலம்
வீசச்சிறு நட்பறு சுபமின
ராலத்தியெ டுப்பவி ருப்பொடு — மறையோர்க

ளோலத்திரை வைப்பினி னித்தமும்
வாயிற்கலை வைத்திறை யைப்புகழ்
யோகத்தபு பக்கற்சி பத்தும — றுதுமானா

லோதித்தொழு மிக்கவ விப்புவி
சூழத்தனி மக்கம திற்றிரு
வோலக்கமி ருக்குமக த்துவ — மிறசூலே (௩௬)

திருப்புகழ்.

தானதானன தந்தன தந்தன
தானதானன தந்தன தந்தன
தானதானன தந்தன தந்தன — தனதான.

ஆவி சூறைகொ ளும்படி நின்றிரு
பார்வை வேலையெ றிந்துபி ணங்கிக
ளாரை யாகிலு மன்புகொ டொண்டிகண் முலைமூடு
மாடை சோரந டந்தப ரம்பிகள்
காசி லாரையி கழ்ந்தடர் சண்டிக
ளாவ லாய்மடி வந்துசி ணுங்கிகண் மதன்வாடை
தூவி மாயம ருந்துசெய் வம்பிகள்
காம லாகிரி கொண்டுபு லம்பிக
டூது பேசிபி ணங்கிமு யங்கிகள் பொருண்மேலே
சோலி யேசொலி மென்றுகள் சந்திக
ளாடி யாசைவி லங்கிடு கந்தைகள்
சூது பாயமி குந்தவி டம்பிக ளுறவாமோ
வாவு மாவிரு கண்களெ னும்பொறி
நீல நாகிள வண்டுகள் கிண்டிய
வாச வார்குழன் மங்கையர் குங்கும முலையூடே
வானி லாமணி வெண்டர ளம்படு
கோவை மாலைநி ரைந்துபு னைந்தன
வாளை பாயம ணங்கமழ் தெங்கிள மடல்கீறி
மேவு நீள்குலை யின்கண ரும்புகள்
நீரின் மீதினி லைந்து குலைந்தவிழ்
மீறு பாளைவி ரிந்துகி டந்தொளிர் வளமேய
மேழி யூர்பளி னஞ்செறி தண்டலை
சூழு மாமதி னங்குடி கொண்டருண்
மேன்மை வாழ்வுபு ரிந்துபு ரந்தரு ளிறசூலே (௩௭)

தன்ன தனத்ன தனன தனதனன
தனன தனதன தனன தனதனன
தத்தத் தனத்ததன தத்தத் தனத்ததன
தனன தனதன தனன தனதனன
தனன தனதன தனன தனதனன
தத்தத் தனத்ததன தத்தத் தனத்ததன—தனதான

இளமை பறிபட முதுமை வயதுவர
வுடலி னுடலியல் வடிவு குடியகல
விற்கட் டுறப்பழைய பற்கட் டுவிட்டகல
வியலு நடை தளர்நரை கொளுகொளென
வுரைகு ழறிஇரு கண்ணொளி யறவிருள
மிக்குற் றிளைப்பிரும லொக்கக் குலைத்துழல நெடுவீதி
யுளைவு தருமொரு கைதடி மிசைகுவிய
வொரு கைதனியசை யவரு கிழவனென
வட்டத் தனத்தியர்கை கொட்டிச் சிரித்திகழ
வுணர்வ ழியமிகு திசல மலமொழுகி
யுயிர்பி ரியவுற வின்முறை யழவடிமை
செத்தக் கிடக்குமுன முத்திப் பதத்தினிணை யருள்வீரே
களிப டருவிட மனைய கொடியகுபி
ரடல ரசர்கண மகுட முடியிடறி
வைப்பைத் துவைத்துவட வெற்பைக் குலுக்கியடர்
கரட கடமடை படியும் விகடதட
முகப டினகடி னநடை நெடியகடல்
வற்றக் கலக்கிவிடு மொற்றைக் களிற்றுதைய மகுடமேதே
வளம லியபசி யவிழமடல்விரியு முளரிமிசை
வதிய முதுகுட வளைகள்பட்டப் பகர்க்குள்வெளி
முட்டக் கதித்துலவி வருப தியி கதிர்மதியி

ஞெளிர்புதுவெ ணிலவுமிழவளர் குவளை
பொதியவிழு மக்கப் பதிக்குமுயர்
சொற்கப் பதிக்குமர பெருமாளே. (௩௮)

தத்தன தத்தன தத்தன தத்தன
தத்தன தத்தன தத்தன தத்தன
தத்தன தத்தன தந்தன தத்தன—தனதான

மைச்சுடர் விட்டொளிர் பொற்சவ டிக்கொடி
வச்சிர மட்டில ழுத்திவி சித்திர
பச்சையி ரத்தின வற்கம ணிக்கலன் வெயில்போலே
பத்தியெ றித்திடு வித்துரு மத்தொடு
வைததணி முத்தநி ரைத்தச ரப்பணி
பட்சிபொ றித்தம ணிப்பட மிட்டவிஸ் தனபார
மைச்சுருள் பற்பல புட்பமி ழைத்திடு
கைச்சுருள் வெற்றிலை யிறபொடி யிட்டருண்
மச்சவி ழிச்சியர் கைக்குள கப்படு மதனாலே
வத்திர மற்றுறு கைப்பொருள் கெட்டுள
ரைச்சிவ னுற்றும னப்பிர மப்பயல்
வட்கம ணித்தர்கள் சிச்சியெ னப்புவி திரிவேனோ
மெய்ச்சுட ரைச்சுரு திப்பொரு ளைத்தெரி
தற்கறு சைக்குறு சைப்பிற கிட்டிரு
விற்கடை யிற்புற முற்றுறை தத்தமி லுணர்வோரே
வெற்புரு கத்திசை யுட்குலை யக்கடல்
வற்றிவி டப்படி தட்டழி யக்கடு
வெற்பழல் கொட்டுமு யிர்ப்பெறி கட்செவி யரிவோரே
முச்சுடர் மெய்ச்சவி முற்றும ழுக்கிய
பற்பல பொற்பணி யிட்டத னக்கிரி
முப்பழ மொத்தசொல் சொற்கம டக்கொடி மணவாளா

முப்படி யொக்கவி சைக்கொடி யிட்டருள்
பொற்சிமு தக்குடை பக்கரி ழற்றிட
முத்திலு தித்திறை முத்திரை பெற்றவெ மிறகுலே(௬௬)

தான தன தான தத்த தான தன தான தத்த
தான தன தான தத்த—தனதான.

ஏகமுத லேசன்மு னிட்ட நாள்முடிவு றுமுன் மங்கை
யேனைமரு பூளைபூத்தி னழியாமு
னேடவிழ்து வாம ரத்தி ஞேரிலைவி ழாமு னத்த
னேவுமிசு றுயில் கைக்கு ளிழவோலை
வாகுடன்வ ராமுன் முற்று நாளுமனு போக மற்று
வாழு முயிர் கூடு விட்டு நடவாமுன்
வாலஜென்ம காய மிக்க சாபலிய மாய்ல பிக்க
வாசினபி மான முத்தி தருவீரே
சாகரம கீத லத்தின் மீதொருபி ரான்வ ருத்து
சாலமுனி வாலொ ருத்தி கனவூடே
சாமளவு நாண்ம லர்க்கை சூகைபட வேவி தித்த
சாபயதை யேது டைத்த பெரியோரே
யாகுமியல் ய னை யற்ப காதினினை யாத கொட்ப
மாழ்குழிவி ழாமு ழைப்ப மிடுநீதி
யாசுகவி வாணர் கற்ப தாருவறி யோர்க மெடப்ப
மாதமலை மீதி னிற்கு மிராகுலே (௬௭)

தனதத் தனதந் தந்த தனதத் தனதந் தந்த
தனதத் தனதந் தந்த—தனதான.

முழுகத் தயிலந்தந்து சலவைத் துகிலுந்தந்து
முனம்வைத் தசனந்தந்து பிரியமாகி

முயல்சச் சயனந்தந்து கலவைப் புழுகுந்தந்து
முறைகைச் சுருளுந்தந்து முலையாலே

தழுவிச் சுகமுந்தந்து பவளத் தமுதுந்தந்து
தருபுட் குரலுந்தந்து புணர்மாதர்

தமைமெத் தவுமுண்டென்று நலன்விட் டறவுஞ்சிந்தை
தளைபட் டழலுங்கும்பி யுழல்வேனோ

வழுகிப்பொலியுங்கொண்டைகுழைதொட்டலையுங்கெண்டை
யமுதைப் பொதியுந்தொண்டை யிதழ்வாயு

மணிமுத் துவடங்கொஞ்சு சவடிக்கொடியும்பொங்கி
யசையத் தனமுங்கொண்டு புவிமாது

வழுவற் றிலகுந்திங்கள் முகலெக் கணமொன்றுங்கள்
வடிவுக் குறியுங்கண்டு மிகுறுசின்

வழிதற் குறைவந்தன்று சொலவுத் திரமொன்றின்றி
வலுவைப் பொருண்முன்சென்ற விறகூலே (சுக)

தானன தானக் தனந்த தானன
தானன தானத் தனந்த தானன
தானன தானத் தனந்த தானன—தனதான.

மார்பிட மோதிக் கவர்ந்து நாள்களி
லேமுக மாகத் திரண்டு தானெழு
மாயவி காரச் செருந்தி யானதை மலைபோலு

மாத விடாயைப் புரிந்த வாயொரு
பாழ்புரை யோடிப் பசுப்பு ணனதை
மானடி நீர்மைக் குளம்ப தாமென நிகர்கூறி

நீர்மடை பாயக் கலுழ்ந்து பாசடை
பீளைகள் சாடித் துரும்பு பார்வையை
நீலவை வேலைச் சுரும்பை மாவடு வகிர்போலும்

நீள்வழு வூசற் பலென்ப தானதை
யாதிநி லாமுத் தரும்பு போன்மென
நீதியின் மாதர்ப் புகழ்ந்த தீவினை யகலாதோ
பார்படர் ஞானக் கொழுந்த தோவல
தாரமு தாகப் பிறந்த தோவடி
பாகுறு தேனிற் கனிந்த தோநவ ரசமேயோர்
பாரச மூறிச் சமைந்த தோநல
சீனியின் வாரிப் பிசைந்த தோவடு
பாலொடு கூடக் கலந்த தோவெனு மிசையார்சொல்
லாரண நூலைத் தெளிந்த மாவலி
மாவெனு மோர்சொற் கரும்ப ணூர்விதி
யர்ல்வரு சூகைத் தனங்க ளானது புதிதீனு
மான்மடி போலச் சுரந்து பான்மழை
பீர்பிட வாய்வைத் துறுஞ்சி யார்கலை
யாய்மதி னுவைப் புரந்துவாழ்கபி யிறகூலே (சஉ)

தத்தாதத் தாத்தத் தன தன
தத்தாதத் தாத்தத் தன தன
தத்தாதத் தாத்தத் தன தன—தனதான.

கொக்கோகப் பாட்டிற் பொருள்வகை
கற்றுசைப் பூட்டுக் கலவியிற்
கொக்கோடற் கோட்டிக் கொடுமைசெய் திடுமானர்
கொப்பேறித் தோட்டுக் குழையழ
கச்சோலைக் காட்டுப் புனையலர்
கொத்தூர்கட் காட்டிப் புதுமல ரணைமீதே
கைக்காசைக் கேட்டுத் துயர்வலை
யெத்தாகப் போட்டுக் கனவிர
கச்சோலிக் கிட்டித் தினமவர் மதவாடை

கற்பூரத் தூட்டிப் பரிமள
 மிக்காகக் கூட்டிக் கலவைசெய்
 கஸ்தூரிக் சோட்டுக் குவிமுலை புணர்வேனோ
முக்கோடிப் பேட்டுச் குருகுக
 டற்சேவற் சோட்டுத் துணையொடு
 முற்பூவற் சூட்டுச் சிறையனம் வயலூடே
முற்றூநற் சேட்டுக் கயல்பரு
 கத்தேடித் தேட்டத் தொடுதிரி
 முத்தீனக் கூட்டக் குடவளை முதுசூலாய்
மைக்காவித் தோட்டுக் குறுமுகை
 விட்டார்போம் பேட்டிச் குமுதமென்
 மட்டேர்முட் டாட்டுச் கமலமொய் மடுவூடே
மைக்காவிற் றோட்டக் கமுகினி
 னெட்டேறிக் கோட்டத் திடைதவழ்
 மக்காவிற் கோட்டுக் கிரியுறை யிறசூலே (௪௩)

தந்த தந்ததன தானதன தந்ததன
தந்த தந்ததன தானதன தந்ததன
தந்த தந்ததன தானதன தந்ததன—தனதான.

 பண்டி லங்கைமலை பீதுதவ நின்றநபி
சென்றி ரந்தவன்மெய் கூறவிலை யுண்டநபி
பஞ்ச மன்றுணவு நீர்பறவை தந்தநபி வெளிமீனின்
 பந்தி கண்டுலகி னூன்முயல்செய் கின்றநபி
பொங்கி ரும்பைமெழு காய்வரளி யன்றநபி
பைங்கருங் கடலின் மீனதவி ழுங்குநபி முழநாறு
 கொண்டெ ழுந்தவுட லாதுசள டார்ந்தநபி
துஞ்சி யும்பருவு நூறளவி னுய்ந்தநபி
கொண்டி டும்பிணியி னுலுயிரி ழைந்தநபி நமுறாது

குன்ற முன்றெரிசு வாலையமெ றிந்தநபி
நந்த வொன்பதுத மூதிகடொ டர்ந்தநபி
கொஞ்சு தண்முனை வியாலரசி மூக்தநபி யதிசூர்ய

மண்ட லங்குடிய தாயினிதி ருந்தநபி
தந்தை முன்புதலை யீர்முனம றைந்தநபி
வங்க மொன்றினெடு வாரியின லைந்தநபி முதுகூவல்

வன்பு முந்தமைய பார்தளவி மூந்தநபி
வெந்து செந்தழலி னீறளவி றந்தநபி
மண்பு ரந்தபிர கூனெடுமெ திர்ந்தநபி யிவர்யாரும்

மண்டி டும்பகையு ளுதருள்பு ரிந்தவன்மு
னின்றி ரந்துதமி யேன்வினைக முன்றகல
வஞ்சலஞ்சலெனவோர்பொழுதுகண்படையில் வெளியாகி

யன்பு கொண்டருள வேணுமினி யெண்டிசையு
மண்டு கின்றபுக ழாபரண மன்றல்கம
ழைந்து பைந்தருவி னோர்பதிபு ரந்தநபி யிறசூலே (௯௪)

தானன தனதன தத் தத்த தானன தனதன தத் தத்த
தானன தனதன தனத் தத்த—தனதான

வால்வளை கலகலெ னக்கற்ற நாண்புலை முகிழ்பதி யக்குற்ற
வார்குழன் மழைகுலை யத்தொட்ட வதிமோக

வாருதி கரைபுர ளத்தக்க வூறலி னிதழ்பருகித் துய்ப்ப
வாயமை மொழிகுழ றிக்கொட்ட நெடுநீல

வேல்விழி யிணைசுழ லச்சுத்த போகமும் வெதுவெதெ னத்
தத்த, வேர்வது துபுகுமெ னக்கக்க வனுராக

வேள்கணை யுயிருருவத்தைக்க நாணமு நிறையுமறக்கெட்ட
வேசிய ரொடுபுண ரப்பட்டு மெலிவேனோ

நீலமை முகிலைய ழைப்பித்து வேயிசை யளிகள்ப டிப்பிக்க
நீடிய கலபம்வி ரித்துப்பொன் மயிலாட

நீதியி னுருவர்த மக்குற்ற சோலைய வளவும்ற ச்சுற்றி
நீர்மழை பொழியவ னுப்பிச்செய் தருவோரே

யாழ்கடல் வயிறுகி ளித்துச்சி வான்முக டுலவுக திற்கற்றை
யாதவ னிடறுகொ டிக்கொற்ற மணியாட

மாடம திலையு டுத்துக்கை வாரண மலைகள்பொ டித்திட்ட
வாரண மறைபயின் மக்கத்தி னிறகூலே (௪௫)

தனதன தனத்தத்தத்த தனதன தனத்தத்தத்த
தனதன தனத்தத்தத்த—தனதான

இடைவழி தனித்துச்செத்த பிணமென வெடுத்துக்குப்ப
மிடுவலு கிழட்டுப்பெட்டை முதுபேய்நாய்

யினமொரு புறத்தைபிக்க நரியொரு புறத்தைப்பற்றி
யிகலிமெ லிபூத்துத் துய்ப்ப வடியோடு

முடிதலைபுழுத் துக்கொட்ட மனமரு வருத்துக்கிட்டி
முறைமுறை நகைத்துத்துப்பி மனுவானோர்

முனிவுடன் வெறுக்கப்பட்ட வழிபினவிடக்கைத்திட்ட
முழுவது மெடுத்துச்சித்த மெலிவேனோ

வடுகள முகத்திற்கொற்ற ரணபறை முழக் கிக்கொட்டி
யடல்விரு தெடுத்துக்கட்டி யிடியேறின்

அதிர்குர லிலிட்டுத்தட்ட ரெதிர்பெறமுடுக்கி குத்தி
யவர்தலை தெறித்துக்கத்த வமராடி

விடையொருமருப்பிற்றெருக்க புலிசெவி டெடுப்பத்திக்கு
வெளிமுகமவெ டிப்பக்கற்ப தருமேவும்

விபுதமெய்து னுக்குற்றுட்க மிகமுரசடித் துத்தட்டி
வினைகடியுமக் கத்தர்ற விறகூலே. (௪௬)

தனதன தனத்தத் தாத்த தனதன தனத்தத்தாத்த
தனதன தனத்தத்தாத்த — தனதான.

முகமலர் மினுக்கிக்காட்டி மதர்விழி பகட்டிக்காட்டி
முகில்குழ லவிழ்த்துக்காட்டி வழியேபுன்
முறுவலை விளைத்துக்காட்டி மிடறிசை படித்துக்காட்டி
முகிழ்முலை குலுக்கிக்காட்டி மதநூலின்
வகைபல விரித்துக்காட்டி விரசம தெழுப்பிக்காட்டி
வளைதுகி னெகிழ்த்துக்காட்டி மடமாதர்
வலியமெ யணைத்துக் காட்டியரசிலை மறைத்துக்காட்டி
மனநிலை யக்கிக்காட்டி யுழல்வேனை
விகசிதக ரத்திற்கோட்டு நெடுமதி யழைத்துக் காட்டி
விரிகடன் முகட்டிற் றேற்றி வெயில்வீசி
விடுசுடர் பரப்பிப்பூத்த பகலவ னொளிப்பச்சேப்பு
விழிகொடு சினத்துப்பார்த்த பெருமானே
கருமணி குயிற்றிக்கோட்டுநிலவுபொன் னகர்க்குட்கீர்த்தி
நடவிய மகத்திற்போற்று மதினுவாழ்
நறைகமழ்புயத்திற்சேற்றுமறி திரையுடுத்துப் போர்த்த
நாருல களித்துக்காக்கு மிறைசூலே (சஎ)

தானத்தானத் தானத்தானத்
தானத் தானத் — தனதான

பாலைத் தேனைப் பாகைப் போலொட்
பார்சொற் பாடற் றமிழ்மாலை
பாவிற் சீரிற் போதித் தாசிற்
பாடிப் பாடிப் புவிமீதே

கால்பொத் தோடித் தேயத் தேடிக்
காசற் றூணற் றறநீசா
கால்பற் றூதெக் காலத் தேநிற்
கால்பொற் றூமப் பெறுவேனே
சாலத் தான்மிக் கோர்தற் கோலத்
தாகப் பாவித் திபுலீசோர்
தாலத் தோரைச் சாரத் தானெட்
டாமற் சாபித் திடுகோவே
யாலைக் கார்செக் காடச் சோலைக்
காவித் தாடச் சிறுதோகை
யாவிச் சேல்செய்க் காடச் சீர்மக்
காவித் தாரத் திறகூலே (சஅ)

தத்தத்தத் தானன தானன
தத்தத்தத் தானன தானன
தத்தத்தத் தானன தானன—தனதான.

பச்சைக்கற் பூரம்வெ ணீறிலே
யிட்டுக்கைத் தாமரை நீள்விரல்
பற்றிப்பப் பாதிய தாய்வகிர் சுருள்பாகு
பட்சித்துக் கோவென வேசியர்
பச்சைக்கச் சார்முலை யாலணை
பட்சத்துக் கேயவர் பால்வெகு பிரியமாகி
யிச்சித்துப் பூவணை மேலிதழ்
முத்திக்கைக் கேபொரு டாவென
வெத்திக்கொக் காடல்கொள் கூடலின் முயலாதே
யெக்குற்றத் தாயினு மேவரை
யத்தக்கக் காரிய மேயல
ரட்சித்துத் தாளினி லாள்வது கடனாமே

யச்சுக்கட் டாகிய பார்மிசை
முற்றக்கற் றாகம நூல்களை
யற்புத்துற் சூதர்க ளாயிர மகலாவோ

ரர்த்தத்தைக் கூறுமெ னுவலர்
புத்திக்கெட் டாதென காரண
மத்தைச்சொற் சோர்வுப டாதுரை புகல்வோரே,

மச்சத்திற் கோனபி யூனுசை
வைத்துக்கற் போடுமை வார்கடன்
மத்திக்குட் காவல்செய் தாள்பர னருளாலே

மற்றெப்புப் பேசவொ ணாதபு
யத்திற்கஸ் தூரிகள் வீசிட
மக்கத்துக் காசல மேவிய விறசூலே (சகூ)

தானன தத்ததன தானன தத்ததன
தானன தத்ததன—தனதான.

மானரி டத்தின்வெகு பேராசை வைத்தமிர்த
வாயூறி நிற்குமொரு வினையாளன்

மாபாத கத்தனுயிர் சேகாகு லத்த ழலின்
மாயாது மயக்கலைய மறவாதே

ஞானேது மற்றபய லானுலு முத்திபெற
நாகாலை யத்துறையு நபியேனு

நாமோதை யப்பெயர்கொள் காசிமெ னப்பகரு
நாவாண னுக்கு னருள் புரிவீரே

சேனுப தித்தலைவர் நால்யார்கண் மெய்க்க வெழு
தேசாதி பத்தியமெய்த் திடுகோவே

தேவா திகட்கினிய மாரா யமிக்க வொளிர்
சேனு டுசுற்றி வரு மருமேதே
கோனே டுரைத் தருள்க பீபே யும்மத்த வர்கள்
கோவே கடைக்க ணரு ளியகோவே
கோடா ழுகத்தபுது லாதா மளித்தபுகழ்
கோசா லமக்க நக ரிறகுலே (௫ய)

தாந்தத் தனதன தாத்தன தந்தன
தாந்தத் தனதன தாத்தன தந்தன
தாந்தத் தனதன தாத்தன தந்தன—தனதான.

பாம்புக் கொருதலை காட்டிய ருங்கயன்
மீன்கட் கொருதலை காட்டும ருங்கென
பாங்கிற் செயுதொழில் காட்டிமு யங்கிய முலைமானார்
பாழ்ஞ்சிச் சிலியென வேய்த்திடு மன்பினை
வேண்டிப் புணரிறு மாப்பின்ம யங்கிமெய்
பாண்டித்தியமொடி ராப்பகல் சிந்தனை செயுமேழை
தேம்பிக் கவலைவி டாப்பிர வஞ்சவ
ஞந்தத் துறுகலி யாக்ரம வெம்புலி
தேண்டித் தனிபிடர் தாக்கு முன் வந்துள மறவாதே
தேங்கற் பகதரர் மோக்ஷம டைந்திட
வாஞ்சைக் கனவெகு தாப்பிரி யங்கொடு
தேர்ந்திப் பொழுதுக் டாட்சப தந்தனை யருள்வீரே
ஏம்பிப் பெறுமொரு தாய்க்கொரு சந்ததி
தோன்றித் தனதுயி ருத்தி குலைந்துயி
ரேங்கிப் பறிபட வாத்துமம் வந்தவ னுடன்மீள

வேய்ந்துத் தமனென வாக்கிவி யந்துதி
காந்தத் தினுமிசை யார்த்தமி குந்தும
னேந்திப் புகழ்செய்ப ராக்ரம வென்றிகொ　ணடியோரே
யாம்பற் குறுமுகை பூத்தத டஞ்சிறு
சேம்புற் பலமலர் தூற்றித ழம்புச
மார்ந்துற் றிளையவ ராற்சிறு நன்முக　ழுகழ்சோலே
யான்சொற் கடுவன்வி டாய்த்த பெண் மந்திகை
பாய்ந்தப்புறம்விள நீர்க்குலே யொன்றற
வாய்ந்திட் டுதவற பாத்திலி ருந்தவெ　மிறகுலே (௫௧)

தனனதன தனனதந்த தனனதன தனன தந்த
தனனதன தனன தந்த —தனதான

உரவுமி ரு ளறவி ளங்கு சுடரைமல ரெனம யங்கி
யுயிர்பிரிய விழுப தங்க　னெனமாயு
முடலேநிலை யெனவு நம்பி மகளிரனு பவமு யங்கி
யுலேமெழுகி னுருகு நெஞ்சன்　வினேதீர
விரிகமல பதமி ரண்டு மெனதுதலே மிசைசுமந்து
விரகனு மதருள்வி ரும்பி　யெதிர்காண
விழியருவி சொரிய வெம்பி யழுதழுது துயர்விளம்ப
விரைவினொரு பொழுதிரங்கி　வரவேணும்
நிரைதரள மணிசிவந்த மணிபசிய மரக தங்க
ணிறையுமழ கொழுகுகின்ற　வலர்தூவி
நிலவுமொரு புடைத யங்கவெயிலுமொருபுடைதயங்க
நிழலுமொரு புடைதயங்க　வமரேசா
மருவுபுன லமுதமொன்றின் விளையுமது வமுதமொன்றின்
மதுரமிகு மமுதமொன்றி　னருள்காலே

மகிமையொரு பொருள்விரிந்து தருமவையி னுருமருந்து
மௌனமுட னினிதருந்து மிறசூலே (ருஉ)

தந்ததன தானதன தந்தான
தந்ததன தானதன தந்தான
தந்ததன தானதன தந்தான—தனதான

குங்குமப டீரநறை கஸ்தூரி
வண்டவிடு மாரவட மிக்கான
கும்பமுலை பாதிதெரி யப்போர்வை புனையாடை

கொந்தளக பாரநெகி ழச்சோதி
யின்பநகை யாடியமு தப்பார்வை
குண்டலம ளாவியுரு விப்பாய மயில்போலே

மங்குநெடு மாடமறு கிற்கூட
நின்றுதலை வாயில்குறு கித்தேடி
வந்துமகிழ் வோடுகல விக்கான விலைகூறு

மங்கையர்க ளாசைசல திக்காவி
மூங்கியுழ லாதுகதி பெற்றேக
மந்திர மெய்ஞ்ஞானநெறி தப்பாம லருள்வீரே

யெங்கள்குல தீபமகி மைக்கார
முந்தவரு தேவர்முத மைக்கார
வென்றுமக லாதவிள மைக்கார புவனாதி

யெங்குமொரு வேதசமை யக்கார
செம்பொனுல கானுநில மைக்கார
வெண்டிசைய ளாவுவிரு துக்கார மதிவாழ்

துங்கசடி மார்கடலை மைக்கார
நம்புமடி யார்களுசி தக்கார
துஞ்சுதலி லாதவிர தக்கார வெழிறாய

தும்பிமகு மூதினுதைய யக்கார
வஞ்சுபொழு தாணதொழு கைக்கார
துன்றுகலை ஞானமுறை மைக்கார விறசூலே (ருங)

தாத்தத்தன தான்ன தந்தன
தாத்தத்தன தானன தந்தன
தாத்தத்தன தானன தந்தன—தனதான.

வாக்கிற்கவி மாலைவ ழங்கிட
வேத்திப்பெரி யோனைவ ணங்கிட
வாழ்க்கைப் பொருளானகு டன்கொடை யதுவீச
வாய்க்கப்பறு லாம்விர தங்களை
யாட்டைக்கொரு மாதமு யன்றிட
வாழ்த்திக்கஃ பாவலம் வந்திட நெடிதான
வாய்க்கத்தவு வாய்மைபு ரிந்திட
மாாக்கத்தறி வேதமு ணர்ந்திட
வாட்சித்திரு மாமறை மந்திர வகையோத
வாற்புத்துணை யாயினு நன்றியி
னுத்தைக்குண ஞனவ னின்றுப
ரார்த்தித்திட மூதிய மொன்றினி யிசைவீரே
போக்கற்றவ பூஜைகல் பண்டொரு
பேய்ப்புத்தியி னுலெதிர் வந்துகை
போட்டுப்புய மீதும லைந்திட முதியோர்கள்
போற்றக்கொடி யோன்முது சென்பும
லாட்டிற்பொடி யாய்விழ வன்றுடை
போய்ப்பித்தரின் வீதிபு லம்பிட வடர்கோவே
காக்கைக்கொடி யாளைம ணந்தலர்
தூற்றப்படு காபர்க டங்கிய
கார்க்கட்டழல் சேர்நர கங்குடி புகுதாதே

காத்துப்புகழ் தீனவர் தங்களை
மோட்சப்பதி வாழ்வுபெ றும்படி
காட்சிப்பர லோகம டைந்தரு ளிறகுலே (௫௪)

தனதன தனதன தத்ததத்தத தானன
தனதன தனதன தத்ததத்தத தானன
தனதன தனதன தத்ததத்தத தானன—தனதான.

மழைவளர் சுதைமதி லெட்டுக்கட்டு மாளிகை
யெழின்மண வரையொளிர் கச்சுக்கட்டின் மேலிள
மடலவிழ் விகசித பிச்சிப்புட்மாமல ரணைமீதே
மதுகர மிடறிய முத்துக்குச்சு வார்குழல்
கவினுற வெழுதிய பச்சைப்பொட்டு மாயொரு
வளர்பிறை யுளதெனி ஞெப்புக்கொப்ப தானுதல் விலைமாதர்
இழைவளர் தமனிய வெற்புச்செப்பு நாண்முலை
முகடுழு திடவென தற்புப்பொற்பு யாஜல்
விணைபுணர் கலவிதி ளைத்துக்கெட்ட பாவியை வரையாதே
யிடர்பவ மிடிமையி ழுக்குற்றத்தி காரமு
மலமற மனமொரு சற்றுப்பட்ச மாய்வர
விதுநல சமையமி ரட்சித்திட்ட சாபல்ய மருள்வீரே
யழுகிமெய் மனிதர்பு ளுத்துக்கொட்டு நோய்களு
மிழிவுறு மொருபதி னெட்டுக்குட்ட ரோகமு
மமரினு மடியவர் வெட்டுப்பட்ட காயமு மொழிவோரே
யனைகுள றிடவுயிர் விட்டுச்செத்த பாலனை
மறுபடி யுலகினெ ழுப்பிச்சொற்க லோகமு
மருளொடு பெறும்வகை திட்டித்திட்ட காருண்ய முடையோரே
முழைவளர் புலியென வெற்றிக்சுத்த வீரர்கள்
கழைசுழி புகர்முக நெற்றிப்பட்ட யானையின்
முழவுறழ் புயமன்னர் திக்கிற்சத்து ராதிகள் சதகோடி

முடிதொழு திடுதிறை கட்டப்பட்ட மேவிவெ
ணிலவுமிழ் கவிதையுள் வைத்துச்சத்த லோகமு
முழுவது மரசுசெய் மக்கத்துக்கு நாயகரி றகூலே. (ருரு)

தனனதன தந்தந்த தனதான தான
தனனதன தந்தந்த தனதான தான
தனனதன தந்தந்த தனதான தான—தனதான.

கலியுகமி யங்குந்த னிலைபேறி லாத
மனிதஜன னங்கொண்ட வயதாக நூறு
கடிதிரவு துஞ்சுங்க ளொருபாதி போது முதிராத

களிமதலை யெம்பென்று பதினாறு தேயு
மிதனிடையி னஞ்சுண்க ணணிகோதை மாதர்
கனதனம லம்புண்டு புணர்காம நோயு மொழியாதே

வனுசவலை துன்பங்கள் வெகுகோப தாப
நரைதிரைமு திர்துண்டி பலகார மாறி
வசைவருமை பங்கங்கொள் பிணிபாவ நாளு மிளையாதே

வளரிரும லுங்கிண்கி ணெனமேல்கை கால்கள்
வளிஜலம லஞ்சிந்தி யெனதாவி போமுன்
வாமுதவி யின்றுங்க ளருள்ஞான வாசி யருள்வீரே

குலவுநெடு வெண்டிங்கண் மணிமாட மீதி
னிலமகளிர் செஞ்சந்த மகர்வாச வீசுங்
குளிர்புகையி டுங்கொந்த ளகபார மான வதன்மேடை

குடிகொள்புய லென்றன்ற னயலாடு நீடு
கலபமயில் கண்டம்பு வளவாயி னூடு
குறுமுகைய ரும்பப்பு னகையாட நாடி யொருகோடி

நிலவினிதி ருந்தும்பு னினமார மூரல்
முழுமுகைவி ரித்தந்தி நிலவூர வூரு
நிழலுமிழ்செய் குன்றிந்து சிலகாலு நீர்மை யலைமோதி

நிறைபிரளை யம்பொங்கி யெழுவாரி நீரி
னுவர்புலவெ றிந்துந்தி சுழியாறு ாயு
நிலைபெறவ ளங்கொண்ட மதிஞவில் வாழு மிறகுலே. (ருசு)

தானன தந்தன தந்த தந்தன
தானன தந்தன தந்த தந்தன
தானன தந்தன தந்த தந்தன—தனதான.

பூமரு வும்புய லுஞ்சி வந்தெழு
பாதியி ளம்பிறை யுங்க னங்குழை
பூசலி டுங்கய லுஞ்செ ழுங்குமிழ் மலர்மேவு

பூரண சந்திர னுங்க னிந்தமு
தூறுந றுங்கனி யுங்கு லுங்கிய
பூரண கும்பகு டங்க ளுந்தளிர் மிளிர்சீத

காமர்ப சுங்கொடி யுஞ்சு ணங்கணி
யாடர வின்பட முஞ்சி றந்தலர்
கானகு சென்தளி ருங்க லந்துகை புனைமாதர்

காதர வின்படி வந்த ணைந்தவர்
போகநி னைந்துநி னைந்த யர்ந்துழல்
காமுக னென்று தெ ளிந்து நின்பத மடைவேனே

மாமைநெ டுஞ்சுடர் பொங்கு திங்கணி
லாவிரி யுங்கதிர் வெண்ப ளிங்கியின்
மானில மன்றல்வி ளைந்தி டும்புது மணவாடை

மான்மத மெங்குநி லங்குளிர்ந் தெழு
பூடுகள் குங்கும மின்செய் குன்றுகண்
மாமணி தென்றலி ளங்கொ ழுந்தலர் நறைவீசு

தேமலர் சிந்துபொ தும்ப ரின்கரை
மோதிர சந்தரு மென்க ரும்புமிழ்
தேனினு மின்சுவை கொண்ட தண்பணை மயமாரு

தேவம ணங்கமழ் மஞ்ச னந்திக
ழாறுபொ ருந்திவ ளங்கெ ழும்புகழ்
சேரதி னென்றொரு விண்பு ரந்தரு ளிறசூலே (ருஎ)

தந்த தத்தன தனதன தனதன
தந்த தத்தன தனதன தனதன
தந்த தத்தன தனதன தனதன—தனதான

தங்கள் கைப்படு முடைமைக ளொருவினை
யங்க தற்குறு தமரர்க ளொருவினை
தந்தி ரத்தொடு திருடுவ ரொருவினை கொடிதான
தண்டி கைத்துரை யரசர்க ளொருவினை
துஞ்ச றக்கொலை கொளுநபவ ரொருவினை
தண்ட மிழ்த்தெரி புலவர்க ளொருவினை பிர்யமான
வங்க ணப்பெய ரவரதி லொருவினை
சிண்ட ளப்பவ ரொருவினை சிலுகுசெய்
வஞ்ச கப்பொது மகளிர்க ளொருவினை தொலையாத
வம்பு டைப்பல வினையுள பொருடனை
நம்பி வைத்திரு நிலையென வுணர்பவர்
வந்த தெப்படி யுமதுபொன் மலரடி பெறுவாரார்
வெங்க விப்பகை யிருளற முயலனு
திங்கள் வட்டவெ ணிலவொரு குடையினில்
வென்ற லைக்குரை கடல்படு முலகருள் புரிவோரே
வென்கொ டுத்தகலமரர்க ளடியுறை
தந்த டித்தலை முடியுழு திடவமர்
வென்று முத்திரை யிடுபுகழ் புஜபல நயினாரே
தெங்கு நெட்டிலை மடியமெய் முகிறவழ்
பைங்கு லைக்கமு கிலைசெழு மலர்விரி
செண்ப கத்தனிழ கைதைமு ளிலைபடு கனிவாழை

தென்றவித்தரு வழிவிரி தலைபசி
வெண்குருத்திலை கிழிபட வுகழ்கய
றெண்டிரைத்தட வயனகர் மதினெவெ மிற்சூலை (௫அ)

தந்தந்தந் தந்தந் தந்தன
தந்தந்தந் தந்தந் தந்தன
தந்தந்தந் தந்தந் தந்தன-- தனதான.

அஞ்செஞ்செங் கஞ்சம் பிஞ்சடி
நஞ்சும்பிஞ் செஞ்சும் தும்பியு
மம்புஞ்சிந் துஞ்சுஞ் சஞ்சன விழிவேலு
மந்தந்தங் கும்பம் பாபர
மும்பந்தங் குன்றுங் குன்றிவை
யஞ்சஞ்சும் புஞ்சங் கொங்கையு மிளைஞோர்கள்
கொஞ்சுங்தெண் பண்கண் டுஞ்சொலும்
விம்பம்பம் பண்பின் சஞ்சிவி
கொங்குண்டொண் டுஞ்சுங் கிஞ்சுக மலர்வாயுங்
கொண்டங்கந் தங்கஞ் சண்பக
மென்றும்பண் பொன்றும் பெண்சிறு
கொம்பென்றன் கண்கண் டிங்கித முறுவேனை
வஞ்சம்புன் கண்கண் டம்பவம்
வெம்பும்புன் சிண்டுங் கொண்டிய
வம்புந்துன் பெய்ங் கொண்டற வொருநாளே
வந்தின்பந் தந்திங் குய்ந்திட
வென்றுன்றன் றெண்டஞ் செய்பவ
வம்பின்றுன் றஞ்சுஞ் செஞ்சர ணருள்வாயே
விஞ்சுஞ் செஞ் சந்தங் குங்கும
முங்குந்தண் பொங்குந் திங்களின்
வின்பந்தங் குந்தென் சுந்தர வரமாதர்

வெண்பொன்செம் பைம்பொன் பந்திசெய்
குன்றெங்குந் தென்றுஞ் சம்ப்ரம
விண்சொந்தம் பந்தங் கொண்டரு ளிறைகூலே. (௫௬)

தானத் தானன தானன தானன
தானத் தானன தானன தானன
தானத் தானன தானன தானன—தனதான.

வாளிற் கூர்மைய தானது நீடிய
ரோமக் காலினு நேர்மைய தானது
வாதைப் பாணர கேழ்மிசை யானது நெடுநாள்போய்
வாரத் தாழ்கரை காணரி தாயது
கூனப் பாடக மேவலை வானது
வாய்விட் டாரும ழுமிட மானது குபிரானோர்
தாள்வைத் தேநட மாடவொ ணாதது
தீன்மிக் கோர்செல வேலகு வானது
தானத் தேவர்பொ னூர்வழி யானது பலகோடி
தானைப் பாமுவ மானம தானது
பாலத் தேதடு மாறிவி ழாதொரு
தாயைப் போலெனை யாளநி வீடினி யருள்வாயே
கோளத் தேகுபி ரானருள் கூர்வது
நேர்சத் ராதிகள் வாள்வலி போவது
கோபத் தீயுலை யூடுபு காதது கழுகோடே
கோடிக் காகப டாமிசை யாய்வது
காலற் கேயுறு தோழமை யாயது
கோணெட் டேரவெள் வாய்கவை நாவது தமதான
வாள்சொற் றேலிய ரோடுரை யாடுவ
தானெய்த் தோர்கட வாய்மடை காலுவ
தாடற் போதில்பு காறெனும் வாளது வுடையோர்சீ

ர்ஸித் தேமுத ளூறு சோர்புலி
போலுற் றேதிரு வாழிகொள் பேறுடை
பாலிக் கேதிரு மாதுல ராகிய விறகுலே. (சுய)

தனனதன தாத்த தனனதன தாத்த
தனனதன தாத்த—தனதான.

இருபெரிய கோட்டி நிலவுவட மீட்டி
யிளமுலைகள் காட்டி மடமானார்
இனியபெரு பாட்டி வலுகவலை பூட்டி
யிசையொழுகு பாட்டி னியல்பாடி
விரகவனல் மூட்டி யெனதுயிரை வாட்டி
விகடமுறு கோட்டி கொளலாமோ
வினையகல வோட்டி யிருசரண நீட்டி
விரைவினொரு வீட்டி னருள்வீரே
யரமகளிர் தேட்ட மொடுபுனலி லாட்டி
யருமைவிழி தீட்டி விலையேறு
மழகுதுகில் சூட்டி மதுரவமு தூட்டி
யமரர்வள நாட்டி னுறைவோரே
முரண்மகுட சூட்டி னரவைவர மீட்டி
முடிகுலைய வீட்டி நகர்காகா
முதல்வன்மனை யாட்டி மகவைமண நாட்டி
முனம்வ துவை வேட்ட விறகுலே. (சுக)

தனன்தன தனனதன தந்தத் தனத்ததன
தனனதன தனனதன தந்தத் தனத்ததன
தனனதன தனனதன தந்தத் தனத்ததன — தனதான.

எவரைமடி தடவிமுத றண்டிப்பறிப்பதினி
யெவரையிடைவழியின்மிக நம்பிச்ச திப்பதினி
யெவரையினி துயிர்பிரிய நஞ்சைக்க லப்பதினி நடுவூர்போ
யெவரைவளர் துகிலினிதி வஞ்சித்தெ டுப்பதினி
யெவரையுறு படிறுசொலி யண்டிப்பி ழைப்பதினி
யெவ்வரையின முறையெனவி ணங்கிக்கெ டுப்பதினி யெனநாடி
யவனிதனி லிரவுப்ப கலிரதப்ப வத்தொழிலி
னெழுகுமன நினையுமொரு வஞ்சப்பு லைக்கயவ
னவகுணமு மலமுமற நிந்தித்து மக்குரிய வடியோர்க
ளவர்செயலு மியலுமுய லுந்தத்து வத்திநெறி
பொறையறிவு நிறைபுறுதி யும்பொற்றி ருக்கவிலை
யடிமைதனை யடியினையிலன்புற்றி ரக்கமுட னருள்வீரே

யுவகையுறு மபுஜகல ரும்பெட்ட கத்தினிடை
துகில்பொதியு மொருகிளியை யங்கைக்குள் வைத்தணுகி
யுளபொருண்மையுரையுமெனமுந்தக்கணித்தநிறை விலைகூறி
யொளிர்தரள மணியிதுவ யின்பச்சி லைப்புழுவு
முயிரினொடு திரியுமென நந்தத்த கர்த்ததனி
னுறுபுழுவையதிசெயம்விளம்பச்செய்வித்தவரமுடையோரே
பவளவில விதழ்மகளிர் செங்கைக்கு டத்தினிடை
முகிழ்விரியு நறியவர விந்தப்பொ குட்டினிடை
பசியமர கதமணிசெய் குன்றிற்ற யக்கமுகின் மடலூடே
பசியகுட வளைமணிகள் சிந்திக்கொ ழிப்பநெடு
விழுதுவிடு கதிர்நிலவி லங்கத்தி ருக்துலவு
பதுமநிதி படர்சுனைவ ளஞ்சுற்று மக்கநக ரிறசூலே (௫௨)

தந்த தானன தத்த தந்தன
தந்த தானன தத்த தந்தன
தந்த தானன தத்த தந்தன — தனதான.

பஞ்ச வாசம ணைக்கு மஞ்சன
பஞ்ச கேசமு டித்து நின்றிசை
பஞ்ச தாரைமொ ழிக்க ருங்குயின் மடவார்வேள்
பஞ்ச பாணமி றைக்க வன்பொடு
பஞ்ச மாசய னத்தில் வந்தொரு
பஞ்ச பாதக னைப்பு ணர்ந்திட லொழியேனே
தஞ்சம் வேறிலை முற்றி னும்பிர
பஞ்ச மானவ லைக்கு ளொண்படு
சங்க சாரமி கச்சு மந்தவன் முதனாளோர்
தம்பி ரானரு ளிற்ச மைந்தன
வங்க சாதன வற்றி லொன்றுகோ
றந்து பாவைய னுக்கிர கந்தர வரவேணும்
வஞ்ச மாயம றக்கு றும்புடை
நெஞ்ச பூஜகல் கைப்பெ ரும்படை
வந்து தேடிய டித்தொ டர்ந்துபின் வரவேபோய்
வண்க ணீடும லைப்பொ தும்பினு
றைந்த காலைந டுக்கு றும்படி
வண்கை யோரபு பக்க ரஞ்சியி னுரையாட
வஞ்ச நீரென வற்பு தந்தரு
பொங்கு பாய்விரி கப்ப லுந்திரை
யம்பு ராசியு மொக்க முன்பெய்த வருள்வோரே
யந்த காரவி ருட்பி ழம்பெறி
சந்தி ரோதைய வட்ட வெண்குடை,
யங்கண் ஞாலம தைப்பு ரந்திடு மிறகுலே (௬௩)

திருப்புகழ்.

தன்ன தனான தன தந்தத் தனந்த தன
தனன தனன தன தந்தத் தனந்த தன
தனன தனன தன தந்தத் தனந்த தன — தனதான.

இளமை யுடமை வெயின் மஞ்சட்கி சைந்த தென
வுருவின் மகிமை நிறை திங்கட் கொழுந்த தென
வியல்பு தருகுண மும்மொரு விந்தைப் பதங்களென வெழிலோவா
னிடுவி லெனவ டிவி லங்கித் திறம்பு மென
வுயிரி னிலக ருவு மும்புட் பறந்த தென
வினிய மனனு நிற வெண்கற் பளிங்கி யென வினைமாயம்
வளரு முடலகழ் புன்வி லின்புற் புதங்க ளென
வளமை கிளைபி ரிளை யந்தத் திவந்த தென
வறிது நடைகொள் பிற வஞ்சப் பவந்த மென வுணர்தீனோர்
வழியி லொழுகு மொரு தொண்டர்க் கிரங்கி யும
திருந்தை கம லமுகி ழுங்கட் டவிழ்ந்து பைய
மலர டியின பையமென வந்தித் திறைஞ்ச வருள் புரிவீரே
களப முழுகி யப சும்பொற் றசும்பை மழை
முகடு தடவும் வட குன்றத் தைவென்ற முத
கலச மணிசு டர்செய் கும்பத் தைவம்பு பட வெனமோதி
கமல முகிழி தரு ளம்பைக் குரும்பை நிகர்
மிர்கம தபரி மள வம்பர்க் குழம்பு பல
கலவை திமிரு மிரு கொங்கைக் கிணங்க வக னெடுவானின்
வெளியி னெழுபருதி யஞ்சச் சிவந்த மணி
வடமு மணிவ டமு மொன்றிக் கிடந்து புது
வெயிலு நிலவு மென வெண்டிக் கினுங்கி ரண வொளிவீச
வெளிய வனமென னடை கொஞ்சிப் பயின்ற வர
மகளிர் பிருத வுசெ னுஞ்சொற் கமென்ப தியின்
மிகுபு கழினர் பொருளைநமபிப் பணிந்து தொழு மிறசூலே

தனத் தந்தத் தனத் தந்தத்
தனத் தந்தத் தனத் தந்தத்
தனத் தந்தத் தனத் தந்தத்—தனதான

பொகுட் டின்கொத் துடைத் தங்கத்
தகட் டின்கட் டிதழ்க் கஞ்சப்
பொறிக் கும்பொற் பமைக் குஞ்சற் பனவாடை
பொறுக் குங்கற் புரச் சந்தத்
துணைக் கொங்கைப் பொருட் பெண்டிற்
கெதிர்த் தந்தத் தொழிற் கன்புற் றவர்மாயப்
பகட் டுங்கட் கடைக் குஞ்சிற்
றிடைக் கும்பொற் றொடிக் குங்கட்
டுடுக் கும்பட் டுடைக் குந்தட் டழியாதே
பவத் துன்பத் தினை துண்டித்
தறத் தெண்டித் துரத் தொண்டற்
கணித் தின்றைப் பதத் தின்பத் தருள்வினே
யகத் தின்கட் பொரிக் குஞ்சட்
டியிற் பண்டுட் புடைக் கெண்டைத்
துடிப் புந்துப் பிடக் கண்டொப் புரையாடி
யயத் தின்குட் டியைக் கண்டிக்
கவித் தன்பார்க் களித் தென்பைக்
குவித் தங்கத் தெழுப் பும்சற் குணவாழ்வே
செகத் திங்கட் குடைச் சிங்கக்
கொடிச் சங்கக் கொடை செங்கைத்
திறற் சங்கைத் தனச் சம்பத் துடையோரே
செழிக் குங்கற் பகக் கொம்பைப்
பழிக் குங்கற் புடைப் பெண்கைப்
பிடித் தம்பொற் சுவற் கம்புக் கிறகுலே. (௬௫)

தனனதன தான தத்த தனனதன தான தத்த
தனனதன தான தத்த—தனதான.

நினதுவழி யேந டக்க நினதுபெய ரேவ ழுத்த
நினதுபுக ழேப டிக்க மறையோதி

நினதுஜெப மேஜெ பிக்க நினதடிமை யாகி நிற்க
நினதுபத மேது திக்க வதனாலே

யெனதுபவ மேது டைக்க வெனதுமல மேகெ டுக்க
வெனதுபகை யேது டைக்க வொழியாத

யெனதுகவி யேத டுப்ப வெனதுதுய ரேத ணிப்ப
வெனதுவச மேடைக்க ணருள்வாயே

வினைமுரச மேமு ழக்க வணிகவிகை யேக விப்ப
விரிகவரி கால சைப்ப விருபாலும்

விருதடவி டால்பி டித்து வருமரசர் மோலி தத்த
விடுபடைஞர் மாள வெட்டி யடர்சேனை

முனையழிய வீழ்பி ணத்தை நரிகழுகு நாயி ழுப்ப
முடுகியடு பேய்பு சிக்க வடிவாளான்

முழுதுமம ராடி வெற்றி கொளுமபு துலாசு புத்ர
முதன்மையர சாளு மக்க விறகூலே. (கூக)

தனன தன தனன தன தந்தந் தனத்த தன
தனன தன தனன தன தந்தந் தனத்த தன
தனன தன தனன தன தந்தந் தனத்த தன—தனதான

கடலமுத கலசமிடு கும்பந் தகர்த்து வெளி
முகடுதொடு குடுமிவட குண்டந் துழக்கி யடர்
கரடகட களிறுபடு தந்தங் குறைத்து மடன் முசழாது

கடிகமழு மடுவினரவிந்தங் குலைத்து வெயில்
பளபளென வொளிருமொளிர் தங்கம் புதுக்குடைய
கடமலைய விடமலைசெய் சந்தந் தரித்தகன . தனமாத
ரிடுகுமிடை துவளவிதழ் வின்பஞ் சுவைத்தமுது
பருகியர மகளிரொடு துன்றுஞ் சுடர்க்கிரண
விமையவர்பொனுலகுதனிலின்பஞ்சுகித்தவர்களுடன்வாழ
விரவுபக லுமதுபிரபந்தஞ் சொலிப்புகழு
முழுதும் விலையடிமை யுடதுன்பந்தொடைத்தொழிய
விருசரண வனசமலர் தந்தன்பு வைத்தருள வரவேணும்
புடவியெழு நிலைகுலைய வந்தண் சுருட்டுடல
நெறு நெறென விடமுகிழ்பு யங்கன் றுணுக்கவுயர்
புலமுகடு பொதிநெரிய வண்டங் களுட்கமறி திரைவீசு
புணரியறல் சுவறியுறு பங்கங் கொளத்தடவு
குலவரைகள் கிடுகிடென மண்டுந் திசைக்கரிகள்
புடைபெயரவியனடமி டுங்கந் துகத்துல்துல் மிசையேறி
யடருமபு சகல்கொடிய நெஞ்சம் பிளக்கவவன்
விடுபடைஞர் நெடியவுட றுண்டம் படக்குருதி
யலைபெருகு பிரளயந்தி யெங்கும் பரக்கவடு களமீதே
யலகைகொடு நரிபலக வந்தம் பெறப்பொருது
விறல்கொளலி யெனும் வலிய சிங்கந் துதிக்கவர
மருண்மதினமொடுபுவனசங்கம்புரக்குநபியிறகுஞ்சூலே. (சுஎ)

தனதன தன்த்த தானதந்தன
தனதன தனத்த தானதந்தன
தனதனி தனத்த தானதந்தன—தனதான.

புதும்லர் விரித்த பாயலென்றிரு
ரணகள முகத்தின் மீறிவந்திரு
புருவவில் வளைத்து நீலனஞ்சுமிழ் விழியான

புரைகணை தொடுத்தெ ழுவியுண்டணி
யிளமுலைமதத்த யானை கொண்டுகழ்
பயமுழுது சுற்று தானை பின்செல வொளிகாலு

மதிமுகம் வெயர்ப்ப வாண்மருங்குயர்
கொடியசை யமிக்க தோநிதம்பமுன்
வலவரினு கைத்திட சாரிவந்திட வெகுபூசல்

வரிவளை யொலிப்ப வேதினம் புணர்
கலவியெனு முய்த்தமே புரிந்திடு
மகளிர் விரகத்திலே மயங்குத லொழியேனோ

முதுகிடை புடைத்த கூனிமிர்ந்தெழ
வமுதென வளர்த்த கேசபந்தியு
முகில் கருநிறத்த தாயிருண்டிரு வயின்வீழு

முலையிப மருப்பெனுவளர்ந்திடை
பலபலென வொக்க வேயுதிர்ந்திடு
முறுவன்மணி முத்த நேரரும்புமெய் யொளிபோகி

விதறி யறவற்றியேதிரங்கிய
முகநிலவு வட்டமாயுண்மயங்கிய
விழிகயலை யொப்பவேபிறழ்ந்துறு வயதாலே

விழு கிழவிதற்சொ ரூபநந்திள
மகளிர்களின் மிக்க வாலிபம் பெற
விரைவிணருண் மக்க நாடுறைந்தரு ளிறகுலே.(௬அ).

தனதனத் தனதனத் தனதனத் தனதனத்
தனதனத் தனதனத்—தனதான.

பயிலியற் பரியினிற் பனைமுகக் கரியினிற்
பருமணிச் சிவிகையிற் றினமேறி

பருதியொத் தரியணைக் கொலுவினிற் பரிவினுற்
றுறையுமைக் குபிருடைப் பரராஜ
ருயர்துரைத் தனமறக் குடிகெடுத் துறுகலிப்
புலிபிடித் துழல்பசிக் கிரையாகி
யுலகினிற் பலியெடுத் துணவிதித் துயிர்தொலைத்
துடல்கனத் தொருவனைத் தொழுவேனோ
குயின்மொழிச் சிலைநுதற் கிளியுகிற் பிறைவடக்
குடமுலைச் சுடர்மணிக் கொடியூசற்
குழைமுகிற் சுரிகுழற் சசிமுகத் தளிரடிக்
கொடியிடைப் பிடிநடைக் குமிழ்மீதூர்
கயல்விழிக் குறமுகைச் சிறுநகைக் கனியிதழ்க்
குலதெய்வத் தரமகட் புணர்காயக்
கலவிமற் றனுபவித் திலகுகற் பகநகர்க்
கரசளித் தருண்மக்கத் திறகூலே. (கூகூ)

தனந்தனத்தன தானன தானன
தனந்தனத்தன தானன தானன
தனந்தனத்தன தானன தானன—தனதான.

அரும்பொ ருட்பர ஞானமு மோனமு
மிரந்த வர்க்கிடு தானமு மானமு
மறந்த ழைத்தன போதமு நீதமு மனதாலே
யளந்த ளப்பறி யாதவ் மாதவ
மிழந்து குத்திர வேகமு மோகமு
மடைந்து மற்றவ ஞாயமு மாயமு மொழியாதே
விரும்பு கட்கொலை சூதினும் வாதினும்
முயன்று கற்பினை சூழ்வினை யூழ்வினை
விலங்கு பட்டுழன் மோசனை நீசனை வரையாதே

விரைந்த ழைத்தெனை மேவுலி வாவெனு
நடங்கு பொற்கொடி நீழலின் வாழ்வுற
விசும்பி னிற்கடை நாளினி லாழ்வது கடனுமே
முரம்பி னிற்செறி பூழியின் மேழியி
னெருங்கு கற்புழை வாசலி னூசலின்
முடங்கு நெற்பொலி சாலியின் வேலியின் மடமாதர்
முகந்த கைக்குட நீரினி லேரினி
லாங்கி னிற்கரு மேதியில் வீதியில்
முழங்கு னெட்டகழ் கேணியி லேணியி லுகழ்சேலார்
வரம்பு டைத்தெழு வாரியி லேரியி
னறும்பு னற்படு காவியி லாவியில்
வளம்ப டைத்துயர் சோலையி லாலையி னறைமாரி
வளங்கு பற்பல தாழையில் வாழையி
னெடுந்து கிற்கொடி மேடையி லோடையில்
வலம்பு ரிக்குல மூர்மதி நாவள ரிறகுலே. (எ0)

தானதானன தத்ததந்தன
தானதானன தத்ததந்தன
தானதானன தத்ததந்தன—தனதான.

மாதர் சீறடி பச்சி ளந்தளிர்
நாக வானல்குல் புட்ப தண்சுனை
மாய நூலிடை பொற்ப சுங்கொடி முலையானை
மாசி லாமுக பத்ம பங்கய
மால வேல்விழி நெய்ச்செ ழுங்கயன்
மாலை தாழ்குழன் மைக்க ரும்புய லெனவேபா
தாதி கேசமு முற்று ணர்ந்துவ
மான மேவுவ மித்து நெஞ்சுழ
வாசை யாகிய பிச்செ ழும்பிட வெறிதேபே

யாட லாடுமெ வத்த னென்ருெரு
மேலை வீடுபெ றப்பு ரந்தினி
தாழ வேணுமெ டுத்தொ ழும்பனை யொருநாளே

வேத மாதவர் மெச்ச நின்றமா
வாசை நாளினி லற்ற சந்திரன்
வேண வாவோட ழைத்த கங்கையி னருள்வோரே

வேணு கானமி சைப்ப வன்கடை
கால்பெய் பாலைய ளிப்ப வன்றதை
வேறு ளோர்கள்கு டித்து மிஞ்சிட வருள்வோரே

நீதி மூவுல கத்த ரும்பொருள்
யாவு மேதகு கைத்த லம்படு
நீல வாமல கத்த ருங்கனி யெனவேகா

ணீர்மை யாளர்து தித்து வந்திரு
பாத தாமரை யைப்ப ணிந்திட
நீடு வாழ்மதி னத்தி ருந்தவெ மிறகுலே. (எக)

தனத்ததன தானதந்த தனத்ததன தானதந்த
தனத்ததன தானதந்த—தனதான.

அகப்பொருள்சி னூல்கள் பஞ்ச விலக்கணந னூல்வழங்கு
மகத்தியமு னூல றிந்து பதமாக

மடுத்ததமிழ் மாலை சந்த மெடுத்தகவி பாடி வஞ்ச
னவத்தைநினை வாய்நி னைந்து சிறுமூடப்

பகுத்தறிவி லாத வண்ட வுலுத்தர்தலை வாயில் சென்று
படித்துநிறை நாண ழிந்து திரியாதே

பழக்கமுறு வேத மெங்கு மணக்குமிசை யேக னிந்து
பழக்கு மொரு ஞான விஞ்சை யருள்வீரே

முகிழ்த்தவவி சேக விந்தை யிரத்னமணி மோலி தங்கு
முடித்தலைப ராவி யண்டர் தொழுவேநீண்

முடக்குறமு காமையொன்று பொறுத்தவுலகேழுமன்பின்
முழுக்கவெர்ரு கோல்பு ரிந்த முதியோரே

வகுத்தநெடு வானி னின்று மகத்துவநபி மார்க ணங்கள்
வழுத்துமிமை யோர்ப ஷஞ்சின் முனமேபோய்

வலுத்தமிகு ரூபி னின்று தனிப்பொருளை யேவ ணங்கி
பயித்துல்மகு மூறி ருந்த விறகுலே. (எஉ)

தனத்தந்தனதந்தந் தனத்தந்தனதந்தந்
தனத்தந்தனதந்தந்—தனதான.

கறுக்குங் கொண்டலைப் பைந்தண்
டலைப்பொன் கொண்டையைத்தென்கண்
குலைக்கண் கொண் டலைக் குங்கொந் தளமாதர்

களிப்புங் கண்சிமிட் டும்பஞ்
சணைக்கண் சஞ்சரிப் பும்புன்
சிரிப்பும் பின் பசப் புங்கண் டவரோடே

யிறைக்குங் குங்குமக் கெந்தங்
குமட்டுந் திண்புயத் தின்றந்
திரத்தின் சென்றணைத் தங்கொங் கையின்மேவி

யிளைப்புண் டுங்களைப் புண்டு
கிடக்குந் தொண்டனைத் துன்பந்
துடைத்தன் பின்பதத் தின்பந் தருவீரே

செறிக்குஞ் செந்தமிழ்ப் பொங்குங்
கவிப்பங் கஞ்சொலிச் சென்றங்
கிரக்கும் பண்டொருத்தன்பங் கினிலாட்டோர்

ஜெகத்தின் கண்கணக் கொன்றின்
 றிணக்கங் கொண்டளித் தெங்குஞ்
 ஜெயஸ்தம் பஞ்செலுத் துந்தண்   புகழ்வாழ்வே
குறிக்கும் பிங்கலந் தங்கங்
 கொழிக்குஞ் சந்திரக் குன்றுந்
 திசைக்கொன் றென்றனுப் புந்தின்   டிறலோனே
குருக்குந் திங்களிற் சந்தம்
 படைக்குஞ் சுந்தரப் பெண்சொம்
 புறச்சொந் தம்புரக் கும்பண்   பிறகூலே. (எசு)

தனனதானன தத்தனதத்தன தனனதானனதத்தனதத்தன
தனன தானன தத்தன தத்தன—தனதான.

பிசகி நாடிவி கற்பந டக்குது
 மலஜ லாதிகண் மற்றடை பட்டிது
 பிறிது வாண்முக நெற்றிவி யர்க்குது   சவவாடை
பெருக நாறுது புத்திம டித்தது
 புனலு நாவற வாற்றி யிருக்குது
 பிணிகள் நாள்களின் மெத்தவு ரக்குது   புவிமீதே
நசையு மூணுமு றக்கமு மற்றது
 நுரைகள் வாயெழ விக்கலெ டுக்குது
 நயன மேறிய சைரக்கண்மு கிழ்க்குது   கபனுடை
நலது தேடுமெ னச்சொல்வ யித்தியர்
 பலது மீதுகை விட்டுமெ னைப்புறம்
 நழுவும் வேளையெ னக்குன ருட்கடை   புரிவாயே
பிசைகொள் பூதல வட்டவ ரைப்பினும்
 நெடிய வானுயர் சொற்கத லத்திடை
 பிரச தாடக மிக்கத கட்டினி   லணியான

விலகு நாற்ள தட்டினி டைக்கிடை
யொளிக ணேணிறு வித்திசை யெட்டினு
மிளமி லாவொளிர் பத்திபெ றித்தகண் மணிமேடை

பசிய சோதியி ன்ழைத்தவிர் பச்சைகள்
வயிர நீலம ணிச்சுடர் விட்டெறி
பவள ராசியி ழைத்தம திட்டிரு மணிவாயில்

பதும ராகம னைக்கண்வ குத்திடு
தரள வாசன மெய்க்குறு சிற்றிகள்
பருதி போலவி ருக்கும கத்துவ விறகுலே. (எச)

தந்த தனந்தன தான தத்தன
தந்த தனந்தன தான தத்தன
தந்த தனந்தன தான தத்தன—தனதான.

விந்தை வலம்புரி போன்மு டித்திடு
கொண்டைகு லேந்துநி லாநு தற்குறி
விண்டுகு றுந்துளி வேர்வு சுக்கயல் விழிநீல

விம்ப மெழுந்துசி வேலெ னத்துகிர்
தொண்டைத ருங்கனி வாய்வி ளத்தர
விந்தந றுந்தன மார்பு றத்தழு வணைமீதே

சந்தன வம்பர்ச வாதி யற்கைம
ணங்கம ழுந்தெய்வ யேனி முத்திரை
தங்கும ரம்பையர் காண்ம ணித்தரி சிடுபார

தண்டைசி லம்புக லீலெ னத்தொடு
சண்டைபு ரிந்துற வாடி மற்றவர்
தங்களு டன்புணர் சாப னுக்ரக வருள்வீரே

இந்துதி னந்தொறும் வேறு ருக்கொடு
மங்குலி ழிந்திருண் மாலை யிற்றனி
யின்பரின் வந்தச லாமு ரைத்தினி தருகாஇ

பிந்திரை யொன்றுச ரோரு கக்கழல்
செங்கைதை வந்திட வாடு தொட்டிலி
னின்றுயில் கொண்டருள் காருண் யப்புய வருளாளா

மந்தர திண்புய வீரி யப்பிற
சங்கம்வி ளங்கிய சூரி யப்ரபை
மங்கக ளங்க சொரூப லெக்கண வரையாபூ

மண்டல முந்துவ ரோதை யக்குல்
துங்கவ பங்கம ஞேக ரப்பொறி
வண்டலை தண்டலை சூழு மக்கிய ரிறசூலே. (எரு)

தத்தத் தனத்ததன தத்தத் தனத்ததன
தத்தத் தனத்ததன—தனதான.

பக்கப் பழுத்த கிழ முற்றுப் பிணிக்கு ழலை
பட்டுத் துடித்து ணவு புசியாதே
பற்கிட் டிடப்ப லர்கை விட்டுச் சலிக்க வுடைப்
பற்றிப் பிடித்தெ னுயிர் நமனூர்கை
சிக்கிக் கொளக்கி ளைஞர் துக்கித் தழக்கொ டிது
செத்துக் கிடக்கு முன மனதாலே
சித்தித் திரக்க முடன் முத்திப் பதத்தை யருள்
செக்கச் சிவத்த சழ றருவீரே
பொக்கக் குடிற்பு குது துக்கச் சடத்தி னுட
பொட்டைக் கெடுத்த தவ முதியோர்வாய்
பொத்திக் கைகட்டி யுமை யர்ச்சித் திடப்பெ ரிய
பொற்கற் பகத்த ருவை யருள்வோரே
சொற்கத் திருக்கு மபு பக்கர்க் கிதத்த தொரு
சொற்கப் பதப்ப தவி புரிவோரே

சொற்கத் தினத்தி யரொ ரொக்கத் தனத்த வுசு
சொற்கத் திருக்கு நபி யிறசூலே. (சுஎ)

தந்தத்ன தந்ததந்த தந்ததன தந்ததந்த
தந்ததன தந்ததந்த—தனதான.

கொந்தளக மங்குல் கங்குல் கண்களிணை நஞ்சு பிஞ்சு
கொஞ்சுமொழி கண்டு வண்டு தருதேறல்
கொங்கையிரு கொம்ப ரும்பு வஞ்சியிடை யென்று நின்று
கொண்டமயல் வஞ்ச நெஞ்ச மருளாகி
யந்திபகல் சென்று சென்று மங்கையர்க டங்கள் பங்கி
லன்பொடுக லந்த லைந்து திரியாதே
யஞ்சலென வந்து வந்தெ னங்கமுழல் கண்டு கண்டு
தண்சரண பங்க யங்க டருவாயே
திந்திமிதி மிந்தி திந்தி யென்று நட னம்ப யின்று
திங்கள்வட மொன்று குன்ற முலைமாதர்
சிந்துகவி விண்டி யம்ப வங்கொலுவி ருந்தெ ழுந்து
சிங்கமென வந்தெ திர்ந்த பராராஜ
துந்துமிகள் கொம்பு பம்பை திண்டிமமு ழங்க மண்டு
தும்பிரத கந்து கங்க ளடர்சேனை
துஞ்சிடவு டன்று பம்பு தும்பைகள்பு னைந்து வென்று
துங்கமதி னம்பு ரந்த விறசூலே. (எஎ)

தனனத் தானன தாத்தன தானன
தனனத் தானன தாத்தன தானன
தனனத் தானன தாத்தன தானன—தனதான.

விரகச் சூளைய ரேப்புக்கு ளேயடு
புலியு லாவிய காட்டுக்கு ளேகலி
விகடத் தாழ்வுறு கோட்டிக்கு ளேமிகு சமுசார

விதனக் கோள்படு கோப்புக்கு ளேபொலி
கடனுட் டையபொ லாப்புக்கு ளேதெவர்
வெருவித் தூள்படு ஞாட்புக்கு ளேயல நெடுதூழி

கருமக் காரழன் வீட்டுக்கு ளேநரர்
நலியத் தீயெழ மூட்டிச்செய் வேதனை
கலைமிக் கோர்சொல கேட்டுப் பொருதழு தழல்பாவி

கவலைச் சாகர நீச்சுக்கு ளேயுயிர்
தவறிப் போமுன மோக்ஷத்து வாழ்வருள்
கருணைத் தோணியி லேற்றிக்கொ ளாதின மலைவேனோ

தரணிப் பூமகள் கூத்துக்கு ளேமன்
மடையத் தீனவர் மாட்டிக்கொ ளாதிரு
சரணத் தாமரை நீட்டிப்பொ னுடருள் பெரியோரே

சலதிப் பேரலை யாற்றுக்கு ளேயொரு
பிணைமுற் போய்வழி காட்டப்பி னேபர
தளநட் போடுந டாத்திச்செல் காரண முதியோரே

வருணச் சூலிள நாற்றுக்கு ளேவிளை
பவளச் சாலியின் மூட்டுக்கு ளேகுள
மதகிற் கால்விடு சீப்புக்கு ளேயளி யிசைபாடு

மகரப் பூவிரி தோப்புக்கு ளேகய
லிகலிப் பாய்வள நாட்டிக்கு ணுயக
மதினத் தேவளர் கீர்த்திகிரு பாகர ரிறகுலே. (எஅ)

தாத்த தந்தன தந்தன தானன
தாத்த தந்தன தந்தன தானன
தாத்த தந்தன தந்தன தானன—தனதான.

ஆர்க்கு மஞ்சிறை வண்டடை வார்குழல்
பூச்ச ரங்கள்பு னைந்தணி தாண்மிசை
யாற்று தண்டைசி லம்புக லீலென மறுகூடே

யாட்டு சந்தன வண்டல்ப டாமுலை
காட்டி நின்றெதிர் வந்திளை ஞோருட
வாஸ்த்தி கண்டுபு ணர்ந்திடு மாதர்க ளுறவாமோ

ஏர்க்கு முங்கள்வ ரங்கொள்ப்ர தாபமெ
ழுத்த ழும்பவி யந்துப ராய்மன
மேக்க றுந்தமி யன்றனி யாவிமெய் தடுமாறி

யேக்கம் வந்துளொ டுங்குமு னேயொரு
காட்க்ஷி தந்திரு கண்களி கூர்தர
வேத்து மந்திர மொன்றுப தேசமு னருள்வீரே

கீர்த்தி யின்பம சும்புநி லாவொடு
நேற்றெ ழுந்தப சுங்கதிர் நேரிய
கீத்தி ளம்பிறை தங்கிய வாணுத லொளிர்தூய

கீர்த்த னம்புகல் பஞ்சர மேவிய
தார்ப்ப சுங்கிளி பண்குயின் யாழிசை
கீழ்ப்ப டுஞ்சொல ரம்பையர் மால்கொழு மழுகேசே

பார்த்த கண்கவர் செந்துவர் வாய்ரச
மூற்றி ருந்துக னிந்தமு தூறிய
பாற்செ ழுந்துளி கொண்டுகெ டாதவல் வினைநோய்கள்

பார்த்த லங்கொள சும்பெழு நீருவர்
மாற்றி நின்றரு ளுங்கரு ணாகர
பார்க்கரன்பொரு செம்பொன்விண் ணோர்பதி யிறைகுலே

தனன தந்ததான தனத்தன தானன
தனன தந்ததான தனத்தன தானன
தனன தந்ததான தனத்தன தானன—தனதான.

அகில வண்ட கோடி படைத்தபி ரானளி
மனுவி ரண்டு சாதி பெருக்குவ னுமண
லறையில் வந்து சேர வொடுக்குவ னுமுடி வுகநாளி

லண்டய வங்கண் மீள வெழுப்புவ னும்வெனி
சமுக பந்தி யாக நிறுத்துவ னுமுரு
மலரி யுந்தி மூளை யுருக்குவ னுமுனை   யுயில்வானோர்

பசைமு கந்து பாலந டத்துவ னுநர
கனல்கொ ழுந்த வூழி யிருத்துவ னுமெறுழ்
பனக முண்டு கால வருத்துவ னுமடர்   குடரீரல்

பருக வெந்த நீரை யருத்துவ னுமுழ
றிருகை கொண்டு நீறு படுத்துவ னுமெரி
படரு மிந்த வாதை யெனக்கணு காதருள்   புரிவீரே

முகில்க விந்து பூவி னிழற்றிட வேநிழல்
சரண புண்ட ரீக மணற்பட ராதுசென்
முகம்ம தென்று கூவுபுட் குழுவெ லாமுறு   புகழ்கூறி

முயலு மஞ்சு தாரு வனத்திரு தாள்கொடு
பாத முந்துதாள விகற்பம்வி டாதிசை
முழுது நின்று பாடும் வரப்பிர தாபமு   முடையோரே

நகில கும்ப யானை மருப்புமை நீணிற
மணியு மந்த கார விருட்டறை போலுமெ
னறிய கந்த சார மணத்தசி லோதியும்   நிலவூரு

நகையு மந்த காச மெறித்திடு மூரலு
முடைய ரம்பை மார்கள் விளைத்திடு கூடலி
னலன னந்த போக சுவர்க்கனன் னுடை யிறசூலே.

தனத்தத் தனத்தத் தனத்தத் தனத்தத்
தனத்தத் தனத்தத்—தனதான.

செகத்திற் கருக்கட் டுடைப்பொய் ப்பிரட்டிற்
சதித்தெட் டுருட்டிற்   கொடிதான

செயற்கைத் திருட்டிற் புலைக்குத் திரத்திற்
செருக்கிற் சளக்கிற் பொதுமாதர்
பகட்டிற் புதுக்கட் குடிப்பிற் பகைத்துச்
சணத்திற் றலைப்பட் டுழலாதே.
பகைப்பித் தனுக்குப் பதத்தைக் கொடுத்துப்
பழக்கிப் பணிப்பித் தருள்வீரே
ககத்திற் சிறைக்கொத் தலர்த்திக் குவித்துக்
கணத்திற் புவிக்குற் றம்பரேசா
கரத்தைக் கழுத்தைப் பிடித்துக் கிடத்திக்
கருத்தைக் கிழித்துப் பதறுதே
புழைக்கைச் சமத்திற் றெரிப்பிட் டெரித்துப்
புகர்ப்பித் தெடுத்துக் குறுஆன்வாய்
புகச்சொற் குலிக்கிப் புகட்டப் பொருட்கட்
டெழிற்பொற் கிரிப்புக் கிறசூலே. (அக)

தனன தத்தத் தத்தன தான தந்ததன
தனன தத்தத் தத்தன தான தந்ததன
தனன தத்தத் தத்தன தான தந்ததன—தனதான.

அணியு முத்துக் குச்சுவார் கேசபந்தியொளிர்
மரக தப்பொற் சுட்டிமீ தாடு கின்றநுத
லழன்மடுத்துக் கக்குவே லாயு தம்பொருக ணிழலூரு
மமுத வட்டத் தட்பமே வான்மு கம்பசிய
கனக ரத்னச் செப்பைவா தாடு கொங்கைவடி [மெய்
வளைவில் பொற்புப் பெற்றமா தேவரம்பையர்க ளுடனே
புணர விச்சித் திச்சைகூர் வேனை யின்றுலகி
னனுப வத்தைப் பற்றிவீ ணுள்க ழிந்துவினை
புரிப வற்கத் தட்டில்வீ ழாம லைந்துபொறி வளிமேய

புல்வெ றுக்கப் பட்டதி னேரி னங்களோடு
பிரியம் வைத்துச் சற்றுவீ ருயி ரங்கிவளர்
புகழ்சுவர்க்கத்தட்டின்மேல்வீடுதந்தருள் புரிவாயே
பணியெ யிற்றுற் றெச்சில்பூ ணுதெ ழூந்தக்தி
ருலேமு கத்திற் புக்கிவே காத செம்பொனலே
படுக டற்குட் டத்தின்வா ழாத சங்கநிதி மழைமேக
படமொ ழிற்றுக் குற்றமே ராத திங்கண்மினி
யிடியி டித்துத் திக்கினே டாத கொண்டல்விலே
பலபடைத்துப்பிக்குண்மேவாதவெண்டரள மழலாதே
மணிகொ ழித்துப் பொய்த்துவா ட்ாது நின்றசுடர்
குலேப ழூத்துப் பட்சியா ராது வந்தகனி
மடலவிழித்துப்புட்கள்பாடாதகஞ்சமல ருருவேருய்
மதுர நற்றித் திப்புமா ருத பொங்கமுது
பிரச மொய்த்துச் சுற்றியா டாத வின்பமது
மருவு மக்கத் தற்றுவாழ் காசி மெங்கணபி யிறகுலே.

தானதந் தந்தன தனத்த தானதந் தந்தன தனத்த
தானதந் தந்தன தனத்த—தனதான.

போதமொன் றின்றியு லசத்து
வாழ்வையுண் டென்றும னம்வைத்துப்
போரடுஞ் சிந்துர மருப்பு முலேமாதர்
போகநன் றென்றுது யர்முற்றி
நாயிலுஞ் சிந்தைக டைகெட்டு
போதநஞ் சுண்டக யலொத்து மருளான
பாதபங் கங்கழல் கொளுத்தி
நாளுமுண் டுண்டுப ணிகக்க
பாழ்படுங் கும்பிந ரகத்தி லுழலாதே

பாரிழிந் தும்பர்பு கழ்சொற்க
வீடுதந் தன்புத விமுத்தி
பாதமென் பங்கய சௌக்கிய மருள்வாயே

தாதளைந் தஞ்சிறை யுளர்த்தி
வேரியன் றண்டுளி யிறைத்து
தார்படிந் தொண்கரு நிறத்த பெடையோடே

தாமணந் தன்பொடு களித்து
நீலவண் டுண்டுயில் கிடப்ப
தாமமென் குங்கும மெறித்த மலர்மார்பா

சீதவெண் டிங்கள்வ யிறெக்கு
கூன்முகங் கொண்டெழு துழக்க
சேணெடுங் குன்றமி சைவைத்த வினிருளூ

றேறலங் கங்குகி ழியக்க
ஞாறெழுந் தெண்டிசை கடத்த
தேயமெங் கெங்கும்வி ளைமக்கத் திறசூலே. (அ௬)

தனதன தனத்ததன தனதன தனத்த தன
தனதன தனத்ததன—தனதான.

அறுசுவை சுகிக்க நல சலவைக ளுடுக்க வெயி
லரண்மனை யெடுக்க நனி பொருடேடி

யணிபுதையல் வைக்கவர சுயர்கொலு விருக்க விலை
யடிமைகள் வளர்க்க விளை மடவார்பா

லுறுசுகம் விளைக்க மத கரிபுர விகட்ட நகை
யுடைமைகள் சமைக்க வெகு நினைவோடி

யுலகொரு மயக்க மெனும் வினையுள சளக்கின் மன
துறுதிகள் பெலத் தடிமை யுழல்வேனோ

பிறவியி ருகட்கு ருடு செவிடுமுட மற்று முள
    பிறர்வழு வுறுப்பி னொடு தணியாத்
பிணிபல பயித்தி யமும் வறுமையு மகற்றி யருள்
    பிறுதியி னளித்த வர முண்டையோரே
மறிதிரை சுருட்டி யெறி குரைகடல் குடித்து வரு
    மழைமுகில் கிழித்து லவு மணிமாட
மரகத முகப்பி னிகள் மகளிரொ ருகத்த னுட
    மறைதெரி யுமக்க நபி யிறகூலே. (௮௪)

தனனதன தந்தத் தனத்தந் தனத்த தன
தனனதன தந்தத் தனத்தந் தனத்த தன
தனனதன தந்தத் தனத்தந் தனத்த தன—தனதான.

இளமகளிர் கொண்டைச் சுருக்கின் சொருக்கு மிரு
  கலகவிழி யம்பைச் சிமிட்டின் சிமிட்டு நுத
  லிடுகுறித யங்கப்பொறிக்கும்பொறிக்குமலர் மலர்போலு
மிலகுமுக மஞ்சட் பகட்டின் பகட்டு மதி
  வடமுலவு கொங்கைத் துலுக்கின் றுலுக்கி யிடை [ர்க
  யினிலுடையில்வம்புப்பிலுக்கின்பிலுக்குமெதி ரிளைஞோ
ளுளமுருக வின்சொற் பசப்பும் பசப்பநனி
  விரகவன நெஞ்சிற் பெருக்கின் பெருக்குமவ
  ருறுசுரத வஞ்சப் பிரட்டின் பிரட்டு மல ரணைமீதே
யுவகையொடு கொஞ்சிச் செருக்கின் செருக்கு மன
  துயிர்நிலைக லங்கக் கெடுக்குங் கெடுக்கு மினி
  யுமதுபய கஞ்சப் பதத்தின் பதத்தையருள் புரிவீரோ
வெளிறவள்கு முந்தைப் பிறைக்கும் பொறைக்கு மழை
  கருமமுத கங்கைப் புயற்குங் கயற்கு முழு [ளிகாலும்
  வெயிலொழுகு செம்பொற் சிலைக்குங் கலைக்குநகை வெ-

வெளியகதிர் வெம்பொற் கிரிக்கும் பரிக்கு மடு
பொறிசெறிபு லிங்கக் கனற்கும் புனற்கு மடல் [வோரே
வெகுளியெரி வெங்கட் பணிக்குங் கணிக்குமுனை புகல்

வளருமர விந்தக் குழிக்குங் கழிக்கு மணி
கதலியிள மஞ்சட் குலைக்குந் தலைக்கும் வளை ல்[சோலை
யினமணிகொள் வண்டற் கரைக்குந் திரைக்கு மணி முர

வயன்முதுவ ரம்பிற் கனிற்குஞ் செநெற்கு மெழு
கயலினமு ழங்கிக் குதிக்குங் கதிக்கு மெயின்
மதினகர ன்பிற்பு ரக்குஞ்சு ரக்குமரு ளிறசூலே. (அரு)

தந்த தனன தனனு தனன தந்ததனன தனனுதனன
தந்த தனன தனனு தனன—தனதான.

அங்க வடிவு முதிரா வெழிலு
முந்து குணனு மதிசால் பொறையு
மன்பு நலனு மறைதே ரறிவு மிசைவாய்மை

யஞ்சொ னெறியு நிறைநாண் மனனு
நன்கு பொருளு நகைகூ ரருளு
மைந்து புலனு மிகவாழ் குடியு மணமேவு

நங்கை மனைவி மகவா சைகளும்
வென்றி யுபைய குலனுண் மைகளும்
நன்றி பலவு மிசையா மெனவென் முகநாடி

நந்த வருநல் குரவா நரிமெய்
தின்று விடுமு னபியே சரண
நன்பி னனும தடியே கெதியி ; னருள்வீரோ

யிங்கு வருக வரசே வருக
நம்பி வருக மதலாய் வருக
வெங்க ளுயிரி னுயிரோ வருக வுரமூறு

வின்ப மதுர வமுதே வருக
வும்ப ரிருகண் மணியே வருக
வின்ப ரிலகு சுடரோ வருக வுயர்தீனோர்

வங்ச நிலவு திலகா வருக
விஞ்சு கருணை முகிலே வருக
வண்மை நபிகள் பெருமான் வருக வெனவேகூய்

வந்து செவிலி யலிமா வினிய
கொங்கை யமுது தரவாய் பருகி
மன்றல் கமழு மதினா வளரு மிறசூலே. (அசு)

தனதனத் தானனா தனதனத் தானனா
தனதனத் தானனா—தனதான.

பணமொருக் காலைதா கறிகொளக் காசுதா
பருகநெய்ச் சோறுதா விலையேறு

பசியபொற் சேலைதா விலைகளிப் பாகுதா
பருமணிக் கோவைதா மணிபூச

லணிகுழைக் கோலைதா புழுகுகஸ் தூரிதா
வணைமலர்ப் பாயல்தா வெனுமானா

ரவர்கபட் டாசையா லுலகினிற் பேதையே
னறமுழுப் பேயனா யலைவேனோ

மணவறைப் பாலெலா முழுபடைச் சாலெலாம்
வளர்கொடிக் காலெலா மணவாளர்

மதிமுகப் பூவெலாம் வரபுயத் தாரெலாம்
மரகதப் பூணெலா மழைகால்வ

னிணைகுழற் காடெலாம் நெடியநெற் போரெலா
மிளமரக் காவெலா மொளிவீசு

மிருகுழைக் காதெலா மகளிர்கட் சேல்கள்பா
யிணையடிக் காவில்வா   ழிறகூலே. (அள)

தனதத்தன தத்தத் தனதன
தனதத்தன தத்தத் தனதன
தனதத்தன தத்தத் தனதன—தனதான.

இசை முத்தமிழ் கற்றுப் பயில்பவர்
பிரண் வப்பொருண் முத்துத் தெளிபவ
ரியலுத்தியவு ரத்தைப் பெறுபவ   ருலகேழு

மிமை யிற்றெரி சித்துத் திரிபவர்
மலையிற் றவு மிக்குப் புரிபவ
ரிகலுற் றிடு மற்றைச் சமையிக   ளெவரோனு

நசை வைப்பினி லெட்சத் திருபது
சது பத்துவ ழுக்கச் சதமுறு
நபிகட் கொரு வித்துக் குருநபி   யுமர்தீனின்

நல சத்யம தத்தைப் பிறழ்பவ
ருருண் முத்திம கத்தைப் பெறுகிலர்
நர கத்துநெ ருப்புக் கிரையென   வுழல்வாரோ

திசை யெட்டினு மெட்டிப் படர்சுடர்
வெயில் விட்டெறி பட்டப் பகலிடு
திரை யுட்சய னித்துத் துயில்செயு   மளவோடி

யரு டிப்பதம் வைத்திட் டொருவன்மு
னுறை விட்டற வெட்டப் பொருதுகை
திரு கிப் பறி பட்டுச் செலுமதி   ஜெயவாழ்வே

பஜி திற்றெழு துற்றுத் திருமதி
லொரு பக்கமி ருப்பப் பளிமிசை
பட லைக்கலை வைத்துப் பகைஞர்க   டளவேகீள்

பழமைப்பொன்ம திற்கத் திகிலென
மறை வித்தது தட்பத் திகழ்புகழ்
பயில் வெற்றிகொண் மக்கத் திருநபி யிறசூலே. (அஅ)

தன்ன தந்தன தந்ததானன தனனதந்தன தந்ததானன
தனன தந்தன தந்த தானன—தனதான.

அசுண மென்புளி யங்க ளான்மழ
களிறு றும்பரி சங்க ளால்வரி
யளியி னங்கண் மணங்க ளான்மறி புனல்வாழ்மீ

னயிலு மின்பர சங்க ளான்மிகு
சலப நன்கொ ளியங்கி யாலுமி
ரழிய நின்ற திறங்கள் போலனு பவநாடி

யிசையு மைந்துபு லன்க ளானது
விரக மங்கை யர்தங்கள் பாலினின்
முலைமு யங்கி மயங்கி யாருயி ருழலாதே

யிதைய மண்டல மண்டு தீவினை
யிருளெ றிந்துவி ளங்கு பானுவி
னினிது வந்துதை யஞ்செய் தோர்பொழு தருள்வீரே

கசர தந்துர கம்ப தாதிக
ளெனவ வருஞ்சது ரங்க சேனைகள்
கணநெ டந்திட வெண்டி சாமுக மெழுதூளி

கதிர்ம றைந்திட வண்ட கோளகை
முகட திர்ந்திடு பம்பை பேரிகை
கதறு துந்துமி கொம்பு வாய்விட வெதிர்மாய

வசைத ருங்குபி ரண்ட லாரொடு
பொருக ளந்தனில் வந்த பூசகல்
மடிய நின்றமர் வென்ற வாழ்வலி யுடையோரே

மழைமுகந்துமுடங்கு கூன்முய
லடைகிடந்தொளிர் திங்க டோய்மதின்
மதினவம்பதி தங்குநாயக ரிறகுலே (அசூ)

தனதன தத்தன தத்த தந்தன
தனதன தத்தன தத்த தந்தன
தனதன தத்தன தத்த தந்தன—தனதான.

மலையையெ டுத்துநி றுப்பி னுங்குரை
கடலை யணைத்தும ளப்பி னும்புவி
மணலையெ ணித்தொகை தைப்பி னும்பஃ றுளியான

மழையினி லக்கமு ரைப்பி னுங்கதி
ருடுவின ளப்பையு லப்பி னும்பல
மனிதர்நி னைப்பைம திப்பி னும்பொலி தருமேவு

மிலையல கிட்டுவ ழக்கி னுஞ்சுரர்
தொகைவகை முற்றும்வ குப்பி னும்பக
லிரவையி னைத்தென வைப்பி னுங்கரை தொலையாத

வெனதுப வக்கடல் வற்றி டும்படி
யுமதுப தத்தின டைக்க லம்புகு
மெளியெனி டத்தின னுக்கி ரகஞ்செய வரவேணும்

புலிவச னித்தபெ ருக்க மும்பணி
யதுவச னித்தவு ருக்க முஞ்சிறு
புறவொடு ரைத்தவி ரக்க மும்பெரி துடையோரே

புரவி டைத்தியொ ருத்தன் வந்துறு
கலகம்வி ளைக்கவி ணைக்க ரங்கொடு
புடைவிபி டிக்கவி தித்த வன்பிழை கடிவோரே

நிலவுவி ரித்திடு நித்தி லந்தனில்
வெயிலின்வி ளக்கினி மைத்த கிந்திலி
னிழலுமி ழ்ம் பொற்படி மக்க டலந்தனி லுறைவோரே

விலைபட வைத்தசெ கத்தி றிங்களில்
வரமுயர் வெற்றிப டைத்து வெண்புகழ்
நிறுவிய மக்கந கர்ப்பு ரந்தரு ளிறகுலே (கூமி)

தாந்த தந்தன தத்தன தானன
தாந்த தந்தன தத்தன தானன
தாந்த தந்தன தத்தன தானன—தனதான.

வாய்ந்த பஞ்சவ னக்கிளி யோகளி
தூங்கு சந்த்ரம யிற்பெடை யோபொழில்
வாழ்ந்து கொஞ்சுமி சைக்குயி லோவெனே விலையாக

வாங்கு கின்றயி ர்த்தின மோநல
தேன்பொ ழிந்ததி ரட்டமு தோமது
வாய்ந்த கண்டுசெ ருக்கரை யோதொடர் பவமாயை

காய்ந்த முன்செய்த வப்பய னேமினெ
லாந்தி ரண்டொரு வுற்பவ மோவெயில்
கான்ற செம்பொன்ம ணிச்சுட ரோவெனு மடமாதர்

கார்ந்த ளங்கைபி டித்தம ராபதி
தூங்கு மஞ்சமு யக்கொழி யாதுறு
காந்தெ னென்றருள் வித்திரு சேவடி தருவீரே

யாய்ந்து ணர்ந்தம றைப்பொரு ளேபுவி
மூன்றி னுங்குளிர் கற்பக மேயகி
லாண்ட மெங்கும்வி ளக்கொளி யேசுவை யமுதூறி

யார்ந்து பொங்குக லைக்கட லேயரு
மாந்த வெங்களு யிற்குயி ரேயெமை
யாண்டி டுங்கரு ணைப்புய லேமழ களிறேயோர்

பாந்தள் தங்குறை செப்பவு மாறலே
வேங்கை யன்றும நிக்கவும் நீடிய
பாண்பொ தும்பின டக்கவு மேயருள் புரிவோரே

பாண்சு ரும்பினி ருட்டறை வார்குழ
லேந்து மங்கையர் கட்கடை நேர்கயல்
பாய்ந்தி டுந்தட மக்கியர் கோனபி யிறசூலே (௬௪)

தனத்த தந்தன தனதன தந்தத்
தனத்த தந்தன தனதன தந்தத்
தனத்த தந்தன தனதன தந்தத் — தனதான.

சுகித்தி டுஞ்சுக மிகுபிர வஞ்சச்
சுருட்டு தெண்டிரை யெறிகடன் முங்கித்
துயர்க்கொ ழுந்திடை படர்கலி வெங்கட் சுறவேறு

சுழித்து வந்தென துடலம யங்கப்
பிடிக்கு முன்பய ரொழியவி டும்பைத்
துடைத்து நின்றன தருடிரு வங்கத் தினிலேறி

யுகைத்து வெம்பவ வரைகள்வி லங்கிப்
பகைக்கு றும்பற வ..துக டந்திட்
டுணர்த்த ருங்கதி யுயர்கரை யங்குய்த் திடவானி

லுதித்த சந்திரன் வருடிய கஞ்சத்
துணைப்ப தங்களை யடிமைத னெஞ்சத்
துறைப்பு ரிந்திரு விழிகுளிர் பொங்கத் தருவாயே

ஜெகக்கி ணங்குரு செக்கிண செங்குட்
டுடுட்டு டுண்டுடு டுடுடுடு டுண்டிட்
டிகுட்டி டிண்டிகு டிகுடிகு டிண்டித் திகுதாதோ

திகுத்தி திந்திமி திகுகிதி யென்றிட்
டுடுக்கை பம்பைக டிமிலைக றங்கச்
செலுத்து தண்டுட னபுசக றஞ்சக் களமீதே

பகட்டி வெண்குடர் நரிகள்பி டுங்கக்
கொழுப்பை வன்கொடி கழுகுவி ழுங்கப்
பறித்து வண்புல வெகினம ருந்தச் செறிமூளை

பகுத்து மண்டையி னலகையு ரிஞ்சச்
சமத்தினின்றமர் பொருரண துங்கப்
படித்த லம்புகழ் மதனியர் தங்கட் கிறைகுலே. (௬௨)

தனனதன தனனதன தத்தத் தனத்ததன
தனனதன தனனதன தத்தத் தனத்ததன
தனனதன தனனதன தத்தத் தனத்ததன—தனதான.

வடுவையிடு கடுவையடர் மச்சத்தை நச்சமுதை
வலையையலைநிலைகுலைய வெற்றிப்படைச்சமனை [வேலும்
வடிகணையைவெடிபிணையைவெட் டித்துரத்திடுக ணிணை
வளர் பருதி யொளி யிருள நெய்த்துக் கறுத்தகுழ
முடியினெழு பதுசதபன் முத்திட்டி ழைத்தபினல்
வடிவுமழகொழுகமுதவட்டத் தையொத்தமுக மலரேயு
முடைதிரையி னெழுசலதி யுப்பைத் துடைத்தமுத
முதவுசிறு துளிமதுர மிக்குப் பழுத்தமிழ்தி
னுமிழ்பவள வளமனைய செக்கச் சிவத்தவித மாமாத
ருகழ்கலச முகிழ்சலச வெற்றைப் பகட்டுமுலை
யெனதுபுய முழுதுழுது ழுக்கச் சுகித்தவர்க
ளுயிரனையகொழுநனெனரட்சித்திரக்கமுட னருள்வீரே
கடலினொரு கடல்புகவி றைத்துப் பெருக்கிமறி
கடல்சுவரி யளறுபட விட்டுக் குளப்பியுயர்
கடவுள்வர நதியறவ டித்துக் குடித்தடியி னிருநாலு
கனகுவடு தவிடுபட வொக்கப் பிதிர்த்துதறி
யதலமது குதலமென வைத்துத் துவைத்துவிழி
கதகதென வழல்கதுவ லெட்டுத் திசைக்கரிகள் பட நூறி
முடவுகர நெடுவெளிமு கட்டிற் புனற்படல
முகிலைவரு பிடியெனநி மிர்த்தப் புறத்தடவி
முரணிநிழ லொடுகெறுவு வட்டத் தடக்கரட மடைபாயு.

முழுநிலவு தவழுமொரு வச்ரப் பொருப்பின்மிசை
யிருமயிலி னொடுதரள விச்சப் றமச்சமதில் [லே.
முதல்வனருள் கொடுபவனி சொற்கத் தலத்துதவு மிறகு

தத்ததன தத்தத் தனந்தந் தனந்த தன
தத்ததன தத்தத் தனந்தந் தனந்த தன
தத்ததன தத்தத் தனந்தந் தனந்த தன—தனதான.

கற்பகவி ருட்சத் தசும்பும் பசும்பொ னொளிர்
சொற்கநக ரிற்புக் கொதுங்கும் பதங்க னொடு [மேடை
கற்றைமதி வட்கத் துலங்குங் குலங்கொண் மணி யதன்

கட்டழகெ றிப்பக் கவின்கண் கவர்ந்தி லகு
பற்பனப தத்தின் சிலம்புஞ் சிலம்ப முகை
கைத்துநகை முத்துக் கிணங்குங்குணந்தகைய வரமாதர்

புற்புதம ருப்புத் தசும்பும் பசுங்க லச
வச்ரமணி விற்செப் பரும்புங் குரும்பை நிகர்
புத்தமுதம் வைத்துக் குலுங்குங் குலிங்க மிடு முலையானை

புற்பசய னத்திற் புணர்ந்தன் புணர்ந்தொ ழுகு
நிச்சமன மெச்சித் திடுந்துன் படங்க வருள்
புத்திதரு முத்திப் பதந்தந் திதம்பு ரிய வரவேணும்

தற்கமிடு துட்டத் தெறும்புன் குறும்பு மற
நிர்த்துகழ்ப டுத்தித் திரண்டங் கிருண்டகு பிர்
கட்சமைய நெட்டைக் கருங்கங் குலுங்க வரு சுடரேபார்

தத்துபுனல் சத்திக் கிரங்குந் தரங்க மெறி
யுப்புவரி யிப்பிச் செழுந்தெண் கொழுந்தொ ழுகு [ரே
தட்டரள முத்திற் சமைந்தன்றமைந்தவொளி வுடையோ

நெற்குலைக றித்துத் தயங்குங் கயங்கு வளை
கட்கடைகு தட்டிப் பரம்புங் குரம்பி னிய
நெட்டிலைய பச்சைக்கரும்புண்டரம்பைநிழல் வளர்மேதி
நெய்த்திகழ்செ ருத்தற் குறுங்கண் டிறந்த முது
வட்டெழுக ணைக்கட் டதும்பும் பொதும்பர் மதி
நெற்றிதொடுமெக்கத்தியங்குஞ்ஜெயங்கொள்புகழிறரூலே.

தனன தந்த தத்த தனன தந்த தத்த
தனன தந்த தத்த—தனதான.

இருள்க னிந்து நெய்த்த வளக பந்தி கட்டு
மிளகு மென்சொ குக்கு மொளிவீசு
மிளைய திங்க ளொற்றை சிறைகி டந்த நெற்றி
யெழுது கின்ற பொட்டு மிணைவாள்போல்
அரிப ரந்து வெட்டி முதிய நஞ்சு கொட்டு
மமுத கண்ப கட்டும் விலைமாத
ரரிய புன்சி ரிப்பு மினிய ரண்டு சொற்க
வழகு கண்டு மெத்த மயலாகி
விரிநெ டும்ப வத்துண் முழுகி நின்றி ளைத்த
வினைய ஒந்த ழற்று நரகூடே
விழுமு னன்பு வைத்து மடிமை யென்று சற்று
விரைய வந்து முத்தி தரவேணும்
மொருசி வந்த பட்டு மொருப சுந்த பட்டு
மொருவன் வென்றி பெற்ற சிபுரீல்தா
முதவ வன்றெ டுத்து வசனு சைன்ற னக்கு
வுடைபு னைந்து டுத்த விறரூலே. (௯௫)

தன தன தனதன தந்தத் தத்தன
தன தன தனதன தந்தத் தத்தன
தன தன தனதன தந்தத் தத்தன—தனதான.

உரவெழு கடலின்வி ழும்புற் றிடையலர்
மலர்தலை யுலகவ ரம்பைத் தத்திவி
ணுறுபுகழ் தொடர்பிர பந்தத் தைச்சொலு மிசைவாண

ருறுதியு மறிவுநி ரம்பப் பெற்றும
தடியவர் பெறுபல சம்பத் தைத்தரு முயர்பர
கதியொடு செம்பொற் சொற்கமு மருள்வீரே

நரபதி குணர்வரு வெண்பொற் பெட்டியின்
முடைகமழ் புலர்தசை வம்புக் கட்டியை
நறைபொது ளுமழக பந்திக் கட்டுமொண் மதிபோலு

நறுநுதன் மிசைதவழ் தங்கப் பட்டமு
மரகத மணிதிகழ் தொங்கற் சுட்டியு
நகுகுழை படர்படர் கெண்டைத் திட்டியு மொளிவீசு

மருணவ தனவர விந்தப் புட்பமு
நிலவுவி ழுதுவிடு தந்தப் பத்தியு
மமுதுபொ திகுமுத விம்பத் துப்புறள் கனிவாயு

மழகொழு கியவிரு கொங்கைச் செப்புமெய்
விளைவொடு பருவமும் வந்துற் பத்தியு
மமையவொ ருபெணுரு வின்பப் பொற்பருள் கருணேசே

குரைகட னிகர்சது ரங்கக் கைப்படை
யுடனெதி ரபுசக னெஞ்சைப் பிட்டுடல்
குருதிகு டர்தசைகு ளம்பச் செற்றடு களமீதே

கொடிகழு குணவெவி ருந்துய்த் திட்டவ
வரமுறு மதணியர் தங்கட் குத்தம
குறுகலர் மதகெஜ சிங்கக் குட்டியெ மிறகூலே (சூசு)

தனன தத்தன தனனு தனதன
தனன தத்தன தனனு தனதன
தனன தத்தன தனனு தனதன—தனதான.

முகமி னுக்கென மதவா டைகளென
விழிம ருட்டென நடைபா வனையென
முலைது லுக்கென வதிகா ருடமென வனுராக

முறைப டிப்பென லயபா கிதமென
தமிழ ளப்பென மனயோ சனையென
முறுவ லிப்பென கையிலா கைகளென வியல்சீர்தா

னுகழ வைப்பென் பாகே ளிகையபி
நயவி யப்பென வியன்னு டகவிசை
யுலவி நிற்பென வெழில்சே ரிளமுலை மடவார்க

ளுசித மெத்தவே விரகா நலமுறு
சுரத மெத்தனே யடியேன் றினமனு
முருகி நித்தமு முழலா தடியிணை யருள்வீரே

யகலி டத்தினி லுயர்தீ னவர்களி
லொருவ னெற்குறு பறுலா னதுதொழ
வசனு குத்திலே யரசே யெனவவன் மருண்மாலே

யலைக டற்புகு கதிரா தவனையும்
வரவ ழைத்திறை வனையே தொழுதிடு
மளவு நிற்குக வெனவே யுதவிய பெரியோரே

பகல வற்க்குமெய் முழல்பார் படர்தர
வமைய வற்பமு மயிலா வடிவுறு
வடிவ முத்திரை பெறுகா ரணவர முநியோரே

பருதி னெட்டிலே வடிவே லரசர்கள்
மகுட வற்தன ரிமையோர் குழுவொடு
புரவு மக்கநன் னகர்வா ழகுமதெ மிதசூலே (௬௭)

தனன தன தனனதன தனதான தந்ததன
தனன தன தனனதன தனதான தந்ததன
தனன தன தனனதன தனதான தந்ததன — தனதான.

வழுவுறுபொய் கொலைகளவு செயுமாய வஞ்சகனை
யுறுதிபெறு சொலினறுதி மொழிமாறி நின்றவனை
வறுமையுறு பிணியினழ றணியாதசஞ்சலனை யெரிதீயின்
வடவையென வெவர்தமையு மெதிர்சீறி நொந்தவனை
முதியவிருகுரவரையு மனநோவுகண்டவனை [யிறைபாலி
விரைவின்விலை மகளிர்மிசை மிகவாசை கொண்டவனை
னழுதுபவ மறவிரவு தஉபாவ முங்கிலனை
விழுநிதியின் வளர்பலிசை முதறேடு கின்றவனை
யறிஞருணரறிவினுரைவழுவாயிகழ்ந்தவனை வரையாதே
யவனிதனி லிருசுவடு படராதொ துங்கியுயர்
நெடியகுல வரைகிழிய வொருகால்ப டர்ந்தகதி
யருள்சரணமதுசரண மெனவேயடைந்தருள வரவேணு
மெழுககன வெளியுமெழு பதினாயி ரங்கிரையு
மரகதவி லொழுகுமெழு பதினாயி ரங்கிரையு
மெழுபடலமுகிலினெழு பதினாயிரங்கிரையு மவிர்சோதி
வெளிறிகழு மொளியினெழு பதினாயி ரங்கிரையு
மதிநிலவி னமையுமெழு பதினாயி ரங்கிரையு
மிரவிவிடு சுடரினெழு பதினாயி ரங்கிரையு மனல்காவி
சுழலுமுரு மிடியினெழு பதினாயி ரங்கிரையு
மடர்கொடிய விருளினெழு பதினாயி ரங்கிரையு
முரவுகுளிர்பனியினெழு பதினாயிரங்கிரையு மலர்கேணி
யுடனடவி புடவிகட லிமையோர்ப வுஞ்சினொடு
வகையின்வகை பிறவுமெழு பதினாயி ரங்குறுகி
யொருவனறுசுகுறுசிடை நனிபோயிருந்தநபி யிறசூலே

தந்தத் தனத்தத் தனத்தத் தனத்த தன
தந்தத் தனத்தத் தனத்தத் தனத்த தன
தந்தத் தனத்தத் தனத்தத் தனத்த தன—தனதான.

தந்தத் தகட்டுக் குடத்தைப் புடைத்துமுகிழ்
கஞ்சக் குலத்தைச் ஜலத்துட் படுத்தியிரு
தந்தக்குருத்தைப்பறித்துக்குறைத்துவெளிதொடுமாலே

தண்டக் குவட்டைக் கறுத்துச் சிவத்தவிழி
பந்தைக் கரத்திற் பிடித்திட் டடித்துபைய
தண்செப்பகட்டைப்பெருக்கத்துளைத்துவிரி சிறைநேமி

யங்கத் தையெட்டுத் திசைக்குட் பறத்தியற
வின்புற் புதத்தைப் படைத்துத் தடைத்துமத
வங்கைக் களிற்றை புனத்திற் றுரத்துமுலை யரமாத

ரன்புற் றெனைக்கைப் பிடித்துத் துணைக்கொழுந
னென்றிச் சைவைத்துச் சுகிக்கப் பணித்துநும
தஞ்சக் கரத்தைக் கருத்திற் றுதிக்கவர மருள்வீரே

கொங்கைப் பொருப்பத் திரட்கட் கடைக்குவளை
வஞ்சிக் கொடிச்சிற் றிடைப்பொற் றெருடிக்கைவளர்
கொண்டற்குழற்கொத்துடைச்சித்திரத்தனையதிருமேனி

கொண்டுற் பவிப்பத் திருட்டித் தருக்கமுட
னிஞ்சொற் கிளத்தச் சபித்தற் புதத்தினொடு [ள்வோரே
கொஞ்சச் சதைக்கட் டியைக்கற் புடைப்பெண்ண வரு

கங்கைப் பரப்பைக் குடித்துச் செருக்கியெதிர்
குன்றப் பொகுட்டைத் திரித்துப் பிதிர்த்துலவு
கம்புட் டிரைப்புட் கரத்தைச் சுவற்றிமுக படநீடு

கங்குற் பிறைப்பொற் பெயிற்றுப் புகர்த்தவள
வின்பத் தனிச்சித் திரப்புட் புறத்திவரு
கம்பத் துளைச்சற் சரைக்கைப் பகட்டுதைய விறகுலே.

தனனதன தனனதன தனனதன தனனதன
தான தந்தன தான தந்தன —தனதான.

நிலவுகட லுலகுமழ களிறுமணி யிவையெளிய
பூத லங்களுங் கோத லங்களுஞ் செலுநீதி
நிறையுறுதி பொறையறிவின் மகவுபெறன் மிகவுமரி
தாத லின்கொழுந் தேடி விண்படர்ந் திடுசோதி
யிலகுபுகழ் நபிகணபி யுமதிருகன் மணியனைய
வாசை மைந்தரின் காசி மென்றியம் பியநீர்மை
யினியதலை மகனுடைய பெயர்கொளொரு கவிஞனையி
வேளை யஞ்சலென் றுள விங்குவந் தருள்வீரோ
யகிலபல புவனமது முடியினெடு வெளியின்முத
லோன்மு னின்றுமன் றுடு கின்றவன் றிறலோரோ
அறிவினறி வறிபவரு மறியவரி தரியவொரு
சோதி யன்புறுந் தூத ரொன்றுவந் தருள்கோவே
யுலகுகுளிர் தரவெமது மதியினெழு கியகிரண
கார ணந்தரும் பூரண சந்திரன் பொருவாரோ
வுருகுமடி யவரிதய நெகிழவுணா வெழுமுதய
மே பலண்டருந் தீபமென் றிலங் கிறசூலே. (௯௦௦)

தத்தத் தன தத்தத் தனதன
தத்தத் தன தத்தத் தனதன
தத்தத் தன தத்தத் தனதன—தனதான.

முத்துத்தனு தித்துத் தெளிவொளி
வட்டத் தமை யுற்றுத் தருமிசை
முற்பட் டொரு பச்சைத் தழைமயில் வடிவாகி

முக்குற்றம கற்றித் தெருளருள்
வற்கக்கடல் புக்கிப் பலவுயிர்
வித்துக்கொரு முத்திக் குருநபி யெனவோதி
மத்திட்டுவ லித்துச் சிறுபுலி
கெச்சித்துமு ழக்கிக் குளறிட
மத்திட்டிடை பட்டுப் புடைபெயர் தயிரோபோல்
மக்கட்குறு துக்கப் படலையொ
துக்கித்திகழ் சொற்கத் தையுமுரி
மைக்கத்தொடு கற்பித் தருள்வது மொருநாளே
சித்தித்தடர் துட்டக் குபிரரை
வெட்டிச்சிறை யிட்டுப் புவிமக
டிக்கத் துநெ ளிக்கத் தகுதகு திகுதாதோ
இத்தித்திமி தித்தித் திமிதிமி
தொக்குத்தொகு தொக்குத் தொகு தொகு
திக்குத்திகு திக்குத் திகுதிகு வெனவாடி
யத்தத்தைவி ளைத்துப் பவுரிகொ
ணிர்த்தப்பதம் வைத்துச் சரகதி
யத்தைக்கொடு தத்தைத் துல்துலு மிசையேறி
மத்திக்கெச வெற்றிப் புலியலி
பட்சத்தொடு பற்றித் திருவடி
யர்ச்சித் திட மக்கப் பதிவள ரிறசூலே. (க0க)

தானன தந்தன தானத் தானன
தானன தந்தன தானத் தானன
தானன தந்தன தானத் தானன—தனதான.

மாயமருந்துசெய் மோசக் காரிகள்
கூடிய சம்ப்ரம லீலைக் காரிகள்
மானெடு மிந்திர சாலக் காரிகள் பழையோர்மேல்

வாரம றந்திடு சோலிக் காரிக
ளாடவர் பின்றொடர் வாடைக் காரிகள்
மாசர சஞ்செய்கு ஞலக் காரிகள் பொருடேடி

நேயமி குந்துழ லாசைக் காரிகள்
மாசறு சிந்துர நாமக் காரிகள்
நீடிய சங்கிர்த ராகக் காரிக ளணிகோவை

நீலந றுந்தன பாரக் கோடுகள்
மார்பில ழுந்தவி காரப் பேய்தொட
நேமமி குந்துழல் வேனுக் கோரருள் புரிவீரோ

பாய்திரை வெண்டுகி லாடைச் சேண்மதி
தோய்தரு மந்தர மேருப் பூண்முலை
பாரவ டம்படு மாரப் பேரிய மணியாறு

பாசடை விண்டலை மாரிக் கார்குழ
லாளொரு கொம்பிடை வாழ்பொற் பூமகள்
பாரிரு ளுண்டெழு வானிற் சூரிய னதிகாலை

யாயிர வெண்கதிர் வீசிப் போய்முகிழ்
காவிய லர்ந்தலர் வாசத் தாமரை
யாவிகு விந்திரு மாலைப் போதெழ வரவோடி

யாதிநெ டுங்குட பாலிற் செய்கனை
வான்முக டுந்திய கோபுக் காமலை
யாழிய டைந்ததை மீழத் தானரு ளிறைகுலே.(கoஉ)

தனன தந்த தந்த தனன தந்த தந்த
தனன தந்த தந்த—தனதான.

மழைமு கந்த கங்கை வெளிக டந்து யர்ந்த
மவுலி யுங்கு ளிர்ந்த மதிபோலும்

வதன முங்கு றும்புன் முறுவ லுங்க னிந்த
    மதுர முஞ்சி வந்த   கனிவாயும்
தழைமு கந்த கஞ்ச மலரை வென்று திங்கள்
    தனிகி டந்த செங்கை   யுடன்மேவு
தடவு மொன்ற வின்றி நெடுநி லம்ப டர்ந்த
    சரணு மென்று கண்டு   பெறுவேனோ
குழைகு கந்த வழ்ந்து சிறைகி டந்து வந்து
    குமிழ்ம றிந்தி லங்கு   விழிவேலுங்
குழலை யும்ப சிந்த கிளியை யுந்து ரந்து
    குயிலை யும்பொ ருஞ்சொ   லிசைநாணு
மிழைமு கந்த கொங்கை முகிழு முஞ்சு மந்த
    வினிய மங்கை நங்கை   யயிலோனே
வியன்ம ணம்பு ணர்ந்து மதின மும்பு ரந்த
    விருவி சும்பு றைந்த   விறகுலே. (௧௦௫)

தனன தத்தன தனன தத்தன
தனன தத்தன தனன தத்தன
தனன தத்தன தனன தத்தன—தனதான.

நகில வட்டம தலவா னக்குரு
    கிடுகு சிற்றிடை யலமா தர்க்கொடி
    நகைய லத்தொடர் நிரைவாண் முத்தணி குழைதாவு
நயன கட்புன லலவே லைக்கயல்
    பவள முத்தம தலவீ ழிக்கனி
    நறுநு தற்குள மலவா லப்பிறை   நறைநாண
வகில ரிக்குழ லலநீ லப்புயல்
    வதன புட்பம தலபூர் ணச்சசி
    யணிக முத்தல விரிபா ளைக்கமு   கெனமாத

ரவைய வக்குறி யயில்பா டித்தனி
யுருகி னித்தமு முழலா திப்பொழு
தடியெ னுக்கரு ளனுகூ லத்தொடு மருள்வீரோ
முகிலு டுத்திடு மலர்சோ லைத்தட
விரச தத்தக டிறழ்வா னெட்டுடன்
முதுப கட்டெழின் மதர்வா ளைக்குல மெதிர்சீறி
முடவு நெற்குலை யடிசா யப்பொரு
புலிய டிக்கவிழ் குலைவா ழைக்கனி
முடலை முட்கனி யுகவா லித்துகழ் மதிணுவாழ்
திகிரி வட்டமு மெழுபூ வட்டமு
மமுத வட்டவெ ணிலவூர் பொற்பெழு
சிமுத வட்டமெ னிழல்வாழ் வித்தருள் மகுழூதே
செகத லத்தவ ரனுகூ லப்பொரு
ளருளி னுக்கொரு பிரவா கக்கடல்
திருவின் மக்கநன் னகர்வாழ் கற்பக விறகுலே. (௧0௪)

தந்ததன தான தானத்தான
தந்ததன தான தானத்தான
தந்ததன தான தானத்தான—தனதான.

பம்புகலை யாயு ஞானத்தோர்கூ
ளின்கரும பாகை மீதிற்பாவ
நன்கிவைய னுசொல் சீருட்டோவ வறியாதே
பங்குதரு தீது பேணிப்பேணி
வன்கொலைகள் கோள்கள் சூதைக்கோலி
வெங்குபிரின் மூழ்கி வீயச்சேம. விழுவார்போ
னம்புநவை யோது மாசைச்சீறி
வண்கண்மைக ளோடு நூறிக்கோர
நந்திவிட வேமெய் நேயத்தோடு மகல்வானோர்

விஞ்சுகலி மாவை யோதப் போத
மின்றியச டாமெஞ் ஞானத் தீய
னென்றுமழி யாத வீடிற்போத வருள்வீரோ
கம்புளொரு கோடி பூகத்தேறி
விண்டுநற வூறு பாளைப்பூவி
னின்றுயில்செய் காலை சூன்முற்ருகு மதனலே
கண்படையி லாமல் வாய்விட்டான
பண்டியுளை வாக வீனச்சோதி
வெண்டரள மோதை வாதைக்காலி னுசிவாலே
யம்புவியின் வீழ்விண் மீனேப்பாவி
பங்கனையின் வீழ்ம னுழிச்சீர்கொள்
துங்கமதி னுவில் வாழ்வுத்தாதி யருளேசே
ரம்பதும மார்ப சிலப்பூர்ண
முந்தபுதல் லாசொ னேயற்ருயின்
னன்புமிக வேசெய் ஞாலத்தீப விறகுலே. (௧O௫)

தனதன தந்தத் தனத்த தானன
தனதன தந்தத் தனத்த தானன
தனதன தந்தத் தனத்த தானன—தனதான.

திணநறு மஞ்சட் குளித்து வாடைசெய்
கலவைவி ரம்பப் புகட்டிமேகலை
திகழொரு செம்பட் டுடுத்து நாண்மதி நுதன்மீதே
திலகமி டும்பொட் டளித்து நீணிற
விழியெனு மம்பைச் சிமிட்டி வாணகை
சிறிதுள ரும்பைச் சிரித்து மால்கொடு வருமாதர்
புனைமலர் மஞ்சத் தணைப்ப மாமுலை
யிருகையி துங்கப் பிடித்து நீடிய
புலவிய டங்கத் திருத்தி மால்வெகு பிர்யமோடே

புளகமெ ழும்பச் சுவைத்து வாயித
முழுதையு முஞ்சிக் குடித்து லீலைகள்
புணர்சுக வின்பக் கடற்குண் மூழ்குத லொழியேனே
கனைகதிர் துன்றிப் புதைத்த காரிருண்
முழுதும்வி ழுங்கித் துடைத்தல் போல்விரி
கரியவெ றும்பொய்க் குபிர்ப்ப டாமற வமராடு
கருதல ரந்தப் புரத்தி லேயெரி
மிகுதிகொ ழுந்தக் கொழுத்தி யேயொளிர்
கலைமலி திங்கட் குடைக்கு ளாளிசை யுடையோனே
யினமணி சிந்திக் கொளித்து வாய்முரல்
குடவளை கஞ்சத் தகட்டு நாண்மல
ரிடைதுய றங்கிக் கிடக்கும் வாவியி னிளவாளை
யிகலிமு ழங்கிப் பொறுத்த சூன்மழை
யகடுகு லுங்கக் கிழித்து மீதெழு
மினையவ ளம்பெற் றமக்க மானக ரிறகுலே. (கOசு)

தனதன தத்தத் தனத்த தத்தன
தனதன தத்தத் தனத்த தத்தன
தனதன தத்தத் தனத்த தத்தன—தனதான.

கலியையு லைத்துக் குலைத்து முற்றிய
பிணியைய ரித்துத் தெரித்து ளத்தெழு
கவலைநெ ருப்பைத் தணித்த ணித்தொனி வகலாதே
கருணைவி ளக்கைக் கொழுத்தி முற்செய்த
பவதிமி ரத்தைத் துடைத்து விட்டிரு
கமலப தத்தைக் கொடுத்தெ னைககடர் குபிரானே
நலியவு லப்பிக் கனற்சி கைப்பாவி
திரிகையி னிட்டுத் திரித்து நெட்டுட
னணிபுகை யச்சுட் டெரித்து நீற்றுகள் செயுமாய

ஈர்கபு லத்தைக் கடத்தி நித்தில
மரகதம் வைத்துக் குயிற்று கற்பக
நகரணி சொற்கப் பதிக்குண் முத்தியி னருள்வீரே
புல்கவ ழக்கத் தெருத்த லைக்கடை
குலைகணெ ரித்துப் பழுத்து திர்த்தினி
யுதவும ரத்தைக் கணித்த தற்குறு நசுருனி
புடையவ கத்திற் புறக்க டைத்தலை
நிலைபட நிற்கச் சபித்து மிக்கறி
வுறுதியு றுத்திப் பணித்து விட்டருள் பெரியோரே
குலவரை சுற்றிக் குரைத்த மைக்கடல்
சுவறவ டித்துக் குடித்து மத்தெதிர்
குளறியி டித்துத் தடித்து மைப்புயல் கனமேடை
குலவும னைக்கப் புதுக்கு சித்திர
மணவறை சுத்தப் பளிக்கி நிற்றிகள்
குறைசிகள் மக்கத் தலத்தி னிற்கர சிறகுலே (௧௦௭)

தனதன தத்தத் தனந்த தானன
தனதன தத்தத் தனந்த தானன
தனதன தத்தத் தனந்த தானன—தனதான.
கறுமல ரிட்டுப் பொதிந்த வோதியு
மழகுறு தற்பொட் டணிந்த மோடியு
நமனைவெ ருட்டித் துரந்த பார்வையு மிளைஞோரை
கயமுற வெத்திப் பணங்கள் காசுகள்
பலதையு முச்சிக் கொழுங்கு ளைலமு
நகையும மைக்குட் சிறந்த தோள்களு முலைமீதே
மறுவறு கீச்சுக் கிணங்க வேசில
பணியுமெ டுத்துச் சுமந்து வீதியின்,
வனையணி வச்ரக் கலன்க ளொலன வருமாதர்

வலையின கப்பட் டுழன்ற பாவியை
யுளமுரு கிச்சற் றிரங்கி யேவலின்
வளிபட ரட்சித் திரண்டு தாண்மல ரருள்வீரே

யுறுதவ முற்றப் புரிந்த யோகிக
ளொருதிரு வஸ்தைத் தெளிந்த ஞானிக
ளுமதும தத்திற் புகுந்து தீனிலை யுணராரே

யுரவுப வற்கத் தழுந்து வாரல
திலகுசு வற்கத் தரம்பை மாதர்க
ளுபையத னத்தைப் புணர்ந்துவாழ்வது கிடையாதே

திறல்கெழு வெற்றிக் கொழுந்து கால்விடு
நிலவுவி ரித்துப் படர்ந்த சீரொடு
திகிரியு ருட்டிக் குறும்பு நோயற நெடிதான

திரிபுவ னத்தைச் சிவந்த கோலொரு
நிழல்புகு வித்துப் புரந்து காவலர்
திருநகர் மக்கத் திருந்து வாழ்நபி யிறகுலே (௪௦அ)

தனனதன தாத்ததந்த தனனதன தாத்ததந்த
தனனதன தாத்ததந்த—தனதான.

வசுமதியை நோக்கி நின்று கவினொழுகு தாப்ப சும்பொன்
வடிவினொரு கீற்றெ ழுந்து குடபாலின்

வருபிறைநி லாக்கொழுந்து பகலுமுள தேற்சி வந்த
மலைவினுட லோய்க்கும் வண்ட விடுமார

பசியவிள நீர்க்கு லுங்கி லொடியுமிடை சூட்ச மென்று
பகருமிரு தாட்ச தங்கை யரமாதர்

படுபணியி னுற்ற மைந்த பணவறையின் வீட்டி னும்பர்
பயில்சுவன வாட்கை யின்ப மருள்வீரே

யசலமறு கோட்டெ றம்பி திரிகசன வேட்டு வன்ற
னரியகவை நாக்கு டும்பு மறபாலே
வமுதகலி மாப்ப யின்று சபையின்வெகு தோத்தி ரஞ்செய்
தகுமதென வேட்டி றைஞ்சு மகுமூதே
வுசுவரிவ ராற்கு லங்க ளுகழுவெடி போய்ப்பொ தும்பர்
முருகவிழ்ப லாப்ப ழுங்கண் மடல்வாழை
முடவுகுலை சிப்பொ டிந்து நறவுவய ளூற்றெ ழுந்து
முதிருமதி ளுப்பு ரந்த விறகுலே. (கoசு)

தனனதன தாத்த தந்த தானதன தத்த
தனனதன தாத்த தந்த தானதன தத்த
தனனதன தாத்த தந்த தானதன தத்த—தனதான்.

கரியவிருள் சீய்த்தி லங்கு கூன்குழவி நெட்டை
மதிவடமு லாய்க்கி டந்து பூம்புழுகி றைத்த
கலவைமுழுகாட்டிவிந்தை நாண்சுடரெறித்த முலைமானு
ரொருபெரிய கூற்றை வென்ற கூர்சணை விழிக்கு
மிசைமதுர மாய்க்க னிந்த வேய்ங்குழன் மொழிக்கு
முலகின்மயலாய்த்திரிந்து பாழ்ஞ்சடலமுற்றுமெலிவேனை
வரிவளைக ளீற்று லைந்து தீய்ந்தொடை பெருக்கு
நறவருவியூற்றிருந்து வார்ந்தொழுகு பற்பல்
வயன்மடையின்மேற்புலம்பியீன்றமணிமக்கநகர்வாழ்வே
விரிதிரைமு னீர்ப் படிந்து மீன்றுக ருமுற்று
பஃறிவிலை தூற்று கொண்டல் சேண்குடை நிழற்ற
விடையினொருகோட்டினின்றவான்புவிபுரக்குமிறகுலே

தந்தந்தன தந்தந் தனதன
தந்தந்தன தந்தந் தனதன
தந்தந்தன தந்தந் தனதன—தனதான.

கொஞ்சும்புது மஞ்சந் தனினில
வஞ்சுந்துகி லொண்பஞ் சணைமிசை
கொண்டன்பினொ டின்பங் கரைபுர ளரமாதர்
கொம்பொன் றிலி ரண்டாம் புயமுலை
சங்கொன்றிரு பைங்கொண் டையுமொரு
கொங்கொன்றுப சுங்கொண் டலுநிரை நிரைகோலி
விஞ்சுஞ்சிறு பிஞ்சும் பிறைவட
முங்கங்கண முங்கண் டிகையொடு
மின்கிண்கிணி யொன்றும் பரிபுர மொளிவீச
வின்பங் கொடு வந்தங் கலவியின்
முங்கும்படி யங்கம் புளகெழ
விண்டுங்கள்ப தந்தந் தருள்செய வரவேணும்
வஞ்சங்கடை நின்றங் கொருதிமு
னஞ்சின்றதை யுண்கென் றுதவிட
வம்பன்றினி தென்றென் றமுதுசெய் திடுவோரே
வன்கண்படர் புன்கண் குபிரர்முன்
வெண்டிங்களி ரண்டம் புலிசெய்து
வந்தொன்றினொ டொன்றும் படியருள் முதியோரே
செஞ்சந்தன முந்தண் கொடிவிடு
மென்குங்கும முங்கொண் டெழுதெளில்
சென்றென்றிசை மன்றங் கமழ்திரு மலர்மார்பா
செம்பொன்றிகழ் வெண்பொன் பயின்கர்
நம்பன்புகழ் தம்பங் கொடுமிளிர்
தென்சுந்தர நன்கிந் திலின்வள ரிறகூலே. (௧௧௧)

தந்தான தத்ததத் தனனதன தத்ததன
தந்தான தத்ததத் தனனதன தத்ததன
தந்தான தத்தத‍த் தனனதன தத்ததன,—தனதான.

கொங்காட கத்தகட் டலரிதழு டுத்ததொரு
பங்கேரு கப்பொகிட் டுறைதிருவை யொப்புமிரு
கொங்காசலக்குவட் டரிவையர்பகட்டிலுள மெலியாதே

வெங்கோப முத்தகட் டழைசெவிபு ழுக்கையொரு
சிந்தூர நெற்றிநற் றவளமலை யுற்றொருசொல்
விண்டேயுழைத்தெனக் கிதுசமையமுத்தியினி தருள்வீ

சங்காட விக்கணுற் றெளிர்குடவ யிற்றிளைய
வென்கூன்மு கத்தவொண் பணிலமணி கக்கவொளிர்
தண்டார கைக்குலச் சுடர்கிலவெ றிப்பநெடு மடுவூடே

செங்காவி நெட்டிதழ்க் குறுமுகையு டைந்தொழுகு
பைந்தேனு வட்டெடுத் தகன்வயலு ளப்பவெழு
செஞ்சாலிமுத்துடைக் கழையின்வளர்மக்கநக ரிறைகூலே.

தனன தான தானன தனன தான தானன
தனன தான தானன—தனதான.

அளக பார மீதாட வதன சோதி வேர்வாட
வதர மூறு தேனூட விடையான

வரிய வாள ராவாட நகில மேரு மார்பாட
வரிய பார்வை வேலாட விறையாரு

வளைக லாப நாளூட வமுத போக மேலாட
வளர்சை யோக மேயாடி யரமாதர்

வரும ணாள ரோடு பயிலு மேடை நீண்மாட
மலிவி மான மேல்வீடு தரவேணும்

இளைய வாமி ஞாட மறிய மாசி யாவாட
வினிய கூறி லீனட நிலவாட
இலகு பானு வர்ஞட வமரர் நால்வர் தாமாட
வியல்வி ஞூரி னீராடி வருவோரே
விளர்வெண் மூளை சேருட வொழுகு சோரி யாருட
விருது ராஜர் நீருட நரிநாய்கள்
விசையு மோடி யோடாட விடைவி டாது போராடும்
விறன்ம தீன நாடாளு மிறசூலே. (௧௧௬)

தத்தா தத்தன தத்த தானன
தத்தா தத்தன தத்த தானன
தத்தா தத்தன தத்த தானன—தனதான.

ஒட்டோ லைக்கவிச் சித்ர மோவிழி
வெட்டோ வெட்டிவி ழித்த தோகைகை
யொப்போ சற்பினை யிட்ட தோவர சிலைமேவு
பட்டோ பட்டுர வுக்கை யோமுலை
சற்றே விட்டும றைத்த தோவவர்
பட்சா திக்கவ லைக்கு ளேபட லொழியேனோ
கட்டா ணிப்பரு முத்தின் வீடுறை
பொற்பார் முத்திரை யிட்ட சீதள
கத்தூ ரித்திரு மற்பு யாசல வடிவாளா
நெட்டோ டைப்பொய்கை சுற்று சோலையு
டுத்தா லைப்பழ னத்த டாகமொய்
நெற்சா லித்தட மக்க மானக ரிறசூலே. (௧௧௭)

தனதான தத்த தனதான தத்த
தனதான தத்த—தனதான.

இடர்சூழி ருட்டி னரகேழு தட்டி
னிடையேவெ ருட்டி யடர்நாக
மெரிதீமடுத்தெ னுயிராற லைப்ப
விரைவாயெ டுத்து நுகராமு
னடியேனி ழைத்த பிழையேபொ றுத்து
ளகலாத பட்ச மறவாதே
வபிமானம் வைத்து மிருதாளின் முத்தி
யதுவேகி டைக்க வருள்வீரோ
விடையோர்ம ருப்பி னெடுமானி லத்தி
னியல்வாழ்வை விட்ட நெடியோனே
விரிநீர கத்தி னவதார சித்து
விளையாடு முத்தி யுடையோனே
மடலார்பொ குட்டு விரிதாம ரைப்பொன்
மலராச னத்தி னனநீடு
மடநாரை கொக்கு நிறைநீர்வ யற்கண்
வளமேவு மக்க விறசூலே. (கக௫)

தத்த தனதன தனதன தனதன
தத்த தனதன தனதன தனதன
தத்த தனதன தனதன தனதன—தனதான.

கைக்கு ளொழுகிய யடவிகள் நடவிகள்
புட்ப மலர்புனை குழலிகள் விழலிகள்
கற்பி னிலைதிரி யசடிகள் கசடிகள் பலசூது

கற்கு மவகுண முகடிகள் விகடிகள்
பற்கள் கடிபடு முதடிகள் பதடிகள்
கைச்ச ரசமொடு சருவிகள் மருவிக ளிளைஞோர்பால்

மிக்க பொருள்கவர் தொழிலிக ளெழிலிகள்
நித்த மலரடி வருடிகள் திருடிகள்
மெச்சு கலவியின் விரகிகள் துரகிக ளுறவாலே

மெத்த மயல்கொளும் வெறியனை வறியனை
நட்பி னெடுமன விருள்கெட வருளொடு
வெற்றி மலரடி யிருமையி னொருமையி னருள்வீரே

முக்ய வுயிர்தெரி லெவுகொடு கலமென
ரத்தின மணியொளி ரறுசொடு குறுசென
மொய்த்த கதிரிள வெயிலென நிலவென நெடுவானோர்

முத்தி தருமெழு சுவனவி னுலகென
நெய்த்த முகிலென் வுயர்குல வரையென
முத்து திரையென வகிலபு வனமென நபிமார்கள்

மக்க ளெனவரு பொருளுயர் திணையென
நிற்கு முயிருள பொருளுய ரிலவெனு
மற்று முளபொரு ளஃறிணை யெனவும தொளிவாலே

வற்க முடையப லுயிரையும் வடிவின
மைத்த பெரியவ னுமையொரு துணையென
மக்க நகரினில் வரவிட வருநபி யிறசூலே (ககசு)

தானந் தனதன தானந் தனதன
தானந் தனதன—தனதான.

காலும் புவனமு நீருங் கனலியும்
வானுந் திரிதரு பசுபாச

காயந் தனிலிலை யாமென் றுறுபவ
சாரந் தருமனு பவமாயை
சாலும் படியிபு லீசன் கலைவிடை
தானின் றெரிநர குழலாதே
சாரங் கனிகலி மாவிண் டுமதிரு
தாள்வந் தடையவு மருள்வீரே
நாலும் பருமறை நாலும் புவிபதி
னாலும் பரவிய மகுமூதே
நாளுந் துணைமகு பூபென் றுருதிரு
நாயன் றனியருள் பெறுதூதே
யாலும் பறவைவி ணாருங் கதிர்மதி
யாரும் பிரவலம் வருகாபா
வாளுந் திறலப்துல் லாதந் திடமக
வாய்வந் தருணபி யிறசூலே (ககஎ)

தான தந்தன தந்தன தானன
தான தந்தன தந்தன தானன
தான தந்தன தந்தன தானன—தனதன.

பாண்மு கந்தரி யஞ்சிறை நாகிள
நீல வண்டுகள் கிண்டந ருவுமிழ்
பார கொந்தளி பந்திகை சோர்தர மடமாதர்
பான்மு கந்தரு மூந்தைநி லாவட
நீடு மம்பணி வம்புற வீசிய
பாளி தந்தரு குங்கும சீதள மணநாறு
நாண்மு கந்தெழு கும்பப யோதர
மேன்மு யங்கிம யங்கிய தானிறை
நாண ழிந்துதி ரிந்துழல் பாவியை வரையாதே

நாவி யந்துபு கழ்ந்துகு ஜேஜய
தாளி ரண்டின டைந்திட வேயொரு
நாளி ரங்கிவ ருந்தலெ லுவருள் புரிவீரே

வாண்மு கந்துவி ளங்கிய வீரமும்
நீர டங்கவ ளர்ந்தருள் ஞானமும்
வான்வ ரம்புக டந்தவி சாலமும் வறிஞோர்பால்

வாரி யைம்பொன்வ ழங்குமு தாரமும்
வீறு மைந்தும மைந்தப்ர தாபமும்
வாயிலைம்புலன் வென்றவல்லாண்மையு முடையோரே

சேண்மு கந்துப றந்தகு ரீஇகுயிர்
தானி றந்துவி ழுந்ததை மீமிசை
சேர வன்றுவ ரம்புரி காரண முதியோரே

தேன ருந்தும ருந்துகள் பாலொரு
தூணி ருந்துவ ருஞ்சது மாமுக
தேவ கங்கையி லும்பர்பொ லுடுறை யிறசூலே. ()

தனன தத்தன தந்தன தானன
தனன தத்தன தந்தன தானன
தனன தத்தன தந்தன தானன—தனதான.

இணர்ப சப்புறு மந்தர மேருவை
விலைபு ரட்டிய திங்கணி லாவட
மிலகு வச்சிர வம்பெறி நாண்முகை முலையானை

யிழுமென் முப்பழ முஞ்சுவை சீனியு
நலதி ரட்டமு துங்கனி பாகொடு
மினிய சற்கரை கண்டிசை தேன்மொழி யதுபோலும்

வணர்கு ழற்பிறை செஞ்சிலை வாணுதல்
கொலைப டுத்தொழு குஞ்சுடர் வேல்வலை
வடுவ டர்த்தெறி யஞ்சன வாள்விழி யரமாதர்

வதியு நித்தில மண்டப மாளிகை
நிலவு கற்பக வும்பர்பொ னூர்தனில்
வலனு யர்த்தல் வரம்பெறு மூதிய   மிசைவீரே

புணரி வட்டம்வி ழுங்குமு னீரெறி
யலைக டற்படை கொண்டெதிர் சீறிய
புகர்மு கக்கரி சிங்கமெ னவரு   பரராஜர்

புரிய மர்க்கணு ழுந்துருள் போதிடை
துகள்ப டுத்திடு சிம்புளெ னவரு
புலிய லிக்கிரு கண்குளிர் மாதுல   ரெனும்வாழ்வே

யுணர்ம றைப்பொரு ளண்டர்பி ரானொடு
முடுகி யற்புத வின்சொலி ராசிய
முலக ளப்பவ ரும்பணி ராயிர   முறைபேசி

யுடலு யிர்ப்பென நின்ற கபீபென
வரச முத்திர வின்ப நல் வீடரு
ளுறைய மக்கமி ருந்தர சாணபி   யிறசூலே. (கககூ)

தனனதன தந்த தத்த தனனதன தந்த தத்த
தனனதன தந்த தத்த—தனதான.

முகமலர்சு ருங்கி யொட்டி விழியறவி ரண்டு பற்கள்
முழுவதுமு திர்ந்து சொற்க   டடுமாறி

முதுகுடல்வ ளைந்து கொக்கி னரைதிரைமிகுந்து வைப்பின்
முதிர்நடைத ளர்ந்து மெத்த   வயதாகி

யிகல்கபம டர்ந்து பித்த முடல்கிறுகி றென்று சுத்தி
யிருமலுமெ ழுந்து விக்க   லொழியாதே

யிருவினைம றந்து செத்து விடுமுனமு ணர்ந்து சித்தி
யிருமையினும் வந்து முத்தி   தரவேணும்

விகலமுறு கின்ற தட்ப மளறெழவ நிழ்ந்து வற்றி
விடுமொருநெ டுங்கு ளத்தி னிடைதுணி

விறல்கெழுமொ ரம்பை நட்டி யருவியதி னின்று வட்ட
வெகுபிரளை யம்பு துக்கி யருள்வோரே

குகையின்முய லுந்த வத்தர் சறகினெறி நின்ற பத்தர்
குலவரைதி ரிந்த சித்தர் சதகோடி

குழுவொடுமி றஞ்சு முத்தர் சதுமறைதெ ரிந்த சுத்தர்
குவலையம்வ ணங்கு கத்த ரிறகுலே. (கஉ0)

தனனதன தானதந்த தந்த தனனதனதான தந்த தந்த
தனனதன தானதந்த தந்த—தனதான.

திறிபுவன கோடியுஞ்ச மைந்து சரமசர மாகவும்பொலிந்த
திவியபல சீவ செந்து முந்து மிமையோர்கள்

திரளுமனுவா தமுஞ்சிறந்தநபிகளொலிமார்களுந்தவஞ்செய்
திணிகுகையி னுதை ரும்பி றந்து மறைநூலு

மறண்முதல்மெ ஞான முந்தெ ருண்ட சகலகலை யாக மும்ப குந்த
வறுசமைய பேத முங்கு விந்த தறியாதே

யறிவுமறி யாமை யுங்க டந்த பெரியதிரு மேனி யென்று ணர்ந்து
மரியசர ணார விந்த மென்று பெறுவேனோ

பறிதலைவில்வேடனின்பமென்சொலமுதகவிமாவழங்கவன்று
படர்சடையின் மூல மும்பி டுங்கி முதலோடே

பசியகுட வேனடந்து வந்து புகமொடுசலாமி யம்பி நின்று
பழையபுகழ் சேரி லன்று ளம்பி னருள்வோரே

யெதிகடன்மு னீர்மு கந்த ருந்தி யகிலதல மேழு மஞ்ச னஞ்செய்
யெழிலிவளர் காவு மண்டு குண்ட களிகூழு

மெயிலுமதின் மேடையின் பசும்பொனிலவு மணிமாட முஞ்செறிந்த
வெழின்மதின நாடு தங்கு மெங்க ளிறகுலே. (கஉக)

தனன தந்தன தந்த தானன
தனன தந்தன தந்த தானன
தனன தந்தன தந்த தானன — தனதான.

இளமை நின்றுக ழிந்து நாள்களின்
முதுமை வந்துக லந்து பேரழ
கியல கன்றுதி ரங்கி மேனியு மெலிவாகி

யெயிறு தந்திவி ழுந்து தேகமும்
நரைபி றழ்ந்துப டிந்து கூர்விழி
யிணையி ருண்டும ருண்டு போய்மொழி தடுமாறி

யுளைவு கொண்டகு டங்கை யோர்தடி
மிசைகு விந்துந டந்து வாயறி
யுணர்வ ழிந்துகி டந்து கான்மல சலநாறி

யுடைகு லைந்துந டுங்கி வாய்நுரை
கொழுகொ ழென்றுவ டிந்து பாவியெ
னுயிர்பி ரிந்திடு முன்பு தாளிணை யருள்வீரே

தளமெ ழுந்திசை கொம்பு தூரிய
முருடு டுண்டுடு டுண்டு டுடுடு
தனன தந்தன வென்று மோகர மடர்தாளந்

தகுணி துந்துமி திந்தி தோதிமி
டிகுகு டிங்குகு டங்கு பேரிகை
தமர கிண்கிணி கிண்கி ணாரமு மிகுமோதை

களமெ ழுந்தெதிர் வந்த பூஜகல்
மகுட மொண்டிரு துண்ட மாகவொர்
கடிகை நின்றமர் வென்று பார்மிசை குபிரானோர்

கணம டிந்தபி ணங்கள் நாய்நரி
கழுக ருந்தவி ருந்து தானருள்
கமழு மம்பர்பொ னும்பர் நாடுடை யிறைகுலே (கஉஉ)

தனனதன தந்த தத்தான
தனனதன தந்த தத்தான
தனனதன தந்த தத்தான—தனதான.

மிகைகளவு கொண்ட கைக்காசி னதனளவு ணர்ந்து கற்பூர
மிருகமத வண்ட லிட்டுரு முலைமீதே
விளைகலவி யின்ப யிற்பாக ளியல்வைய வங்க ளைப்பாடு
மிறைகவிதெ ரிந்த ளுக்காறி னுழலாதே
வகிலதல மெண்டி சைக்கோடி நறியமண மண்டு கஸ்தூரி
யமையுமெழு வம்பு யத்தாம வழகேசே
யரனுபையபங்கயத்தாளினபையமென நின்ற கொத்தோடு
மடிமையிவ னென்று சற்றுள வரவேணும்
முகரமெறி குண்ட சழ்ச்சுழு நெடியசர மண்ட லத்தூடு
வனைபொனுல கொன்றெ டுத்தேவ மணிவாயில்
வளர்படிக டந்து புக்காமு னறவுயிரு லந்து ஷத்தாது
மடியவடர் கின்ற கத்தாவி னருள்தூதே
நிகரின்முகி றஞ்சு கச்சூர மிடைசமுகு செம்ப ழுக்காய்க
ணிரைபவள பந்தி யைத்தூவ வயன்மீதே
நிறைசெநெல்விளைந்துமுத்தினவெயிலெனவிரிந்துமுக்கோடி
நிலவெனவ யங்கு மக்காவி. ணிறகுலே (௧௨௩)

தனனதன தனனதன தந்தனந் தந்ததன
தனனதன தனனதன தந்தனந் தந்ததன
தனனதன தனனதன தந்தனந் தந்ததன—தனதான.

குழவுமுதிர் கதலிபல வின்பழன் றண்சுவையி
னமிர்தகுண மிழுமெனெழு பண்கனிந் தின்பமுறு
குழலுமதி மதுரவமு துங்கரும் பும்புதிய மதுசீனி

குயிலுமிசை பயில்கிளியும் வென்றுமன் றங்குலவு
நவரசமு மொருவடிவு கொண்டெழும் பண்பனைய
குதலைகனி மழலைமொழி கொஞ்சிடுங் கிஞ்சுகமென் மலர்வாயும்

விழுவுகதி ருதையனுகை யஞ்செயுந் திங்களென
வெழுதரிய திருவுருவ வின்பமுங் கொண்டுசெறி
விரைகளப மிருகமத வம்பரெங் குங்கமழ வனுராக

வினையவரு மரமகளிர் தங்கடங் கொங்கைபுணர்
பிடிதழுவு களியனைய கொண்கனென் றெண்கிரண
வியனுலகி னனுபவப யன்சுரந் தன்பினருள் புரிவீரே

முழவுமுதிர் பதலைதுடி வங்கியம் பொங்கியெழ
ரரரரர ரிரிரிரிரி யென்றென்று டுங்கைசதிர்
முறையினெடு கணிகையர்பதம்பெயர்ந்தும்பரதவிதமாட

முடவுகண பணவெளர வஞ்சுமங் கெஞ்சுபொறை
யுலகுபுரி கிகிரிமனர் சங்கம்வந் தஞ்சரணின்
முடிதொழுது திறையினொடு கும்பிடுஞ் சிங்கமெனு மழகேசே

மழவுமுதிர் சினைவயிறு ளைந்துநொந் தந்தரள
மணிசொரியு நிலவுதிகழ் சங்கமுஞ் செங்கையலு
மதுமமுரல் பதுமமலர் வண்டுகிண் டுங்குவளை வயலூரு

மதின்முகடு தடவுமணி மண்டபந் தண்டலையி
னசைநடைய பசியசிறு தென்றலங் கன்றினொடு
மழைதவழ்பொன்மதினமதின்மண்டலங்கொண்டநபி. யிரகுலே

தத்தத்தத் தத்தத் தத்தத்
தத்தத்தத் தத்தத் தத்தத்
தத்தத்தத் தத்தத் தத்தத்—தனதான.

கொத்துக்கட் பச்சைப் பிச்சித் தட்டப்புட் பத்திற் றத்தக்
குப்பிப்பொற் குச்சுக் கற்றைக் குழல்தாவிக்

கொப்பெட்டித் தொட்டுச் சற்றுக் கைக்கொப்புப் பெற்றப் புக்கட்
கொச்சைச்சொற் பச்சைத் தத்தைப் பொதுமாத
ரெத்துப்பொய்க் கட்டுத் தெட்டுத் துத்துக்குட் சிக்கிப் பித்துற்
றெட்டிக்குட் கற்பைக் கைத்திட் டவர்காமத்
தெச்சிற்பட் டைக்கிச் சித்தக் கட்டிப்பொற் சொற்கத் தைத்தொட்
டெய்த்தொட்டுச் சிட்டிற் பட்டுச் சுழல்வேனோ
புத்தைச்சிட் சித்துச் சுத்தக் கத்தர்ச்சித் தர்ச்சித் துப்பெட்
பிற்புத்திச் சொற்சொற் கற்பித் தருள்வோரே
புட்கிக்கட் சித்துற் கத்திற் றுத்திப்பைச் சற்பத்தைக்கைப்
புய்த்துக்கட் கத்திற் செற்றுக் களைவோரே
பத்தெட்டுப் பத்தர்க் கொற்றைக் கைபிட்டத் திற்சுட் டத்தைப்
பற்றித்துய்த் துய்ப்ப ப்பைக்கிட் டருள்வோரே
பத்திப்பொற் பெட்டுக் கற்பச்சித்திப்பட் டத்தைக்கட்டிப்
பட்டத்திற் சொற்கத் திற்புக். கிறகுலே (சஉரு)

தனனத் தனந்த தானன தானன
தனனத் தனந்த தானன தானன
தனனத் தனந்த தானன தானன—தனதான.

இகலிச் சிலம்ப பாடக மாடக
மணிபொற் சதங்கை கான்மிசை யோலிட
யிளகிக் குலுங்கு மேரிள நீர்முலே குழையூசல்
இடறிப் பிறழ்ந்து சேலெனும் வேல்விழி
புயன்மைத் திருண்ட நீடளர் காடவி
யியல்பொற் பமைந்த பாரக லாபமென் மயில்போலே
பகலொத் தசெம்பொன் மாளிகை மேனிலே
சுடர்வச் சிரங்கள் சோதிநி லாமணி
பருநித் திலங்க ளாலொளிர் மேடையி னிடைதூய

பளிதத் தொடம்பர் மான்மத மேகமழ
மணிசப் ரமஞ்ச மீதர மாதர்கள்
பயில்சொற் கவின்ப வூழியின் வாழ்வது தரவேணும்

மகரத் தரங்க வாருதி சூழ்திரை
யுலகத்து வஞ்சி நீண்மரம் வேரொடு
வருவித் துநின்ற தோடுரை பேசிய வதனுலே

மகிழ்வுற் றஜின்க ளோர்பதி னுயிரம்
மொருமிக் கவந்து தீமெறி யேவர
மதுரித்த செஞ்சொ லார்கவி மாமொழி புகல்வோரே

சிகரப் பிறங்கல் போலொளிர் மேவிய
துகிரிற் கனிந்த நீரது தேனெடு
சிதறிப் பழங்கள் கால்வது பாசிலை புவிவானீள்

சினநெட் டிலங்கை மாமர மானதொர்
குதற த்தினின்ற வாசனை வீசிய
சிதறத்தின்முந்தகாவினின்மேவிய.விறகூலே (கஉசா)

தாதத்தத் தந்தன தாதத்தத் தந்தன
தாதத்தத் தந்தன—தனதான.

மேகத்தைக் கொண்டலை நீரிட்டுக் கங்குலை
மேலிட்டுத் தண்டலை நிகரோதி

மேன்மைப்பொற் கொம்பன ஞர்செப்புக் கொங்கையின்
மேடைக்குட் பஞ்சணை மிசையேயோர்

பாகத்திற் செங்கையின் மேவிச்சற் றின்புறு
பாவத்தைக் கொண்டனு பவியாதே

பாவிக்குத் தம்பமும் நீர்முத்திப் பங்கச
பாதத்தைத் தந்தருள் புரிவீரே

பூகத்திற் சங்கின மேறித்தப் பந்தரு
பூவிற்கொத் தின்பசு மடலூடே

பூரித்துப் பன்றிகள் சூன்முற்றிக் கண்படர்
பூர்ணத்துத் திங்களவை குதல்போலு

மாகத்திற் செஞ்சுடர் தோய்னெற்றிக் குன்றுறழ்
மாமகத் தெங்கட மிறகூலே (கஉ௭)

தனதன தத்தத் தத்தத் தன்ன தானன
தனதன தத்தத் தத்தத் தன்ன தானன
தனதன தத்தத் தத்தத் தன்ன தானன—தனதான.

அழகிய முத்துக் குச்சுப் பின்னல் வார்குழ
லெழுதிய பச்சைப் பொட்டுத் தெண்ணி லாநுத
லணிகுழை யெட்டித் தொட்டுப் பின்னு லாய்வரும் விழிவேலு

மமுதுப ழுத்துக் கட்டிக் கன்னல் போன்மொழி
கலசம ருப்புச் செப்பு கன்னி காரமு
மடல்பொரு பட்டுக் கச்சுக் கிண்ண மாமுலை விலைமாத

ரெழில்வடி விச்சித் திச்சுத் தெண்ணி நாடொறு
முருகிய வத்தைப் பட்டுப் பின்ன மாயுள
மிடைவதொ ழிக்கத் தக்கப் பின்னை வேறிலை யதனாலே

யெளியனி டத்திற் சற்றுப் புண்ய மாய்மன
தருளொடு திட்டித் திட்டுக் கன்ம நோய்பவ
மிடாற ரட்சித் தெற்கு ஜென்ம சாபல்ய மருள்வீரே

பழிமொழி துற்றுத் தெற்றுச் சன்னை பேசிய
வபுஜகன் மற்றத் துட்டத் துன்ன லாரொடு
பகைபற வெட்டிச் செத்து சென்னி மூளையை நரிநாய்கள்

பசிகொடு பிச்சிப் பிச்சித் தின்ன வாய்குறழ்
கழுகுகை கொட்டிக் கொட்டிப் பொம்ம நீள்குடர் [சே
படுகள முத்துத் துய்ப்பப் பண்ணு வாழ்வலி யுடையோ
ம்மழைமுகில் மொய்த்துச் சுற்றித் துன்னு சோலையின்
மடுவயி முக்கிப் புக்கிச் செங்நெல் வாழையை
மடலொடு மெத்தித் தத்தி கன்னி வாளைகள் குதிபாயும்
வளர்கதிர் முத்துக் கொத்துச் செங்நெல் சூழ்வயல்
கொடிமதி லெட்டுக் கட்டுச் சன்ன மாளிகை
மருவிய மக்கத் துக்கு ஜென்ம நாயக ரிறகுலே. (கஉஅ)

தனனத் தனனதன தானன தனத்த
தனனத் தனனதன தானன தனத்த
தனனத் தனனதன தானன தனத்த—தனதான.

அருமைப் பெரியவொரு நாயன்மு னமைத்த
மறுவித் தறையின்விளை வாலம ணமுத்தை
யளிநெட் டலைகள்கரை மீதிடை கொளித்து வருநீர்மை
யமிர்தச் சுவையி னடு பாலினும் விளர்த்து
வமுதக் கனியினல தேனினு மினித்து
ஹவுலற் கவுதறெனு மாறுத லைவைத்த குளமான
வரிசைத் துறையினவ நீதமே துவுற்ற
வமுதைப் பருகியுமர் தீனவ ரொடொட்ட
மருவிக் கொடியபர தாபமு மொழித்து வினைதீர
மறுமைக் கணுமையெதிர் காணவ ருள்பெற்று
மிளிர்சொற் கநகர்மனை வாழ்வது கிடைக்க
மனம்வைத் தடியிலடி யேனையு மிரட்சித் திடவேணும்
உரவிப் ப்ரவிசெறி பாளைய முகத்தி
னறலற் றுருகியசு காபிக டவித்து
ளூழலுற் றெழுபதிஇ னுயிரர் கடொக்க வறிதான

வுறவிக் குளதிரிடி போன்மென முழக்கி
நதியிற் பிரளையவெ ளாறுவ ருவித்திவ்
வுலகத் துகமுடிவு நாளள வுநிற்க வருள்வோரே
இருமைப் பதியினுபி மார்களி னுமிக்க
முதன்மைத் தலைமையுடை யிருயி ரெவைக்கும்
மிறைவர்க்கினியவொருதோழரெனநட்பின் வருவோரே
இகலிக் குறுதியிள வாளைக ளுழக்கி
யடவிக் கமுகின்விளை பாளையி னகட்டி
னிடையிற் றுயிலுமதி ளுநகர் புரக்கு மிரகுலே.(௧௨௬)

தானன தந்தா தன்னதன தான
தானன தந்தா தன்னதன தான
தானன தந்தா தன்னதன தான—தனதான.

வாசவ னம்போய் வெளவுதவ யோகர்
பூவலம் வந்தே வெவ்வழலின் மூழ்கி
மாகதி யென்றே பௌவநதி பாடி யலைவோர்கள்
வாய்மையி னும்பே றுள்ளகலி மாவை
யோதியு ணர்ந்தா ரில்லையெனி ஞேயின்
மாயம றங்கூர் வெய்யபவ காரி யெனநாளும்
ஊசல்வ டம்போ னெய்யவெறி பாவி
ஞேடம ரம்போல் வல்லைபடர் காவி
னூர்சக டம்போ லொல்லைதடு மாறி யலைவாயின்
ஊடுது ரும்பா யெல்லிபகல் பாவி
யாவிசு ழன்றே யுய்யும்வழி நூறி
யூழலு டம்போ டள்ளலுற வேத விதியாமே
ஏசிம லைந்தே புள்ளியிள மானை
மீனைய டர்ந்தே வள்ளையள வோடி
யேவமு னிந்தே கொல்லுமுழு நீல விழியாடாள்

ஏவிவி டுஞ்சூர் பில்லிகெட மோதி
வாதையி டும்பா கள்ளநெடு நீலி
யேதமு ழந்தே யைவடர் சாப மிடுவோரே
மூசிவெ குண்டே வெள்ளிடைவ ரால்க
டாவியி ளஞ்சூல் வெள்ளையென மேக
மூரிவ ரம்பார் கொய்யடிய நாரை யெழுவாவி
மூழ்கியெ ழுந்தே துள்ளிமதர் வாளை
பூகந றுந்தேன் வெள்ளிமடல் கீறு
மூவுல குஞ்சீர் செல்லுமதி னாவி னிறகுலே. (கரு0)

தனந்த தத்ததன தான தானன
தனந்த தத்ததன தான தானன
தனந்த தத்ததன தான தானன—தனதான.

கரும்பு வட்டினிய சார மோமது
ரசம்ப ழுத்தொழுகு சீனி யோசுவை
கனிந்த புத்தரச தாளி யோவடி யிடுபாகு
கலந்த சர்க்கரைபெய் பால தோகனி
நலந்தி ரட்டமிர்த பான மோமொழி
கவின்கு ழைத்தெழுது பாவை யோவடி வியன்மேனி
யரும்பு கற்றயிள ஞாய றோதனி
கடைந்த பொற்பதும ராக மோயமு
தசும்பு வட்டவெணி லாவ தோமுக மெனுமோக
வரம்பை யர்க்குயிர்ம ணாள ரேதனி
யவன்ற னக்குமொரு தோழரேயட
ரலங்கு வச்ரபதி யாள ரேயரு ளமரேசே
விரும்பி யுற்றகலி மாவொ டாவியு
நடந்து செத்தபிற காரு மேளையை
விரைந்த டக்கியகல் காலை தீர கழலாதே

விடங்கொ ளித்தரவு தேளு ருதுட
னெரிந்தி டக்கபுற தாபு ருதெழில்
விளங்கு சொற்கமண வாடை வீசருள் புரிவீரே
வருங்க விப்புலவ னாடி யேவுமை
யிறங்கி மிக்கறவு லாவின் வாயிலின்
வணங்கி நிற்பவவ னேறு வாகன முயிர்மாய
வருந்தி மெத்தவுழல் வேளை மீளவு
மிறந்த வொட்டைகையி னேறி யூர்புக
வரங்கொ டுக்குமதி னாவில் வாழ்நபி யிறசூலே. (க௩க)

தனதன தனதன தத்த தானன
தனதன தனதன தத்த தானன
தனதன தனதன தத்த தானன—தனதான.

வரியளி யுதறிமு டித்த வார்குழல்
கலையொடு சிலையைம ருட்டு வாணுதன்
மதராரி சிதறிய டர்த்த வேல்விழி குயில்யாழ்போல்
மதுரவி னமுதுப ழுத்த தேமொழி
பிறைவடமிடறும ருப்பு நாண்முலை
மரகத மயில்வடி வொத்த சாயலின் விலைமாதர்
விரிகதிர் நிலவிய வச்ர மேடையி
னறுமல ரமளிப டுத்த பாயலின்
மிடறெழு மிசைகள்ப டித்த மோடியி லவர்மேனி
மிர்கமத களபம ணக்கும் வாடையி
னரசிலை தெரியவு டுக்கு மாடையின்
மிகவும யல்கொளுப வத்தன் மேவுத லொழியேனோ
விரவிப பெரியவி ருக்க நீழலி
னறிதுயி லமரர்வ ருக்க னாதப
முலவுவெண் மதிவத னத்தி னூடுறை வரலாலே

வுறுசின குறுகிமு கத்து வீழ்வெயில்
மறைபட முடவுட டத்தி னுலர
வுயர்குடை யிடமுன்வி தித்த காரண   முடையோரே
யிரசத மனையத கட்டு வால்கொடு
மதகிடை யுழறிய டித்து நாரைக
ளிரதர மடுவையு ழக்கி வாளைகள்   குதிபாயும்
யினவளை தவழுவ யற்கண் மேவிய
வகழியு மதிலும ணிப்பொன் மாடமு
மிலகிய மதினக ர்க்குள் வாழ்நபி   யிறகுலே. (கநூஉ)

தந்ததன தத்தத்த தத்தனந் தானதன
தந்ததன தத்தத்த தத்தனந் தானதன
தந்ததன தத்தத்த தத்தனந் தானதன—தனதான.

தண்டுகையெ டுத்துப்பு டைக்கவும் பாரதலை
மண்டையுடை பட்டுத்தெ றிக்கவும் பாவியவர்
தங்களைநெ ருப்பிட்டெ ரிக்கவுந் தேளரவு   சதகோடி
தந்தமத மூத்திக்க டிக்கவுந் தேவர்தமை
கொண்டிருப தத்தைப்பி ணிக்கவுந் தீயவுடல்
சங்கிலிக ரத்திற்பி ணிக்கவுங் காபருடல்   கரியாக
மண்டுதழல் சுட்டுப்ப றத்தவும் தீயனரி
கண்டமிசை வைத்துக்க டிக்கவுந் தூளியெழ
வன்றிரிகை யிட்டுத்தி ரிக்கவுந் தாலமுழு   மடலூடே
வன்பிடரி தொட்டுப்ப றிக்கவும் பேதமுறு
தெண்டனையி தற்குட்பொ றுக்கவந் தோகொடிது
வண்கணர கத்தைக்க டத்திநுஞ் சேவடியையருள்வீரே
கொண்டலைய லைத்துக்கு லைத்துநுண் கார்மணலை
வென்றலைபு ரட்டிப்பு குத்திடுங் காவனைய
கொந்தளக முத்துக்கொ டிக்கரும் பானவுமு   கபிபான

கொஞ்சுகிளி யைக்கைப்பி டித்தருந் தினெறியின்
மன்றலைமு டித்துத்தி ளைத்தலங் காரமொடு
கொங்கரெனவைப்பிற்சுகித்திடுங்காமனலனுடையோரே
செண்டுலவு நெட்டொட் டகைக்குவந் தேறுமுது
கிங்குமையெ டுத்துச்சு மக்கவும் பேறுடைய
செம்பனுல கத்திற்ற ரிக்கவுஞ் சாபவர மிடுவோரே
செண்பகவ யற்கட்ட டர்த்திளஞ் சோலைமணி
மண்டபமு கப்பிற்பு துக்குமொண் சாலையிடை
தென்றறவழ் மக்கப்ப திக்குள்வந் தாழுநபி யிறசூலே.()

தய்யான தந்ததன தான தானன
தய்யான தந்ததன தான தானன
தய்யான தந்ததன தான தானன—தனதான.

மய்யோடெ ழுந்தகரு மேக மோநறு
நெய்யோட மைந்தகுழ லூச லோகுழை
வைவாளி லங்குமயில் வேலி னேடிகல் விழிமாதர்
வல்லோதி ரண்டெழு கோர மோசிமிழ்
வில்லார முங்குதன பார மோநெறி
வல்லார்ம யங்குமதி நாணு நாடொறு மயலான
வுய்யாத சிந்தைதனில் வீழ மாதவஞ்
செய்யாத வம்பனிவ னுகு மேயென
வுள்ளாவி நொந்துருக வேசி யேசொல மெலிவேனோ
வொய்யார வுங்களிரு பாத மாமலர்
கையார வெந்தன்விழி கூர வேகன
வுல்லாச மும்பெறம னுமி லேயுற வரவேணும்
மெய்யான வுங்கள்கலி மாவை நாவதி
னுய்யாத வண்டர்பெரி யோரு மேவரும்
விள்ளாதி கழ்ந்துசொலின் மாய நாரக முழல்வாரே

வெய்யோனு மங்கின்மிளிர் சோமன் வானவ
ரெல்லாமி றங்கியும தேவ லேசெயு
மெய்யாறு வன்பிணிக டார நாவற வருவோரே

செய்யூடொ சிந்தமுதிர் சாலி வேலிக
ளுய்யான மெங்கும்வளர் தாழை வாழைக
டெள்ளார முஞ்சிதறு பூக நாகிள விரிபாளை

செல்லோடி வந்துலவு மேடை யோடைகள்
வெள்வால வண்டுதுயில் காவி வாவிகள்
செவ்வாயுறைந்தமதிளுவின் மேவியவிறகுலே. (கஙச)

தனதந்த தனதந்த தனதந்த தனதந்த
தனதந்த தனதந்த—தனதான.

இருகெண்டை யொருதொண்டை யிருகஞ்ச மொருசங்க
மிருசந்தி யொருதிங்க ளதிமோக

வெழிறந்த தரளங்க ளணிதங்க வடமுங்கி
யிறுகுந்த ணரவிந்த மழகான

தருபந்து சிறுகும்ப மொளிர்குந்த முயர்குன்று
தனைவென்று வருகொங்கை மதயானை

தரவந்த பொதுமங்கை புரிவஞ்ச மயலென்ற
தனைபொன்றி விடவின்று வரவேணும்

பொருகின்ற படையம்பு சிலைதண்ட மொடுசெண்டை
பொரவந்த கொலைவண்ட ரொருகோடி

புனையும்பொன் முடிநின்று வுருள்வென்று கொடுபொங்கி
புகழ்செம்பொன் மலைசென்று ளெதிர்சீறி

வருசிங்க மெனவந்து பெயரெங்கு முறநம்பி
னலனன்பு மிகுசெங்க ணுடையோரே

வளர்மங்கு லொளிதங்கி யெழுமிந்து நிகர்கொண்ட
வதனங்கண் மணியெங்க. ளிறகுலே (கஙரு)

தனுை தனுை தத்ததந்த தானன
தனுை தனுை தத்ததந்த தானன
தனுை தனுை தத்ததந்த தானன—தனதான.

ஆடுபால் கனிதேன் விட்டளைந்த மாமொழி
விலைமா மகளார் பச்சைமஞ்சள் வாடையி
னதிலே மனமே தட்டழிந்து நாடொறு மயலாகி
கொடியே னவமே செட்டுநொந்த பாதக
னடியே னுமையே முற்றுநம்பி னேன்மிகு
குறைபோ யுயவே சற்றிரங்கி யாழ்வது கடனுமே
சுடுபா லையினீ ரற்பமின்றி மானிடர்
தடுமா றியபோ தத்தமஞ்சு நீள்விரல்
சுழியா றுகவே தத்தமுண்டு தேறிட வருள்வோரே
மடுவா ளைகள்போய் மூட்டவன்று பூகத
மடல்வாய் விரிநீள் கொத்தலர்ந்த பாளைகள்
வளர்மாமதிணுமக்கமென்றும்வாழ்வுடை யிறகுலே. ()

தத்தாத்தத் தாத்தத் தாத்தத் தாத்தத்தனதன
தத்தாத்தத் தாத்தத் தாத்தத் தாத்தத்தனதன
தத்தாத்தத் தாத்தத் தாத்தத் தாத்தத்னதன—தனதான.
கற்ருேர்க்குட் பேச்சிட் டேய்த்துத் தோற்றுத் திரிபவ
ரைப்போற்பற் ரேர்க்குற் ருேற்று திட்புக் குலகிரி
தற்ருக்கட்பாக்கட்டாக்ஷதீக்ஷதீக்ஷளமுனியதுபோத
தக்காற்றக் கோற்ற பாட்டுக் கேட்டுச் சிறியனே
நட்பார்க்குட் சேற்றிற் கோத்துச் சீட்டுட் படவருள்
தக்காச்சிக் காச்சிக் காழ்பட் டேறற் றிணையுன தருள் பாராய்

பற்றோர்க்குட்போய்ப்பற்றாய்க்குட்கெட்டோர்க்குத்திருவக
லக்காற்றைக் காட்டிக் காற்றைத் தாட்டிக் கையனற்றரு
மற்றாற்றத்தோற்றக்கீற்றிச்சீற்றிச்சீட்டைச்சரணருள் புவிமீதே

யுற்றாற்றூத் வாக்கை சேர்க்கைப் பூற்றிற்பொருள்ரு
ளிற்றாக்கத் தாக்கத் தாய்ப்பெற் றார்க்கக்கரிதெனக்
குட்போட்டுப்பார்க்கப்பார்ப்பிட்டோர்க்கப்புவிமக. ளிறகுலே

தந்தன தானன தத்தாதந்தன தானன தத்தா
தந்தன தானன தத்தா—தனதான.

கொந்தழ வோதிவ கைக்கே யிந்திர சாபநு தற்கே
கொண்டயி னீலவி ழிக்கே குயில்போலே

கொஞ்சிய ராகமொ ழிக்கே செங்கனி வாயினி தழ்க்கே
கொங்கவிழ் தாதின கைக்கே யழகான

மந்தர பாரமு லைக்கே யிந்திர ஜாலவி டைக்கே
மண்டுதெ டாகந டைக்கே பிடியான

மங்குல்கொல் யானைந டைக்கே சந்திர காவியு டைக்கே
மங்கையர் பால்மனம் வைத்தே யுழல்வேனோ

சிந்துர யானைமு டித்தேர் கந்துக யூகப டைப்போர்
சிந்திட வோர்கம ணற்றா வியகோவே

சிங்கப தாகைபி டித்தே வெண்குடை நீழல்க வித்தே
தெண்டிரை ஞால மளித்தே வருகோவே

சந்திர சூரிய னாற்சே னும்பரி னைவர்த மைச்சீர்
தண்டலி னேவல்ப ணித்தாள் பெரியோரே

சந்தன வர்டையு க்கூர் தென்றலு லாவும டுச்சூழ்
தண்டலை சேர்மதி னத்தா. ரிறகுலே (௧௱௮)

தனதன தனதன தான தந்தன
தனதன தனதன தான தந்தன
தனதன தனதன தான தந்தன—தனதான.

நறுமல ரணியொடு சூடி யந்தன
மிர்கமத களபம ளாவி மண்டிய
நறைதட வியகுழ லான கொண்டலு மனைமானும்
நடைபிடி யிடைகொடி மார்தர் தங்குய
முழறிகழ் தறுவிழி கோடி ரண்டையு
நளினிற ளினநறை வாரு வண்டுக ளிசைபாடுங்
கெறுவவ கடதட சூளி யின்பொழி
திறிகட மும்மத யானை திண்படு
கிழைவரை நிகர்புய மீதுகொண்டுயிர் குறையாதே
கிர்பையொடு விகசித பாத பங்கய
மலரடி பிறமொழி வீசி நண்பர
கெதிபெற சுவனநன் னுடு தந்தருள் புரிவீரே
கறைமடை விடுமென வோடி முங்கிய
ரணகள முகமதி லாடி டும்பல
கசரத துரகப தாதி வெண்டிரை யலைமீதே
கனமுரு டுடுடு டுடு டுண்டுடு
செககிண செககிண சேகு செந்தரி
கககக ககவெழு பேரி துந்துமி தவில்தாள
மறைபடு முரசுக ளூதி யின்பல
குணர்வரு மபுஜகல் சீவ னைங்கிட
வவனுடல் றசைநரி நாய ருந்திட வொருகோடி
யலைகைகொ டிகழுகு சேண முண்டிட
வமர்பொரு மதகரி போலுமொண்டிமி
லரியென வருநபி மார்க டம்பதி யிறசூலே (கஙகூ)

தாந்த தனதன தாந்த தனதன
தாந்த தனதன தாந்த தனதன
தான தனதந் தான தனன
தான தனதந் தான தனன
தனதன தனதன தனதன தனதன—தனதான.

காம்பொ டுசலிடு மோம்ப ரிலகிப
காந்தி தருமிருள் கூந்தல் முகில்சுமை
காற ருடன்சிங் கார ருடனே
காலி ஞெலியுங் கோலமிகல
கரவளை கலகலெ னநடமி டுபவனி யரமாதர்

பாம்பி னுடபட வேண்டி மயல்கொடு
பாய்ந்து வடிதனில் வீழ்ந்து மனமெழு
பார முலைநெஞ் சார கனிவாய்
பாகி னமுதுண் டாகமகிழப்
பரவச முடனனு தினமிது தொழிலென வுழல்வேனே

தேம்பல் கனிசொரி பூம்பொ ழிலழகு
சேந்த மகினமின் வேந்தர் நலனொடு
சேர வருள்கண் பாரு மினிய
தீரு மறிவுந் திரு மொழித
சிரசறு சடிபடி முடிதொட திடமுடன் வருவோரே

யாம்ப லணிதறை பாம்ப ரியலவே
தாம்ப ருள்பய காம்ப ரியன்மறை
யால்பிகொந்தாலநயினு ராசில்மாபில்காசிமெனேயும்
மருளக மகிழகு மதுமுகம் மதுநபி யிறசூலே (௧௪௦)

தனன தன தான தான தான
தனன தன தான தான தான
தனன தன தான தான தான—தனதான.

அறபுவள நாடு கோடி கோடி
புடைகொணகர் காகி றூரில் வாழு
மதிபதிச லாகு தி னு தார மகவானோர்
அலகில்பதி னூலு ஞான வாரி
நுகருமிபு ருகி மான மேக
மருள்செயினு லாபி தீன னோர்நல் கியஆலிம்
மறையின்வல காலி நாறு தீன்மொய்
குலதிலக னான பேரன் யானு
மரபினுமர் பேர்கொள் காசி மாசில் புகழ்பாடு
மதுரகவி ராஜ னுக லாலெ
னிருமரபு ளோர்செப் பாவநூறி
மரகதவி மான வீடு சேர வருள்வாயே
யிறுதியிடை யாதி யாவ ராலு
மளவிடவொ ணாத வேக னுய
னிசையுமொலி யாய்வி ளோர்கள் ஷாகி தெனவோதி
யிறையறுசி லேக லால்பெ ணுக
செயினபெனு மாதை யாதி காவி
னெழுதியொகி யேவ வீடு கூடு மகுமூதே
முறுசல்நபி மார்க ளார்வ மோடு
பரவரிய ஞான பாகை தேரு
முகிறவழு மேடை மாட கூட மதினாவில்
முதலபுது லாகு மார தீர
வுபையமெழு ஞால வால சூர்ய
முகம்ம துற்ற சூலுல் லாவற் றகீ மிறசூலே. (கசக)

முற்றிற்று.

பிஸ்மில்லாஹி.

இ ஃ து

காயற்பட்டணம் வித்வசிரோமணி

ஷெய்கப்துல் காதிறு நயினார் லெப்பை

யாலிம்புலவர் நாயகமவர்கள்

முகியித்தீனாண்டகைபேரில் பாடியது.

ஆதியரு ளோங்கு மண்ணல்நபி பேரரெனப்
பூதலங்க ளெல்லாம் புகழுவரும் புண்ணியமே
மாதவங்கள் செய்யு மகத்துவர்கள் கண்மணியாய்க்
காதகல வந்துதித்த கவுதுமுகி யித்தீனே. (க)

உள்ள மிகக்கலங்கி யுண்ணு துணர்வழிந்து
தள்ளுந் துயரரும்பத் தாங்கா துழல்வதுவோ
கொள்ளைகொள்ளும்வெம்பூதக்கொடுமையொடுவஞ்சகமுங்
கள்ளமெல் லாம்போக்குங் கவுதுமுகி யித்தீனே. (உ)

ஊக்க மிகத்தளர்ந்தே யோயாது பாழ்ங்கவலை
யேக்கமது கொண்டடியா ரேங்கித் தயங்குவரோ
தேக்குமுயர் மெய்ஞ்ஞானச் செழுஞ்சுடரா யிவ்வுலகங்
காக்குகற்கு வந்துதித்த கவுதுமுகி யித்தீனே. (ங)

நெஞ்ச மிகக்கலங்கி நினைவழிந்து நம்மடியார்
தஞ்சமொன்றுங்காணரிதாய்த் தவக்கங்கொண்டுநிற்பாரோ
மஞ்சுதவழ் பூஞ்சோலை பகுதாது நாயகமே
கஞ்சமலர்த் தாளருளும் கவுதுமுகி யித்தீனே. (ச)

சிந்தித்துஞ் சிந்தை செயலழிந்து நம்பாதம்
வந்தித்து முள்ள மறுகிக் கலங்குவதோ
சந்தத்துத் திண்டோட் டராதிபரே நம்மையெல்லாங்
கந்தித்த நாயகமே கவுதுமுகி யித்தீனே. (ரு)

வெம்பித்த வஞ்சனையின் வெங்கடியா னுள்ளமெல்லாஞ்
சம்பித்த வக்கங்கொண்டு தத்தளித்து வாடுவதோ
தம்பத்தின் வந்துதித்த தாபரமே பன்மையெல்லாங்
கம்பித்து நின்றவெங்கள் கவுதுமுகி யித்தீனே. (௬)

வாட்டம் படமனமும் வன்மைபட வுள்ளமெல்லாங்
கோட்டம் படவடியார் கொண்டதுய ராற்றுவரோ
நாட்டம் படமகிழ்ச்சி நல்லுடல் வளம்பெறவே
காட்டும் பதிநிதியே கவுதுமுகி யித்தீனே. (௭)

நீரா ருலவித்தோட நெஞ்சகத்துங் கண்ணிடத்துங்
கோராற்றி னெலெளியோர் கொள்ளுந்துயர் போக்குமையா
பாராருங் கீர்த்திப் பதிஜயிலான் மன்னவரே
காராரு நன்கருணை கவுதுமுகி யித்தீனே. (௮)

மைந்தரொடு மெந்தையுரு மக்களொடு சுற்றங்களுந்
தந்தமன மேவெறுக்குந் தற்காலம் போக்குமையா
சிந்தைவள ரானந்த ஜெயிலானி நன்னகரா
கந்தமலர்த் தாளருளுங் கவுதுமுகி யித்தீனே. (௯)

கோப்புடைய வெங்கடியின் கோட்டியணு வும்மணுகா
நீப்புடையா ரும்மையல்லால் நீணிலத்தில் வேறிலையே
எப்புடைய பூதமெல்லா மெப்புறத்து நாடாது
காப்புடைய வல்லவரே கவுதுமுகி யித்தீனே. (௧௦)

ஓராயி ரத்தினுங்க ளுயர்நாம மேயுரைத்தாற்
றீராத வன்மையெல்லாந் தீர்த்துமுன்ன மெய்துவனென்
றூரா ரமிர்தமொழி யப்படியா மிப்படியேன்
காரார் தவப்பேறே கவுதுமுகி யித்தீனே. (௧௧)

முற்றிற்று.

பிஸ்மில்லாஹி.

இஃது

ஷெ புலவர்க ணாயகமவர்கள்

நாகூர் நாயகத்தின்பேரில் பாடிய

நாகையந்தாதி.

காப்பு.

மணியொளிபோலு மலர்மணம்போலு மருவியுயிர்க்
கணியொளிபோன்ற வுண்மைப்பொருளே யகமுஞ்சுகமுங்
கணியொளிர்மேதையுந்தந்தருள்வாய் அப்துல்காதிர்புகழ்ப்
பணியொளியாகிதி நாகையந்தாதி படிப்பவர்க்கே.

நூல்.

முதனபித்தூரிய முறையோடு புணர்ந்தி நுதலியபொருளை
நுவன்றுகேட்டது.

மாதவக் காரண வாரணத் தார்மகு மூதளித்த
மாதவர்க் காருயி ராருயர் தோன்றன் மரபுடையீர்
மாதவக் காக்கைய ளேங்க்கறை போக்குக வண்சிறகின்
மாதவக் கான்மலர்த் தேன்றட நாகை மகிபதியே. (௧)

ஒருநாளெறிக்துழரியமுறைபுணர்ந்துங்
குருவேயென்றென்துறையிரந்துயர்த்தது.

பதியே மநனி மருநபி மாதுலர் பண்பறிவுட்
பதியே மநனி மருகரிக் நால்வர் பகர்நெறிதீப்
பதியே மநனி மருவாதி யார்க்கும் பயிற்றுமுயர்
பதியே மனகி மிரும்பொரு ணைகைப் பதிக்கரசே. (௨)

தற்பதிதறித்துத்தகைமையுந்தீறித்துப்
பொற்பதமாட்சிப்பொருளாவியந்தது.

பதிக்குமணிமுடிமீதேசிறக்கும்பருமணிப்பேர்
பதிக்குமணிமுடிமாதனவில்லைநும்பாதமலர்ப்
பதிக்குமணிமுடியாளருக்கேபடர்பாயிருட்சீப்
பதிக்குமணிமுடிநாற்றெங்குநாகையம்பார்த்திவரே. (௩)

அண்ணலநுகநுணையம்பகநோக்க
மெண்ணியபொருளொடுமியலுமென்றது.

பார்த்திட்டமாயையொழிந்தோரொடுபஃறிக்கிணைக்கற்
பார்த்திட்டமாகநடத்திவித்தோப்பலகாலிறையைப்
பார்த்திட்டமாதவநாகைமன்னுவிந்தப்பாவிமுகம்
பார்த்திட்டமாகப்புரப்பீரிதுசவுபாக்கியமே. (௪)

பெருந்தகைநாகைப்பிரபந்தியர்நண்பா
அருந்துயர்களையுமருடருகென்றது.

பாக்கலையாவுமுணர்ந்தோய்கமுகின்பழக்குலையின்
பாக்கலையாமுத்துதிர்பொழினாகைப்பதிவளரன்
பாக்கலையாமதியேகுருவேபிரபந்தியர்நண்
பாக்கலையாவருளீகவென்னேய்த்துயர்பற்றறவே. (௫)

நயம்பெறமுன்னர் நவந்தருந்தம்பலம்
பயம்பெறவின்னும் பருத்திரேன்றது.

பற்றும்பலருமிருந்தாவதென்னைப்பகைப்பிணியால்
பற்றும்பலம்புந்துரவாயவுள்ளம்பயன்பெறநும்
பற்றும்பலமின்னுந்தந்தருள்வீர்பதுமத்துறைதேன்
பற்றும்பலங்கமழ்நீராடைநாகைப்பதிக்கிறையே. (௬)

உயிரினைக்காத்தமோள்ளியகிருபையேன்
றுயரினுக்கமிர்தந்துய்ப்பியேன்றது.

இறைக்குங்குலிகவிரற்பதுமக்கையிளம்பிடிதான்
இறைக்குமுயிர்க்கும்பொருந்தியம்மண்ணையைவிடமித்தீர்
இறைக்குநபிக்குமறைக்குமினியவவென்பிணிக்கும்
இறைக்குங்கிருபையளித்திருன்ஞைகயிராசதரே. (எ)

மறைபடுபோருளைவேளிப்படுத்தண்ணல்பாற்
றுறைபடுத்துள்ளங் கூம்பலேன்னேன்றது.

இராசித்தரும்பொருள்வல்லவன்பாற்பெற்றவெம்மிறைசொல்
இராசித்தரும்பொருள்போனின்றவாகிஸ்தியேங்கியந்த
இராசித்தரும்பதம்போற்றச்செய்தீர்பையலித்துயரால்
இராசித்தரும்புவதோவுளநாகையிருப்பவரே. (அ)

விருப்பநும்புகழ் வியந்தேழுகடற்கப்பா லிருப்பினுமாணை
யேளிதல்லவேன்றது.

இருப்புக்கடலகநாகைமன்னுநும்மிசையெனினும்
இருப்புக்கடலையென்னுமெழுகேனுமின்பம்பெறுங்காண்
இருப்புக்கடற்சுதைநெய்தேன்நன்னீரிக்குச்சாறுடுத
யிருப்புக்கடலிடமேனுநும்மாணையெளிதல்லவே. (௯)

அணிமுகக்காட்சியருளுகவேன்றது.

அல்லலரிந்தழகேல்கமலர்நும்மடியவன்மெய்
அல்லலரிந்ததிருமுகக்காட்சியருளிரைம்பால்
அல்லலரிந்தமடவார்மயக்கமகற்றுளமெய்
அல்லலரிந்தளமேந்தியநாகையருந்தவமே. (௧௦)

பிணிதுயரோழிக பெருமனமேன்றது.

அருந்தவருந்தத்தெவுட்டாவமுதமறிவுஈரும்
அருந்தவருந்தசைசிந்தாமணியளவின்றியகை

அருந்தவருந்தருநன்மனமேயொழியாகுல்மெய்
அருந்தவருந்தலிலாதுயர்நாகையகப்பொருளே. (கக)

வன்புடைநஞ்சம் வைத்தவற்காக்கினை துன்பக்காப்பினைத்
தோலைத்திடுகென்றது.

அகத்தடைபட்டுலகாசையிற்பெற்றவருந்துயரின்
அகத்தடைபட்டுழல்வேனுக்கிரங்கியருளிர்மன்னன்
அகத்தடைபட்டநஞ்சிட்டவற்காக்கினையாலணிசொல்
அகத்தடைபட்டதுயர்கீர்த்திநாகையரிக்குன்றமே. (கஉ)

நீடியநாகையினிறையின்றகையுட்
லாடியதானந்தமல்லவோ வென்றது.

அரிக்குமரிக்குழலாலுலகேழுமமையுமிருள்
அரிக்குமரிக்குலங்காட்டியபமேன்மையறிவரெவர்
அரிக்குமரிக்குமரிக்குமுயரொளியங்கமன்றே
அரிக்குமரிக்குணநாகையிலாடியதானந்தமே. (கங)

இரக்கம்வைப்பிரோன்றெதீர் துறையிரந்தது.

ஆநந்தமாறுபட்டார்முனங்கோற்கொண்டடித்தெழுப்பி
ஆநந்தமாட்டிலளித்தீர்விண்போலுமலர்ந்தபண்ணை
ஆநந்தமாமணியாற்றிருநாகையரசவைத்திர்
ஆநந்தமாதவமேயடியேன்பிணியாசறவே. (கச)

வரத்தோர்க்கென்சொல் வெறியதென்றிரங்கல்.

ஆசினிமைத்தமினொத்தவிவ்வாழ்வென்றறிந்தகற்றி
ஆசினிமைத்தவம்பூண்டதன்றேமனமாம்பிரால்
ஆசினிமைத்தண்டலைத்திருநாகையர்க்காயதென்சொல்
ஆசினிமைத்தடங்கண்ணியர்க்காட்படற்கையமின்றே.

ஒல்கையினடங்கியோர்விடுத்திந்
நாகையிலுதயநயந்தனரென்றது.

ஐயம்படுங்கசங்குன்மம்பன்மூலமகற்றிமெய்யில்
ஐயம்புடுங்கசம்போல்வலியிந்தப்பதிமுழுதும்
ஐயம்படுங்கசம்போம்படிசெய்தங்கமைந்துபுலன்
ஐயம்படுங்கசங்காட்டினர்நாகையிலற்புதமே. (கசு)

பாதுகமின்னும் பயனுளவென்றது.

அற்புதனன்றிட்டகொட்டையிற்பாதுகமம்புயத்தாள்
அற்புதநன்றிட்டமாகத்தொட்டேரிதேர்கரியாள்
அற்புதனன்றிட்டநாகையுமெண்மையவரிடத்தும்
அற்புதனன்றிட்டவுள்ளத்துமென்றுமலர்ந்தனவே. (கஎ)

சீதலராயத்துட்சிறந்தனவென்றது.

அலர்வனமாமையுருவினர்சீர்த்தியணிகவியின்
அலர்வனமாலைபுனைதலினற்பலவாயத்தின்வாய்
அலர்வனமாயவிரத்தவெவ்வாறினியம்புயமொய்
அலர்வனமாநிழனாகையர்கோன்செய்தவாக்கமிதே. (கஅ)

என்துறையுணரா திருந்திரேலதுநுந்
நன்துறைபெருமை யினயமெனக்குறித்தது.

ஆக்கத்தரும்பிகற்பார்ப்பினிகொங்கையழித்துப்பின்னர்
ஆக்கத்தரும்பெருஞ்செல்வம்பெற்றீர்முறையாற்றுமென்
ஆக்கத்தரும்பயன்காணலையேலதுநும்பெருமை [சொல்
ஆக்கத்தரும்பியசீர்நாகைவாழரிச்சந்தனமே. (கக)

துன்பவினையிற் சுழல்வனேவென்றது.

சந்தனம்போனடையாரிடமேவிட்டுத்தீயல்வருஞ்
சந்தனம்போடக்கண்டார்கொடியன்னதயங்குவனே

சந்தனம்போதகிற்குங்குமஞ்சண்பகந்தாங்தவழ்வ
சந்தனம்போர்த்தமணிமாடநாகைதற்காவலரே. (௨௦)

இன்பநுகர்காட்சியிதயநயந்தது.

தற்காவலரரிநாகையர்கோன்மறைதங்திடுமோ
தற்காவலரசினுக்காதிறத்தகைக்காவரமீ
தற்காவலரகலக்காட்சியாக்கொளத்தன்மையகா
தற்காவலரணிநுண்டேனுகரளிதாமெனவே. (௨௧)

வண்டுதூதாக வருந்திக்கேட்டது.

தாமதியாகமுடையார்தென்னாகையர்தம்மிடம்போய்
தாமதியாகருணைப்பெறவெந்துயர்சாற்றிப்பொற்றேள்
தாமதியாகமின்னேவாங்கிவம்மின்கள்சார்பிரபங்
தாமதியாகப்பிணிநீங்கெனச்சஞ்சரீகங்களே. (௨௨)

வண்பதமாட்சிவழங்கிற்றென்றது.

சரிகங்கணங்குலமுன்கைமின்னார்குடைதண்புனலாற்
சரிகங்கணங்குடைவால்வளைமுத்துஞ்சரோருகமுஞ்
சரிகங்கணங்குளிரிங்திற்குங்நாகையர்தாட்டிறமஞ்
சரிகங்கணங்குயர்வேல்வலனுக்கிறைதந்ததுவே. (௨௩)

சொல்லின்கரியேதோற்றிற்றென்றது.

தந்தக்கரியரரியர்பொற்றேரினர்தம்படைக
தந்தக்கரியரமர்புரிந்தார்தவநாகையர்சொல்
தந்தக்கரியரவராதலான்மற்றுஞ்சட்சமையர்
தந்தக்கரியரடரிகலாலுட்டகர்ந்தனரே. (௨௪)

மல்லற்கரமேமகிமையதேன்றது.

தகரந்தகரந்தகரவிளாகையர்தண்கனிவைத்
தகரந்தகரந்தகரவயின்றதுஞ்சண்டகர்பா

தகரந்தகரந்தகரவநீப்பதுஞ்சார்கவிர்சொல்
தகரந்தகரந்தகரமென்றுன்பத்தைத்தட்டுவதே. (உரு)

ஆக்கத்திருப்பதத்தாண்டகையென்னின்
நீக்கடைக் குணமெலாம் போக்குதி ரென்றது.

தட்டுக்கடைவடிவேலினர்நீதியர்தாபதர்பொன்
தட்டுக்கடைவுபகாரிகடாழ்பதந்தந்தெனின்சி
தட்டுக்கடைகுணம்போக்குகமேதித்தடங்கஞ்சங்கு
தட்டுக்கடைவழிதேன்சிந்துநாகைத்தங்குந்துரையே. (உசு)

செல்வர்வேந்தர்சீர்பலதாங்கிப்
பல்காலுயர்நெறிபார்த்திவவென்றது.

தங்கத்தனத்துடைமன்னவராக்கந்தணியநுங்நீ
தங்கத்தனத்தனென்றேத்தவளர்ந்ததுதையலர்மா
தங்கத்தனத்தையரும்பம்புயமெனத்தண்டுகிர்பா
தங்கத்தனத்தடஞ்சூழ்திருநாகைத்தராதிபரே. (உஎ)

சிற்றினவினையதுசேறியழலகற்றிநும்
பொற்பதப்பந்தர்பூநிழற்றநுகென்றது.

தராதரங்கண்டறியாரிடஞ்சார்வதுஞ்சார்ந்தவர்க்கே
தராதரங்கண்டவர்தம்முறவோட்டிநுந்தாண்மலர்ப்பந்
தராதரந்தந்தெனைரட்சிக்கவேண்டுமற்றன்புயப்பூ
தராதரங்கத்தின்மூத்தார்வாவிநாகைத்தலத்தரசே. (உஅ)

புதுமையிற்புதுமைபுணர்பிணிக்கோம்பருந்
துதிதாற்பாதத்தொடரியல்பென்றது.

தலக்கொப்பரும்புங்கனிகுற்றிதந்ததுஞ்சார்ந்தவன்பார்த்
தலக்கொப்பரும்புதைதன்னிற்புதுமைசலநிதிசூழ்
தலக்கொப்பரும்புமின்சுட்டியிஞைகைத்தயாளஎன்னே
தலக்கொப்பரும்புகழ்தாங்கனும்பாதத்தகுதியதே. (உகூ)

பொய்யொழுக்ககற்றிப்பொங்கறிவ்வையு
மெய்பெறவருள்வதும்மேம்புகழென்றது.

தகுதிப்பதுங்கவிழிவோங்கமேன்மைதயங்கவெண்ணேங்
தகுதிப்பதுங்கம்படிற்றொழுக்கார்தொடர்சார்புவிட்டே
தகுதிப்பதுங்கதிநாகைமன்னுகல்விச்சாகரம
தகுதிப்பதுங்களங்கொள்வதுட்டும்புகழ்சாதிப்பரே. (௫௦)

பல்லைக்கழந்தம்பயில்வர்நண்பகற்றி
நல்லோக்கன்மேலோர் நட்பருள் கென்றது.

சாதிப்படித்தண்டலைத்திருநாகைத்தலைவதர்தஞ்
சாதிப்படித்தகைகொண்டகங்கொண்டசண்டாளர்நட்பைச்
சாதிப்படித்தகைதட்டின்றியுள்ளுணர்தன்னொடுபே
சாதிப்படித்தலத்துற்றுரினோடருள்சங்கதமே. (௫௧)

அஃறிணைச்சாதியோடறைதரவல்லரேன்
பதுமொழியுணராப்பான்மை யென்னென்றது.

சங்கந்தரமணிமுன்றிலினுகையர்தாருவண்ட
சங்கந்தரமணிப்புள்ளொடும்பேசுவர்சஞ்சலபா
சங்கந்தரமணியாவடியேனிதஞ்சாற்றுங்கல்விச்
சங்கந்தரமணிசொல்லுணராததெத்தந்திரமே. (௫௨)

இரக்துமெளியனையின்னழதருளிப்
புரந்தலைதருமப்பொருளிலொன்றென்றது.

தந்திரவாளணிதஞ்சையர்கோன்றருநாகைநகர்
தந்திரவாளலர்தீபம்வைத்தார்சதுவேதவியல்
தந்திரவாளப்பகலாளவோதுந்தண்வாயமுதந்
தந்திரவாளனையுய்வித்தலைதருமத்தகையே. (௫௩)

எங்தம்படர்ந்தவியற் சீருண்டேன்
பங்கம்பழிப்பாற் பயழமின் றென்றது.

மத்தகத்தாழிபடுதயிரொத்தமதிபுன்வினை
மத்தகத்தாசையுழன்றதனுன்மலிநாகையர்சீர்
மத்தகத்தானையரசர்முடியினுமாமறைநே
மத்தகத்திதாதிபர்சிந்தையிடத்துமலர்ந்தனவே. (கூச)

அவயவத்தியல்பினுக்கங்கூறி
யுவகை பூண்பாணுள்ளந்தேற்றியது.

மலரளித்தாரின்றுங்குஞ்சியார்புவிமன்பதைபான்
மலரளித்தாங்கருணைக்கண்ணினார்மையலற்றநிரு
மலரளித்தாளுந்திருநாகையார்மலிசீர்பதக்க
மலரளித்தானம்பரமேசொரியும்வண்மைக்கையரே. (கூரு)

சேறிபகைதநக்கஞ்சிறந்தோருளத்தையு
மறைதவத்தடைவேழடிப்பரேன் றுரைத்தது.

மைக்கைதவத்தடையாரையும்வேதம்வழிஇபொறிதீ
மைக்கைதவத்தடைசொல்லையுங்நாளுமனமதிநன்
மைக்கைதவத்தடையாளருளமுமன்னுகையிற்பன்
மைக்கைதவத்தடைவேமுடிக்கும்மலினம்படவே. (கூசா)

பற்பலபிணிக்கும் பலன்பெறுநாகை
யற்புதர்வாயுரை யணிமருந்தென்றது.

மலினத்திருகரம்வெண்மேனிசெவ்விதழ்மஞ்சண்முகம்
மலினத்திருகண்டமாலைசித்ராங்கம்வரட்சியிரு
மலினத்திருகசமற்றுளநோய்க்குமருந்துநற்செம்
மலினத்திருகதிநாகையர்வாய்மலர்மந்திரமே. (கூஎ)

பருவரலுற்றுப் பாங்கியொடுதலைவர்
தேரிகிலரென்னெனச்சேயிழைவினாயது.

மந்திரங்காணிறைநாகையின்வாழ்வுடைவள்ளற்பலர்
மந்திரங்காணினைவுள்ளங்கொள்ளார்மம்மராலணிவா
மந்திரங்காநிறைநாணழியாவில்லின்மாட்சிமைசு
மந்திரங்காநிற்பத்தாமதியாரென்மடக்கொடியே. (௩௮)

ஓகையறிவினோடுள்ளுணர்வருளும்
நாகையதிபதிநாமமேயென்றது.

மடக்கமடக்கவருமேசுகமுன்னவல்லுடலின்
மடக்கமடக்கவலைப்பிணிபோம்பற்றமற்றுமறி
மடக்கமடக்கவரிற்குணமாமதிமாறுடையார்
மடக்கமடக்கவலியாந்தென்னாகைமன்னாமத்தையே. (௩௯)

பொருணயமெல்லாம் பொலியுமென்கோமான்
கருணையங்கண்ணினாற் கணித்தவர்க்கென்றது.

மன்னாதனவம்பொருளிலைமேலுமகிமையுள்ளார்
மன்னாதனவண்ணிலையுமுண்டாமஞ்ஞைநாரையின்மேன்
மன்னாதரவந்தருபொழினாகையின்மாதவர்கண்
மன்னாதனவம்பெறுங்கருணைக்கண்மதித்தவர்க்கே. (௪0)

முறையிலரியல்பை முறைமையென்றுணரா
திறைமொழிபோற்று கவிதயமென்றது.

மதித்தகநீந்துவர்மெய்யுணரார்புவிமாலுறைதுன்
மதித்தகநீர்மையுடையார்கயவர்மடவியற்சம்
மதித்தகநீயுழலன்மினன்னாகைமகிபரின்சொன்
மதித்தகநீதியென்னோர்கமருண்டுமயங்கலையே. (௪௧)

நாகையர்புகழேழினுடேசவஃதே
யோகையின்மாக்கல முடம்பேயென்றது.

மயங்கலக்கப்பலவாக்கமுண்டாகமருட்படச்
மயங்கலக்கப்பலனின்றிமெய்யேபவவாருதியின்
மயங்கலக்கப்பலத்தண்பொழினாகையர்மாண்புகழின்
மயங்கலக்கப்பலருங்கரைசேர்க்குமலைவறவே. (சஉ)

உலகெலாநிலைக்துமொருழைபோன்று
நலனுறுநாமநாயக்ரென்றது.

மலைவாரணந்தினைசப்பாலகர்வானமதிகதிர
மலைவாரணந்திணையெங்குஞ்சிறந்தனவாரிசப்பொம்
மலைவாரணந்திரிதண்புனனாகையர்மாமதுர
மலைவாரணந்திகழ்வாயர்குத்துபெனும்வண்பட்டமே.

மாதர்மயக்க மறுத்தேயோருமை
நீதவழியினிறுத்துவரென்றது.

பட்டம்படாகம்புகழ்முடியார்பொற்பதியின்பசும்
பட்டம்படாகம்புனைந்தார்மரபினர்பங்கயத்துப்
பட்டம்படாகம்புள்ளூர்திருநாகையர்பாவையர்கண்
பட்டம்படாகம்புகாட்டுவரோர்மைப்பயனெறிக்கே. (சச)

மருவிழாப்புன்மைமாற்றிவிட்டுயர்த்துந்
திருவிழாநுந்தஞ்சீர்பதமென்றது.

பயனெறித்தீர்த்தறிநீங்கினும்பாதகப்பவ்வமது
பயனெறித்தீர்த்தகத்தாக்கினும்வாவிபன்மேதிமடிப்
பயனெறித்தீர்த்தவயனாகைவாழும்பதிநம்பதம்
பயனெறித்தீர்த்தமன்றேகடத்தேறற்பயப்பதுவே. (சரு)

அச்சவுள்ளத் தருந்துயர்நோய்க்கும்
பச்சைப்பொற்கழற் பசுமருந்தென்றது.

பயப்பங்கயுப்பல்வுந்தியுளாடப்பயிலுடலின்
பயப்பங்கயப்படவாடுவனேபிழைபல்பொறுக்கும்
பயப்பங்கயப்பலனற்கணநாகைப்பதிநுமது
பயப்பங்கயப்பதமேயென்றனேய்க்குப்பசுமருந்தே (சகூ)

உயிரினமோம்புமொள்ளியகருணையா
லயர்சுமையிறக்கி யாளுகவென்றது.

பசுமைப்படலமராவளிக்குந்தகைபாசமணி
பசுமைப்படலமராமரத்தெய்தச்செய்பன்னறவாற்
பசுமைப்படலமராம்பொழினாகைப்பதியயர்துன்
பசுமைப்படலமராக்கடத்தேற்றுமிப்பாவியையே. (சள)

மனக்கணின்கவலை மாற்றுநும்பொற்ற
ளெனக்கினிதருளி யிரட்சியென்றது.

பாவியப்பாகப்புனைந்தாலுநன்றும்பரிசுணர்ந்து
பாவியப்பாகனென்றேகொள்ளவேண்டும்படரளியன்
பாவியப்பாகருளின்பொழினாகையுபாதகவப்
பாவியப்பாகவலைச்சிந்துநுந்தம்பதமலரே. (சஅ)

மூரண்படுநெஞ்சினர் மூதுசினவெஞ்சினர்
சரண்படும்வென்றித் தார்புயரென்றது.

பதமலங்காரந்தருக்கமுள்ளார்படர்வெஞ்சினச்ச
பதமலங்காரந்தவன்றிறத்தார்வந்துபண்பணியுப்
பதமலங்காரந்த த்தொடர்ந்தேபுகழ்பாத்தநல்ல
பதமலங்காரந்தவழ்புயத்தார்பதிநாகையரே. (சகூ)

நாகையரின்ப நறைபலனளித்தும்
வாகையர் மூன்னும் வளந்தர நின்றது.

நாகையருந்தும்பியின்னறவாமழைநந்தனஞ்சூழ்
நாகையருந்தும்பிரபலத்தார்தந்தநற்சுவையின்
நாகையருந்தும்பிரசமன்றேசுகநல்கியதும்
நாகையருந்தும்பிமன்னருந்தேடநடஞ்செய்வதே. (ருo)

செல்வரும்புலவருந்திரமோலியரும்
நல்வகைழக்குநனிகழலென்றது.

செய்வனமாதவநாகையர் சீர்பதச்சேகரமே
செய்வனமாதவநாகையர் சீர்பதச்சேகரமே
செய்வனமாதவநாகையர் சீர்பதச்சேகரமே
செய்வனமாதவநாகையர் சீர்பதச்சேகரமே. (ருக)

கண்டபொழுதே கதிதருமுகத்தை
யுண்டேன்கிளவியாலுவமித்துரைத்தது.

சேகரந்தாங்கிளர்பங்கயமன்றுசெல்லிற்கதிரின்
சேகரந்தாங்கிருள்மையகனன்றுசெறிகழைக்குட்
சேகரந்தாங்கியஞைகையர்கோனருட்சிந்திக்குநெஞ்
சேகரந்தாங்கியருட்செயுமெய்மைத்திருமுகமே. (ருஉ)

புட்பானீதம்பொருந்தினீரெளியேன்
கட்பாலருட்கண்கணித்தீரென்றது.

திருமுகமின்னதெனவுணர்ந்தேபுட்கடிங்களின்க
திருமுகமின்னருட்பெற்றவன்றேதிசைசெல்புகழ்மு
திருமுகமின்னணிநாகைமன்னுசிற்றடியவன்பால்
திருமுகமின்னலங்கண்ணுற்கணித்திரித்தீவினைக்கே. (ருங)

நந்நபிமரபினவுமணியறிஞர்
தந்நனியுள்ளத்தவமணியென்றது.

தீவினையாவழிகாட்டச்சென்றோர்க்குறுசெய்யிதுநந்
தீவினையாவனவெல்லாமொரீஇயசெம்மன்மரபா.
தீவினையாவகைகாத்தவநாகையசீர்மறையின்
தீவினையாவலினோர்பவருள்ளச்சிந்தாமணியே. (ருச)

நாட்டணிகூறிநாகையவின்பம்
பூட்டியவிழியநட்புகற்றநுகென்றது.

சிந்தாமணிநிழனீர்நிலையாம்பற்செந்தாமரைத்தேன்
சிந்தாமணிநிழற்சஞ்சலவோசையிற்றேங்கியுள்ளொ
சிந்தாமணிநிழற்றுஞ்சுநன்னாகையசெங்கணிற்பொ
சிந்தாமணிநிழலென்பிணிதீர்தற்குச்செய்திமன்னே. (ருரு)

உட்பகைபுறப்பகையோக்கமுடித்தே
கோட்புறு திருநெறிகொண்டபொருளென்றது.

செய்தித்தவப்படையாக்கத்தினாற்றிரைவாங்கிக்கரை
செய்தித்தவப்படையாவுலகுண்மலந்தீவினைக்கை
செய்தித்தவப்படையானையும்வென்றுதிருவநெறிச்
செய்தித்தவப்படையாளணிநாகைத்தெளிப்பொருளே ()

நிலைத்தவேன்னறிவு நீரேயாகி
லுலைத்தலிற்சுகமேயுடற்கோங்குமென்றது.

தெளிக்கப்பகலவனைத்தேயறிவிற்சிறந்துபன்மைத்
தெளிக்கப்பகலவருபொருளேமழைச்சீதஞ்சந்தந்
தெளிக்கப்பகலருநாகையினும்புகழ்சேர்முரசந்
தெளிக்கப்பகலவிர்வாகையராகஞ்செழித்திடுமே. (ருஎ)

ஒன்றியபோதியத்துயர்தமிழதனிற்
றென்றற்றூதினைச்சிறப்பக்கூறியது.

செழியனகமலையாயதென்றூல்வருசெந்தமிழுஞ்
செழியநகமலையாச்சுடர்கீர்த்திச்சிறந்தமையாற்
செழியனகமலையார்பொழினுகையர்தேகமெல்லாஞ்
செழியநகமலையாப்புளகத்தொடுசெப்புமின்னே. (௫௮)

நவநிலையமைந்த நாகையின்வள்ள
லவயவத்தன்மையினுக்கங்கூறியது.

செப்பங்களவரும்பாவச்செய்நாகையர்செங்கழலாற்
செப்பங்களவரும்பாலைகடேன்சிந்துந்தீஞ்சொலினாற்
செப்பங்களவரும்பாமயமாமுளஞ்செவ்வியினாற்
செப்பங்களவரும்பாமுலைமாதர்திகைப்பதுவே. (௫௯)

வேந்தர்கடொண்டினும் விழுமியதுயர்தீர்
மாந்தர்கள்வாழ்த்தும் வாயுரையென்றது.

திகைப்பலகோடியடர்புகழ்நாகையசெங்கதிரே
திகைப்பலகோடியரசர்கடொண்டினுஞ்சீரிதம்நீ
திகைப்பலகோடியசிந்தையர்துன்பஞ்சிதறியுடல்
திகைப்பலகோடியபோதவர்வாழ்த்துந்திருப்புகழே. (௬௦)

சேயகமேன்மைச்சிறப்பினுலக
நாயகன்கையினதுநலநயமுரைத்தது.

திருப்புக்கதிவனநாகையர்கோன்மனைச்சென்றொலிய
திருப்புக்கதிவனவர்ரியினேகரைசேர்ந்தவங்கந்
திருப்புக்கதிவனசம்பொருங்கைத்திரிதோசமுங்கூ
திருப்புக்கதிவநகாவிற்பவங்கந்தெளிதருமே. (௬௧)

என்றுணமறியாதென்னெனக்கிளவி
தன்றுணப்பாங்கியோடுதான்வினாயது.

தருமேனிவந்தமலராற்புயலுந்தடமணப்பங்
தருமேனிவந்தகவினாற்றென்னாகைத்தலைமையற்பு
தருமேனிவந்தமளித்துளம்வாடத்தமக்குரிமை
தருமேனிவந்தபசலையுங்காண்கிலர்தார்குழலே. (சுஉ)

பூரணப்பொருளிற்புகழொடுதோன்றுங்
காரணப்பெயரின்கருத்தறிவித்தது.

தாராதரமதிகந்தரப்பானுதரத்தரத்தண்
தாராதரமதிகாலும்பரிம்பர்தரப்புகழ்சீர்
தாராதரமதிகவுதென்னநாகையர்தாங்கறுன்பங்
தாராதரமதிகாரமென்போறத்தளிப்பவர்க்கே. (சுங)

ஊர்வளங்கூறியுயர்போதகஞ்சே
ரேர்களிறேத்தியென்றுகைதொழுதது.

தத்தளிக்குஞ்சரத்தாவிசைக்கும்பம்மித்தண்டுளிசிந்
தத்தளிக்குஞ்சரற்றாநிற்பவோதிமந்தாலொலிபோ
தத்தளிக்குஞ்சரத்தாமரைப்பொய்கைத்தண்ணாகையமோ
தத்தளிக்குஞ்சரத்தாயாதிகன்றொத்ததன்மையற்கே. (சுச)

ஒண்டொடிவாட்டமுணர்ந்துசெவிலி
கண்டதோழியோடுகையறைகூறியது.

தன்மயநாட்டம்பதிநாகையண்ணறம்பால்வைத்தகா
தன்மயனாட்டமதனமுஞ்சோகஞ்சந்தாபமயர்
தன்மயனாட்டந்துயிலாமையாவுந்தரமகளின்
தன்மயநாட்டங்கலார்க்கென்னையாங்கொறடங்கண்ணியே.

அண்ணற்பெரும்பதியணிகோண்மனுற
வண்மையின்றன்மைமதித்துரைத்தது.

கண்ணிக்கொடியமுத்தம்மானையாடுங்கருங்குழற்பூங்
கன்னிக்கொடியனமின்னார்நன்னாகைத்தங்கக்கலசங்
கண்ணிக்கொடியமனுருவுதையத்தைக்கண்டவர்தங்
கண்ணிக்கொடியதுயர்நோய்கள்போமொருகாதமட்டே. ()

அணிகதியுதவுமரியகற்பகமே
கணிகையிற்படா அகாத்தியென்றது.

காதமட்டாயுதம்போல்வெட்டிநஞ்சங்கலந்தடர்ந்து
காதமட்டாயுகளத்திருக்காலுளங்கைக்கொள்வர்க்கா
காதமட்டாயுமறிவோடுகாத்திகனிபொழில
காதமட்டாயுகளுந்திருநாகையங்கற்பகமே. (கூஎ)

கற்புடைநாயகிக்கண்மணிப்ப்ர
கற்பமளித்தேனைக்காத்தியென்றது.

கற்பகத்தாவிசைவாளியினீரருள்காவலர்சேய்
கற்பகத்தாவிசைநாயகிபேரகம்பார்ப்பபல்வி
கற்பகத்தாவிசைத்தண்வயனுகையகாய்பிணிதீர்
கற்பகத்தாவிசையம்பெறவேழையைக்காத்திமன்னே. ()

வசந்தகாலத்தும் வளந்திகழஃறிணை
யிசைந்தேத்துவநும் மிசையேயென்றது.

காத்திகைத்தேதத்தத்தைகொக்கொக்கக்கதத்தக்கொத்
காத்திகைத்தேதுத்தகத்திதக்கீதத்தகத்துக்கொத்துக் [திக்
காத்திகைத்தேதொத்தித்தாதுகத்தித்திதகாதக்தைத்தேக்
காத்திகைத்தேதத்தித்தாதத்தநாகைக்கத்தாத்துதியே. ()

பல்வளநாடணிபதிநாகூர
கல்வியினநட்கடைகண்ணித்தியென்றது.

கத்தாதவநகைப்பாலருந்தேனுங்கனிகடுன்ன
கத்தாதவன்கைப்பாலணுகாக்கட நாகையமோ
கத்தாதவனகைப்பாலலேவேனைக்கருத்தன்சமு
கத்தாதவனகைப்பாலவிரட்சிசடைக்கணித்தே. (எ0)

பம்மியவெறுண்மைபவப்பிணியிவற்றின்
வெம்மையகற்றும்விழைபுயலென்றது.

கணித்திலகம்பாடுமெனக்களிப்பாலெலமைச்காய்ந்துபவங்
கணித்திலம்பாடுமடாநின்றவாற்கனசத்தின்மணி
கணித்திலம்பாடுமரகதநீலங்கதிர்செய்பல
கணித்திலம்பாடுமேலைபொருநாகைக்கரும்புயலே. (எக)

நாட்டணிகூறிநனிபுகழ்நலைமைச்
சூட்டணிதருவின்றேன்மையுரைத்தது.

கரும்புங்கமலமுந்தந்தமுத்தேழையர்கைநிறைக்குங்
கரும்புங்கமலமுந்தங்கண்ணுழத்தியர்கார்குழற்க
கரும்புங்கமலமுந்தம்பணைநாகையர்காசிகுலூர்
கரும்புங்கமலமுந்தல்லிகச்சூடினர்கைப்பிள்ளையே. (எஉ)

துயர்பலநீக்கித்தோல்லைவடிவி
னயனருள்சஞ்சீவிநாகைமதியென்றது.

கைப்பிள்ளையாகத்தரும்புனல்வைப்பிற்கவலையுந்தி
கைப்பிள்ளையாகத்தரும்பாதுவன்மைகனமெழின
கைப்பிள்ளையாகத்தரும்பஞ்சஞ்சீவிகருத்துணர்மி
கைப்பிள்ளையாகத்தரும்பணிநாகைக்கலாமதியே. (எங)

தீவினையிருளறச்செழுங்கதிர்விரிக்கும்
மாவினைவிளக்குமதியென்றுவமித்தது.

கலாமதிகாரம்பொருமைவிரோதங்களவுநயங்
கலாமதிகாரமையாவினையாவுங்கரந்திடப்பு
கலாமதிகாரமணிவிளக்காங்கலைக்கானமத
கலாமதிகாரம்பொழிலணிநாகைக்கதிக்கரசே, (எச)

கற்றேருளத்துங் காசினிநாகையு
முற்றேரறிவி னுயர்கடலென்றது.

கதிக்குந்திருவினையுள்ளாரெளியர்கலாரென்றசங்
கதிக்குந்திருவினையப்படிசெய்தவகாக்கும்பர
கதிக்குந்திருவினையோருணர்வாளர்கருத்துமுல
கதிக்குந்திருவினைநாகையுமோங்குங்கலைக்கடலே. (எரு)

இபுலிசவாப்பெண்ணிவ்வுலகிவற்றிற்
கபயநுந்தாளடைந்தேனென்றது.

கலைக்கவருந்தகைகேடனுமுள்ளக்கருத்தும்பொன்மே
கலைக்கவருந்தகைமாதரும்பூதவிகற்பத்தினி
கலைக்கவருந்தகையப்புகுந்தேன்கதிர்மாடநிறம்
கலைக்கவருந்தகைநாகைமன்னுநுந்தங்காலிடத்தே. (எசு)

எழிற்றுங்காவலிறைசொல்லுள்ளார்
கழிதரமொழியார்கனவினுமென்றது.

காலுமுளரியம்பார்புனல்விண்ணுங்கலப்புடறீக்
காலுமுளரியம்பாழ்ங்குழிசேர்கலர்காநறைவாய்க்
காலுமுளரியம்பார்வயனாகைக்கருத்தர்சொல்லைக்
காலுமுளரியம்பார்முறைபேதங்கனவினுமே. (எஎ)

இத்தகைச்சிறைநீத்தெளியனென்னுந்தா
ளுத்தமக்காப்பினுய்த்திரென்றது.

கனவிலங்காவலவாச்சிறைமேலெண்ணங்கண்டனைமிக்
கனவிலங்காவலங்கோட்டைத்துயரங்கடத்திநுந்தாட்
கனவிலங்காவலகத்தாக்கியாளிர்கனியும்புள்ளும்
கனவிலங்காவலங்கொட்டுந்தண்ணுகைக்கதிர்விளக்கே. ()

சித்தியிலாதவேன்சிந்தையிடத்தினும்
மித்திரன்போலருள்வித்திரென்றிரந்தது.

விளக்கந்தரத்தரத்தேருதுசிந்தைமிகவெருவி
விளக்கந்தரத்தரத்தோலுண்கனியின்வெறியமலர்
விளக்கந்தரத்தரத்தார்பொழினுகையவேண்டினனும்
விளக்கந்தரத்தரத்தாதவன்போலருள்வித்திடலே. (எகூ)

நாகைவிளங்கநண்ணினரின்பப்
பாகினிதருள்வான்பாடினனென்றது.

வித்தாரமானநிறைதேன்றவழ்ந்தபொன்மெய்வளைகு
வித்தாரமானமுடனூர்செய்நாகைவிளங்கவுற்ப
வித்தாரமானவருள்சுகமேதரவிச்சித்திர
வித்தாரமானகவிமாலைசூட்டினன்வேண்டிக்கொண்டே. ()

பசப்புறுகோலம்பார்த்திவாலேன்
றிசைத்தயர்கிற்பாளேந்திழையென்றது.

கொண்டற்களிக்குங்கடற்குமதிக்குங்குயிற்குமடர்
கொண்டற்களிக்குமலர்க்குமலர்குங்குழற்குந்திகை
கொண்டற்களிக்குமயர்வாள்பசலைக்குணம்பலவுங்
கொண்டற்களிக்குந்திருநாகையார்செய்தகோலமென்றே.

அறிவுள்ளங்கலந்துமந்தகர் தமக்கோர்
நெறிதருழற்றுக்கோனீர்மையிரென்றது.

கோலந்தகரங்கடுக்குங்கண்மாதர்கொங்காசலத்தின்
கோலந்தகரங்கலைக்கடற்பங்குற்றுக்கொளீவழிக்கிற்
சோலந்தகரங்கனையர்தயாளநற்குங்குமந்தக்
கோலந்தகரங்கமழ்பொழினாகையங்கோக்களிறே. (அஉ)

ஓங்தமேண்டிசைமாவூக்கியகோற்றவ
தாங்குநுங்கையாற்றமியனையென்றது.

கோக்குஞ்சரமணிப்பூண்டகையர்ட்குக்குழந்தையுமக்
கோக்குஞ்சரமணியாக்கையுமீந்துயர்கொற்றமெட்டுக்
கோக்குஞ்சரமணிநாகைமன்னுதுயர்கொண்டுழலிக்
கோக்குஞ்சரமணிக்கையாலெடுத்துக்கொளக்கடனே. ()

ஆக்கைக்கிழிதணமகற்றிநன்மையி
னாக்கம்புரியவுதவிசெய்கென்றது.

கடனிறைவேழந்தீருநிதிச்செல்வர்கடிகமழ்பூங்
கடனிறைவேழந்தடப்பொழினாகையகாத்தருளிர்
கடனிறைவேழந்தவழுடல்வாய்மைகமைதயைசீர்
கடனிறைவேழந்தருமங்கள்பூண்டுகளிப்புறவே. (அச)

அண்ணலணிகழலரவிந்தப்பூத்தற்றேன்
கண்ணுங்கருத்துங்கணியிடனென்றது.

களிப்புண்டரீகமலம்வரும்வேலர்கபறடிமான்
களிப்புண்டரீகமலர்புகழார்வழிகான்கெழுதீங்
களிப்புண்டரீகமலர்வனநாகையர்காலிணையாங்
களிப்புண்டரீகமலர்வதென்கண்ணுங்கருத்தினுமே. (அரு)

காரணர்மார்பார்கண்ணுக்குறுமேற்
சீரணம்பிணிபலசெல்லுமென்றது.

கருத்துவக்குங்கடியாம்வினையன்றுகனவெனவெக்
கருத்துவக்குங்கடியாகச்செய்தார்வழிகார்புகைய
கருத்துவக்குங்கடியார்மனைநாகையர்கண்ணுறிற்பு
கருத்துவக்குங்கடியாதனையுஞ்செல்லுங்கைகண்டதே. ()

பல்பிணிகண்டித்துப்பண்பினதாக்கை
நல்குதிர்கோடையினுயகவென்றது.

கண்டங்கந்தானவிடத்தும்ற்றுள்ளகடும்பிணியுங்
கண்டங்கந்தானவியல்போடருளிர்கபாடநிலைக்
கண்டங்கந்தானவிராலயநாகையிற்கற்றவர்சொற்
கண்டங்கந்தாநவியந்திகழ்சீர்புனைகாரணரே. (அஎ)

தூரிசின்மணத்தாற்துளிர்ந்துளம்விகாரப்
பொருள்பலவொழகிப்புகழுமென்றது.

காரணங்காட்டுக்குபிரர்பொற்றேர்செலக்கற்பித்துமுற்
காரணங்காட்டுக்குரிசினன்னுகைபர்கான்கலந்தாற்
காரணங்காட்டுக்குயிலுமளியுக்தென்காலுமன்றிக்
காரணங்காட்டுக்குணமுமனமுங்கைவாரத்தவே. (அஅ)

துயர்தருந்துன்பச்சூலையர்ஞாங்கர்
மயலணுகாதுமறுத்தியென்றுரைத்தது.

வாரத்தனமடவாவியபோன்றவரிவிழிபொன்
வாரத்தனமடவார்மயல்வேண்டுங்கொல்வூாண்மதியால்
வாரத்தனமடவாவியந்தண்வயன்மாமணியும்
வாரத்தனமடவாவருணைகவண்டார்வள்ளலே. (அகூ)

வெள்ளலமுதவசனத்துலகத்
துள்ளபொருடிருவோருங்கெய்துமென்றது.

வண்டாரமரத்தவம்பகத்தார்முகமானும்மேவள்ளை
வண்டாரமரத்தவம்புயநீர்மரவம்மகின்மொய்
வண்டாரமரத்தவம்பொழினாகையர்வாயமுதால்
வாண்டாரமரத்தவம்புவிச்செல்வமும்வாய்ப்பதுவே. (கூ0)

சில்வினைத்தொழிற்கட்சீத்தொருமைப்பா
னல்வினைத்தருமிறைநனிமொழியென்றது.

வாய்ப்புளகத்தர்கணிதர்சரத்தர்வலியுடற்பேய்
வாய்ப்புளகத்தர்கருமமகற்றிமறைப்பொருளின்
வாய்ப்புளகத்தர்கனங்குணந்தந்தவல்லவன்றன்
வாய்ப்புளகத்தர்கினாகையாரிசைவாக்கணியே. (கூக)

நன்னயநாகைநாயகருவகை
யின்னனபொருளினியல்பினதென்றது.

வாக்கணியாதவனுநிதியாமதியாம்புகழ்மூ
வாக்கணியாதவனுமமுதாமருந்தாமகிலு
வாக்கணியாதவநாகத்தின்வாசர்மனத்திலுன்ன
வாக்கணியாதவநாகையரோகைமகரந்தமே. (கூஉ)

அரும்பொருள்கண்டவாண்டகையடிமை
விரும்பத்துயர்தந்தவிழுமமென்னென்றது.

மகரந்தவாசங்கலைகடற்றீவந்துமானுறைவோர்
மகரந்தவாசங்கண்ம்பொருள்கண்டவர்வண்பொழிற்பூ
மகரந்தவாசங்கமழ்நாகையாரடிமைத்துயர்விம்
மகரந்தவாசங்கதங்கொளலாங்கொலிவ்வையகமே. (கூஙு)

ஏழைதுயர்தீர்ந்தேத்துதற்கென்றும்
வாழிநுஞ்சரண்வையகத்தென்றது.

வையம்படருந்திருக்கன்னை கெற்பத்துள்வாழ்பொழுதூர்
வையம்படருந்திருக்கணை வென்றவவாழிசரண்
வையம்படருந்திருக்கடர்நோயுமறுத்துயர்செவ்
வையம்படருந்திருக்கவுநாகைவந்திக்கவுமே. (௯௪)

இன்கனிந் தருள்கநும்மிரும்புயஞ்சிறக்தும்
போன்தங் தமந் தோடை புலவற்கென்றது.

வந்திக்களிக்குந்துணமகப்பெற்றெனவாழியநும்
வந்திக்களிக்குங்குமத்தொடையீதிர் வண்ணுகையின
வந்திக்களிக்குங்குலமன்னர் மூன்னுமருளுளத்தும்
வந்திக்களிக்குங்குளிர்மருந்தாற்றுமிவ்வல்லமைத்தே. ()

பிணியிருளகற்றிப்பிரகாசிக்த
மணிவிளக்காதிர்நும் மருங்கவிக்கென்றது.

வல்லமைகும்பவனமுலைமாதருமாற்றவினை
வல்லமைகும்பவனக்கோவைபாண்டிமன்மூலமெனும்
வல்லமைகும்பவனத்துழலாதுவழிவிளக்கின்
வல்லமைகும்பவனநாகையேத்திவருங்கவிக்கே. (௯௬)

நன்னபியருணெறிநடப்பவிவ்வுடற்த
மின்னருள்காட்சி யெழிலுண வென்றது.

கவிக்கனம்பாநிழலார்மறைநேர்வழிகான்மதுவிக்
கவிக்கநம்பானிழலானாட்டினுரக்களியியல்பா
க்விக்கனம்பாளிழலார்கனியாக்கைக்குங்காட்சியிந்தைக்
கவிக்கனம்பானிழலார்மதினுகைக்கல்வித்தருவே. (௯௭)

சல்லோடுபகர்ந்தகாரணக்தூரிசிற்சீர்
புல்லியநுங்கழற்புகலிடமென்றது.

கல்வித்தவாரணமாவலர்காணக்களியுரைபு
கல்வித்தவாரணமாவிழிநோயகல்வித்துடற்கி
கல்வித்தவாரணமாநிதியெற்குங்கமழ்கழற்பு
கல்வித்தவாரணமாநாகைசாகுல்கமீதொலியே. (௯௮)

நந்நபியாணைநாயகநுங்கையா
லென்முக நீவியிரட்சிப்பீரென்றது.

கமீதுவைபூம்பதமென்றுணர்தற்கருங்காரணர்ச
கமீதுவைபூம்பதத்தாணையென்னேய்த்துயர்கட்டறமு
கமீதுவைபூம்பதத்தண்கரமேநறைகான்மலர
கமீதுவைபூம்பதக்காநாகைவாழ்அப்துல்காதிருவே (௯௯)

மாண்டகைதாய் தந்தைமனைகிளைநண்பெல்லா
மாண்டகையானைநும் மடைக்கலமென்றது.

காதிருவேதவகைநுகரோர்நண்பர்காதலுண்ணீங்
காதிருவேதவவாய்தந்தைசுற்றங்கழலைவிட்டே
காதிருவேதவமிக்கடியேனுங்கடிகமழ்பூங்
காதிருவேதவநாகையவாணைநுங்கையடையே. (௧௦௦)

பொருத்துநுங்கருணைப்பொருளேயன்றி
மருத்துவமின்று மாதவமேயென்றது.

கையடையார்கரந்தண்ணமுதாக்கினிர்கான்மலர்வா
கையடையார்கரந்தாப்பொழிநுகையகற்றவராக்
கையடையார்கரந்தார்நும்மையன்றினிக்காமருந்தின்
கையடையார்கரந்தந்தருள்வாரெங்கண்மாதவமே, (௧௦௧)

நாகையந்தாதிமுற்றுப்பெற்றது.

நண்பீர்.

இஸ்லாம். மார்க்கத்தமிழ் நூல்களில் முதன்மையான விவ்வரிய திருப்புகழைப்பாடிய காயற்பட்டணம் வர கவிநாயகம். காசிம்புலவர் ஒலியுல்லா அவர்கள் ஹிஜ்ரி 1177ஹுல் துல்கஃதாமீ 12 தேதி வெள்ளிக்கிழமை யிரவு தேகவியோகமாகி குத்பா பெரியபள்ளி வாயலினடுக்க சமாதியமைந்து விளங்கின்றூர்கள் இன்னும் புத்தூஹுஷ் ஷாம் குத்புநாயகம் காரணப்புராணம் நாகையந்தாதி மக்காகலம்பகம் கோத்திரமாலை, சொற்கநீதி, முதலான பல முனாஜாத்துகள் சித்திரகவிகள் கீர்த்தனைகள் பாடியுள்ள காயற்பட்டணம் வித்வசிரோமணி செய்கப்துல் காதிறு நயினாரிலப்பை யாலிம் புலவர் நாயகம் அவர்கள் ஹிஜ்ரி 1268ஹுல் துல்கஃதாமீ 27 தேதி திங்கள்கிழமை தேகவியோகமாகி சென்னபட்டணம் இராயபுரம் குணங்குடி மஸ்தான்சாகிபு ஒலியுல்லா அவர்கள் சமாதிக் கடுத்தாண்மையாக வடங்கி விளங்கின்றூர்க ளின்னுதாக்கள் பாடிய பாக்களி லிலம்மா லியன்றவரை பிழையற வச்சிடப்பட்டிருக்கின்ற விப்பாக்களை வழங்கிவருவதினு லிகபரப்பிரயோசனம் கிடைக்குமென்பதிற் சந்தேகமில்லை.

ம. கு. செ.